28th MAY 2026

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 110 | பக்கங்கள் - 19 | editor.uthayam@gmail.com

## ஆபிரகாம் உடன்படிக்கையை நிராகரித்த பாகிஸ்தான் அரசு

இஸ்ரேலுடன் உறவை சீராக்கும் "ஆபிரகாம் உடன்படிக்கையில்" இணையுமாறு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் விடுத்த கோரிக்கையை பாகிஸ்தான் அரசு

02ம் பக்கம்பார்க்க...

# மின்சார விநியோகம், எரிபொருள் உட்பட 15 சேவைகள்

## அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம்

### வெளியாகியது விஷேட வர்த்தமானி!

15 சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக அறிவித்து சிறப்பு வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மின்சார விநியோகம், எரிபொருள், பெட்ரோலியப் பொருட்கள், எரிவாயு விநியோகம் அல்லது விநியோகம், மருத்துவமனைகள், மருந்தகங்கள், பயணிகள் அல்லது சரக்குப் போக்குவரத்து போன்றவை தொடர்பான அனைத்து சேவைகளையும் அத்தியாவசிய சேவைகளாக அறிவித்து சிறப்பு அரசிதழ் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

1979-ஆம் ஆண்டாவது, 61-ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2-ஆம் பிரிவின்படி, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு இணங்க, இந்த விசேஷட வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

டிட்வா புயலால் ஏற்பட்ட பேரிடருக்குப் பிந்தைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டும்,

02ம் பக்கம்பார்க்க...



## பழைய முறையில் மாகாண சபை தேர்தல்

### அரசியல் கட்சிகள் இணக்கம்!

மாகாண சபைத் தேர்தலை தற்காலிகமாக பழைய முறையில் நடத்துவதற்கு அரசியல் கட்சிகள் இணக்கம் வெளியிட்டுள்ளன.

மாகாண சபைத்

02ம் பக்கம்பார்க்க...

## அபிவிருத்தியடைந்த நாட்டைக் கட்டியெழுப்ப சகோதரத்துவத்துடன் முன்னோக்கிச் செல்வோம்

### பெருநாள் வாழ்த்தில் ஜனாதிபதி அழைப்பு!



உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்கள் மிகுந்த பக்தியுடன் ஹஜ் பெருநாளை இன்று கொண்டாடுகிறார்கள்.

முஸ்லிம்களின் நம்பிக்கையின்படி, அல்லாஹ் மீதான இப்ராஹிம் நபியின் பக்தியையும், இணையற்ற தியாகத்தையும் அடையாளப்படுத்தும் இந்த ஹஜ் கொண்டாட்டமானது, இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஐந்தாவது கடமையான புனித ஹஜ் யாத்திரையின் காரணமாக தனித்துவம் பெறுகின்றது.

நெருக்கடிக்கு மேல் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள இவ்வுலகில்,

02ம் பக்கம்பார்க்க...

## நமது நாட்டை பிளவுகளால் அன்றி ஒற்றுமையினாலேயே கட்டியெழுப்ப முடியும்

### – பெருநாள் வாழ்த்தில் சஜித் பிரேமதாச –



புனித ஹஜ் பெருநாளின் போது தேசம், நிறம், அந்தஸ்து போன்ற எந்தவொரு வேறுபாடும் இன்றி, ஒரே நோக்கத்துடன், ஒரே ஆடையை அணிந்து அதில் பங்கேற்பதன் மூலம் நமக்கு ஒரு ஆழமான வழிகாட்டல் வழங்கப்படுகிறது. அனைத்து மக்களின் இதயங்களிலும்

02ம் பக்கம்பார்க்க...

## இந்த ஆண்டு ஹஜ் கடமைக்காக 165 நாடுகளிலிருந்து 17 இலட்சம் ஹாஜிகள்

### 8,93,396 ஆண்கள்–8,13,905 பெண்கள்

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

ஹிஜ்ரி 1447 ஆம் ஆண்டில் அதாவது இவ்வருடம் ஆண்கள், பெண்கள் என சுமார் 1,707,301 ஹாஜிகள் சுமார் 165 நாடுகளில் இருந்து

03ம் பக்கம்பார்க்க...

## போதைச் சந்தேக நபருடன் எனக்கு சம்பந்தமில்லை

### தொலைபேசி உரையாடல் குற்றச்சாட்டையும் மறுக்கும் முஜிபுர் ரஹ்மான்!



விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள போதைப்பொருள் சந்தேகநபர் ஒருவருடன் தாம் பேசியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் மறுத்துள்ளார்.

போதைப்பொருள் குற்றச்சாட்டுகளின் கீழ் கைது

03ம் பக்கம்பார்க்க...

## ஆயிரக்கணக்கான பலஸ்தீன் மக்கள் தடைகளை மீறி பெருநாள் தொழுகை!

கட்டுப்பாடுகள் தொடர்ந்து இருந்தபோதிலும், ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் Masjid al-Aqsa பள்ளிவாசலில் ஈத் தொழுகையை நிறைவேற்றினர்.

இஸ்ரேல் விதித்த

02ம் பக்கம்பார்க்க...

## மினா அசௌகரியங்கள் குறித்து அரசு தீவிர விசாரணை நடாத்த வேண்டும்

### ஸ்ரீலங்கா ஐக்கிய காங்கிரஸ் கோரிக்கை!



இலங்கை ஹஜ் யாத்திரிகர்கள் மினாவில் எதிர் கொண்ட அசௌகரியங்கள் பற்றி அரசு விசாரணை மேற்கொள்ள வேண்டும் என ஸ்ரீலங்கா

03ம் பக்கம்பார்க்க...




உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## அபிவிருத்தியடைந்த...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மனிதர்களுக்கிடையில் நிலவ வேண்டிய பிணைப்பின் மகத்துவத்தைப் பற்றிய பரந்ததொரு முன்மாதிரியை ஹஜ் பெருநாள் வழங்குகின்றது.

தனிப்பட்ட அந்தஸ்துகளுக்கு அப்பாற்பட்டு, உலகின் நாலாதிசைகளிலிருந்தும் வருகை தரும் அனைத்து முஸ்லிம்களும் ஒன்றிணைந்து மத வழிபாடுகளை நிறைவேற்றும் இச்சந்தர்ப்பமானது, சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் குறித்த சிறந்ததொரு முன்மாதிரியை உலகிற்கு எடுத்துச் சொல்கிறது என்று நான் நம்புகிறேன்.

மேலும், மத்திய கிழக்கின் யுத்த சூழ்நிலை காரணமாக முழு உலகமும் எதிர்நோக்கியுள்ள கடினமான சவால்களுக்கு மத்தியிலும், மக்கா நகருக்கு புனித யாத்திரை மேற்கொள்ளும் முஸ்லிம்கள் இப்ராஹீம் நபி அவர்கள் தனது வாழ்நாளில் செய்த எல்லையற்ற தியாகத்தையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்துகிறார்கள்.

சுயநலத்திற்குப் பதிலாகப் பொதுநலம் மேலோங்கிய, அமைதியும் ஒற்றுமையும் நிறைந்த, ஒத்துணர்வுள்ள மனித சமூகத்தைக் கட்டியெழுப்புவதே எமது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

அந்தப் பயணத்தில், அமைதி, சகோதரத்துவம் மற்றும் தியாகத்தைப் பிரதிபலிக்கும் ஹஜ்ஜுப் பெருநாளின் வழிகாட்டல்களை எமது வாழ்க்கைக்கு மென்மேலும் நெருக்கமாக்கிக் கொள்ளுமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆன்மீக விழுமியங்களால் இலங்கைச் சமூகத்தை மேலும் போஷித்து, அனைவருக்கும் பயன் கிடைக்கக்கூடிய அபிவிருத்தியடைந்த நாடொன்றைக் கட்டியெழுப்புவதற்காகச் சகோதரத்துவத்துடன் முன்னோக்கிச் செல்லுமாறு சகலருக்கும் அழைப்பு விடுப்பதோடு, இந்நாட்டிலும் உலகெங்கிலும் வாழும் முஸ்லிம்களுக்கு இனிய ஈதுல்-அழ்ஹா பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## ஆயிரக்கணக்கான...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

கடுமையான கட்டுப்பாடுகள் மற்றும் பாதுகாப்பு சோதனைகள் மத்தியிலும், பல ஆயிரம் முஸ்லிம்கள் அல்-அக்ஸா வளாகத்தில் ஒன்று கூடி ஈத் தொழுகையில் கலந்து கொண்டனர்.

பாலஸ்தீன மக்களின் உறுதியையும், அல்-அக்ஸா பள்ளிவாசலின் மத முக்கியத்துவத்தையும் இந்த நிகழ்வு மீண்டும் உலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளது.

## ஆபிரகாம்..

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

உத்தியோகபூர்வமாக நிராகரித்துள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப், நாட்டின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணான எந்தவொரு உடன்படிக்கையிலும் பாகிஸ்தான் இணையாது என திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

ஈரானுடனான அமைதிப் பேச்சுவார்த்தையின் ஒரு பகுதியாக பாகிஸ்தான் உள்ளிட்ட முஸ்லிம் நாடுகள் இஸ்ரேலை அங்கீகரிக்க வேண்டும் என அமெரிக்கா அழுத்தம் கொடுத்த நிலையில், சுதந்திர பாலஸ்தீன நாடு அமையாதவரை இஸ்ரேலை ஒருபோதும் அங்கீகரிக்க முடியாது என்ற தனது 7 தசாப்த கால வெளியுறவுக் கொள்கையை பாகிஸ்தான் மீண்டும் உலக அரங்கில் உறுதிப்படுத்தியுள்ளது.

## மின்சார..

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இயல்பு வாழ்க்கையைப் பேணுவதற்கு அவை அத்தியாவசியமானவை என்பதையும், அந்தச் சேவைகளில் இடையூறு அல்லது தடை ஏற்படக்கூடும் என்பதையும் கருத்தில் கொண்டும், பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகள் இந்த உத்தரவின் மூலம் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

பெட்ரோலியப் பொருட்கள், எரிவாயு உள்ளிட்ட எரிபொருட்களின் வழங்கல் அல்லது விநியோகம்.
மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள், மருந்தகங்கள் மற்றும் அதுபோன்ற பிற நிறுவனங்களில் நோயாளிகளின் பராமரிப்பு, வரவேற்பு, கவனிப்பு, உணவளித்தல் மற்றும் சிகிச்சை ஆகியவற்றுடன் தொடர்புடையதாகத் தேவைப்படும் அல்லது செய்யப்பட வேண்டிய அனைத்து வகையான சேவைகள், பணிகள் அல்லது உழைப்பு.

பயணிகள் அல்லது சரக்குகளை ஏற்றிச் செல்வதற்கான பொதுப் போக்குவரத்து சேவைகள் சாலைகள், பாலங்கள், சிறுபாலங்கள், விமான நிலையங்கள், துறைமுகங்கள் மற்றும் இருப்புப்பாதைகள் உள்ளிட்ட சாலை, இருப்புப்பாதை அல்லது விமானப் பயணிகள் போக்குவரத்து சேவைகளையும், சுற்றுலா சேவைகளையும் எளிதாக்குதல் மற்றும் பராமரித்தல்.

நீர் வழங்கல் மற்றும் வடிகால் தொடர்பான அனைத்து சேவைகளும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் வழங்கல், பாதுகாப்பு மற்றும் விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகளும்

அனைத்து மாவட்டச் செயலகங்கள், பிரதேசச் செயலகங்கள், கிராம நிலதாரிகள், சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகள், விவசாய ஆராய்ச்சி உதவியாளர்கள், சமுதாய வலுவூட்டல் அதிகாரிகள், தூய இலங்கை மத்திய அணி அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின் கள நிலை அதிகாரிகளால் செய்யப்பட வேண்டிய அல்லது செய்யப்பட வேண்டிய அனைத்து வகையான சேவைகள், பணிகள் அல்லது உழைப்புப் பங்களிப்புகள்.

ஆம்புலன்ஸ் சேவைகள் இலங்கை மத்திய வங்கி உட்பட அனைத்து அரச வங்கிகள் மற்றும் காப்பீட்டு சேவைகள்.

நீர், மின்சாரம், வடிகால் மற்றும் கழிவுநீர் அமைப்புகள், தீயணைப்பு மற்றும் அவசர மருத்துவ சேவைகள், கழிவு சுத்திகரிப்பு (மலத்தைச் சேகரித்து அகற்றுதல் உட்பட) மற்றும் குப்பை அகற்றுதல் ஆகியவற்றை வழங்குவதற்காக ஒரு உள்ளாட்சி அமைப்பால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு பணியும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளால் செய்யப்படும் அனைத்து சேவைகளும்.

அனைத்து நீர்ப்பாசனம் தொடர்பான சேவைகள் அனைத்து தொலைபேசி, தொலைத்தொடர்பு மற்றும் ஊடகம் தொடர்பான சேவைகள் தாழ்வான நிலங்களை மீட்டெடுத்தல் மற்றும் மேம்படுத்துதல் தொடர்பான அனைத்து சேவைகளும் விவசாயம் தொடர்பான அனைத்து சேவைகள் மற்றும் விவசாயக் காப்பீட்டு சேவைகள் போன்றனவாகும்.

# தியாகத்தினதும், சகோதரத்துவத்தினதும் ஈதுல் அழ்ஹா வாழ்த்துகள்

**பிரதி அமைச்சர் முனீர் முளப்பரின் ஹஜ்ஜுப் பெருநாள் நல் வாழ்த்து செய்தி!**



உலகெங்கிலும் வாழும் மற்றும் இலங்கையிலுள்ள ஒட்டுமொத்த இஸ்லாமியர்களும் மிகுந்த இறை நம்பிக்கையோடு கொண்டாடும் சிறப்பானதொரு மத விழாவான "ஈதுல் அல்ஹா" ஹஜ் பெருநாளை முன்னிட்டு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈதுல் அல்ஹா அல்லது "தியாகத் திருநாள்" என்பது வெறும் கொண்டாட்டத்திற்கும் அப்பால், ஆழமான மத மற்றும் சமூக செய்தியை உலகிற்கு பறைசாற்றும் ஒரு நாளாகும். இப்றாஹிம் நபி (அலைஹிஸ்ஸலாம்) அவர்களும் அவர்களது குடும்பத்தினரும் அல்லாஹ் மீதான அசைக்க முடியாத இறை நம்பிக்கை, கீழ்ப்படிதல் மற்றும் உன்னதமான தியாகம் ஆகியன இந்நாளில் நினைவு கூறப்படுகின்றது.

அதேபோல், உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகை தரும் இலட்சக்கணக்கான ஹாஜிகளின் இனம், குலம் அல்லது வர்க்க வேறுபாடுகளின்றி ஒரே வெள்ளை ஆடையை அணிந்து, புனிதமிக்க மக்கா பூமியில் நிறைவேற்றும் ஹஜ் வழிபாடானது, ஒட்டுமொத்த உலகிற்கும் மனிதநேயத்தின் ஒருமைப்பாட்டையும் சமத்துவத்தையும் பறைசாற்றுகின்றது.

தன்னிடமுள்ளவற்றில் ஒரு பகுதியை பிறருக்காகத் தர்மம் செய்து, ஏழை எளிய மக்களின் பசியைத் தீர்த்து, சகோதரத்துவத்துடன் கைகோர்ப்பதற்கே இந்த உன்னதமான நாளில் இஸ்லாம் நமக்குக் கற்றுத்தருகிறது.

புனிதமிக்க மக்கா பூமியிலிருந்து இம்முறை ஹஜ் வழிபாட்டில் ஈடுபடும் இலங்கை ஹாஜிகள் உட்பட ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்திற்கும் அமைதி, மகிழ்ச்சி, செழிப்பு மற்றும் இறை அருள் நிறைந்த பயனுள்ள ஈதுல் அழ்ஹா திருநாளாக அமையப் பிரார்த்திக்கிறேன்!

## பழைய...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்பது தொடர்பில் அரசியல் கட்சிகளின் கருத்துகளை பெறும் நோக்கில் நேற்று முன்தினம் (26) பெப்ரல் அமைப்பினால் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்த அரசியல் கட்சிகள், தற்போதைய நிலையில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு சிக்கலாக அமைந்துள்ள தேர்தல் திருத்தச் கலப்பு முறை தேர்தல் சட்டத்தைக் கைவிட்டு பழைய விகிதாசார முறையில் தேர்தல் நடத்துவதற்கான இணக்கம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்கப்படும் பெண்கள் மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவம் தொடர்பில் அந்தந்த அரசியல் கட்சிகள் சுயமாக தீர்மானம் எடுக்க அனுமதிப்பதற்கும் அரசியல் கட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல்கள் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்பதில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒருமித்த கருத்தை வெளிப்படுத்தியுள்ளன.



# சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு
# 695 மில்.டொலர் நிதியுதவி

## மீளாய்வு செயற்பாடுகள் நிறைவு

இலங்கையின் பொருளாதார மீட்பு நடவடிக்கைகளுக்கு மேலும் வலுசேர்க்கும் வகையில், சர்வதேச நாணய நிதியம் (ஐஆகு) முக்கிய தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளது.

இலங்கைக்கான நீடிக்கப்பட்ட கடன் வசதி திட்டத்தின் (நுகுகு) கீழ், 5 ஆம் மற்றும் 6 ஆம் மதிப்பாய்வுகளுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் செயற்குழு அதிகாரப்பூர்வமாக அனுமதி வழங்கியுள்ளது.

இந்த இரு மதிப்பாய்வுகளையும் விரிவாக ஆராய்வதற்காக, சர்வதேச நாணய நிதியத்தின் செயற்குழு நேற்று (மே 27) அவசரமாகக் கூடியது. இதன்போதே இலங்கையின் பொருளாதார முன்னேற்றங்களைக் கருத்தில் கொண்டு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்புதலின் மூலம், இலங்கைக்கு இந்த மே மாதத்திற்குள் 695 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி விடுவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார மீட்பு நடவடிக்கைகளைத் தொய்வின்றி முன்னெடுப்பதற்கும், நாட்டின் கடன் செயல்முறைகளுக்கு ஆதரவளிப்பதற்கும் இந்த நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### மினா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய காங்கிரஸ் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது பற்றி கட்சியின் தலைவர் மு. முஸ்னத் அவர்கள் சமய விவகார அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது,

கடந்த அரசாங்கங்களின் காலத்தில் நடை பெற்ற ஊழல்கள் காரணமாக இது போன்ற ஊழல்கள் ஹஜ்ஜில் நடை பெற்ற செய்திகள் பல வந்துள்ளன.

இம்முறை இலங்கையில் இருந்து சுமார் 3500 ஹஜ் யாத்திரிகர்கள் புனித மக்கமா நகர் சென்றுள்ளனர்.

புனித மக்காவில் இருந்து மினா மைதானத்திற்கு புறப்பட்டுச் சென்றார்கள், அங்கு இலங்கை ஹஜ் முகவர்கள் சவூதி அரேபிய பிரயாண முகவர் ஊடாக ஒதுக்கிக் கொண்ட கூடாரங்களில் தரித்திருந்தனர்.

என்றாலும் அவர்களில் சுமார் 3000 யாத்திரிகர்களுக்கு 38 குளியலறை வசதிகளே இருந்ததாலும் அனைத்து யாத்திரிகர்களுக்கும் இரண்டு சாப்பாட்டு மண்டபங்கள் (புஃபே) மாத்திரம் இருந்ததாலும் யாத்திரிகர்கள் பாரிய அசௌகரியங்களை எதிர் கொண்டதாக தெரிய வருகிறது.

உணவிற்காகவும் மலசலகூட வசதிகளுக்காகவும் குளியல் மற்றும் வுழூ செய்து கொள்வதற்காகவும் வரிசைகளில் முண்டியடிக்கும் நிலையில், அமைதியாக தமது வழிபாடுகளில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை யாத்திரிகர்கள் சார்பில் முன்கூட்டியே வங்கியில் கட்டனங்கள் செலுத்தப்படடும் முற்சியான ஸவூதி சேவை வழங்குநரை தெரிவு செய்து கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளமை குறித்து கவலை தெரிவிக்கப் படுகிறது. இதில் சில முகவர்கள் இரகசியமாக பேரம் பேசி ஹாஜிகளை புதிய சவூதி முகவரிடம் பாரம் கொடுத்துள்ளதாகவும் முறைப்பாடுகள் வந்துள்ளன.

கிட்டத்தட்ட ஐந்து நாட்களை கொண்ட கிரியைகளை ஹாஜிகள் தொடராக செய்ய இருக்கும் நிலையில் பொது வசதிகள் இவ்வாறான நிலையில் இருந்தால் அதிகம் சிரமப்படுவார்கள்.

கூடாரங்கள் உட்பட்ட வசதிகளை ஒதுக்கித் தருவது ஹஜ் முகவர்கள் பொறுப்பு, பொதுவசதிகள் ஸவூதி ஹஜ் அமைச்சின் பொறுப்பு என்று கூறப்பட்டாலும் சகல யாத்திரிகர்களும் ஸவூதி முகவர்களுக்குரிய கட்டனங்களை செலுத்தி முன்பதிவுகளை செய்துள்ளமையால் அவர்களது உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்.

இலங்கை ஹஜ் யாத்திரிகர்களுடைய நலன்களை கவனிக்கவென ஹாஜிகளிடம் இருந்து வசூலிக்கப்பட்ட ஹஜ் நிதியத்தில் இருந்து செலவு செய்யப்பட்டு ஒரு பிரதி அமைச்சருடன் ஹஜ் குழுவினர் சிலரும் அங்கு சென்றிருக்கும் நிலையில் இவ்வாறானவை நடந்திருப்பது ஜனாதிபதி அநுர குமார அரசாங்கத்துக்கும் களங்கமாகும்.

ஆகவே இது பற்றி அரசாங்கம் பகிரங்க விசாரணை நடத்தி அதன் முடிவுகளை எமக்கும் சமூகத்துக்கும் தருமாறு ஸ்ரீலங்கா ஐக்கிய காங்கிரஸ் கௌரவ அமைச்சரை கேட்டுக்கொள்கிறது.




### நமது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைதியையும் நம்பிக்கையையும் மேம்படுத்துவதே ஹஜ் யாத்திரையின் முதன்மை நோக்கமாகும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

புனித ஹஜ் பெருநாளை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமிய நாட்காட்டியின் துல்ஹஜ் மாதத்தில், இஸ்லாமிய பக்தர்கள் மக்காவிற்குச் சென்று மேற்கொள்ளும் வருடாந்த புனித ஹஜ் யாத்திரையை நிறைவு செய்து, ஹஜ் பெருநாளைக் கொண்டாடுவது இஸ்லாமியர்களின் வாழ்க்கையை வடிவமைக்கும் கடமைகளில் ஐந்தாவது கடமையாகக் காட்டப்பட்டுள்ளது. எனவே, ஹஜ் யாத்திரையின் ஆழமான அர்த்தத்தைப் புரிந்துகொள்வது மிகவும் அவசியமானதாகும்.

பொருளாதார மற்றும் உடல் ரீதியான தகுதி வாய்ந்த ஒவ்வொரு முஸ்லிமும் தனது வாழ்நாளில் ஒரு முறையாவது ஹஜ் யாத்திரையை மேற்கொள்ள வேண்டும். தனது ஆன்மாவை தூய்மைப்படுத்துதல், இறைவனுக்கு அடிபணிதல், உலக மக்கள் மத்தியில் ஒற்றுமையையும் சமத்துவத்தையும் காட்டுதல் மற்றும் அதற்காக அர்ப்பணிப்புடன் செயல்படுதல் ஆகியவையே இதன் நோக்கங்களாகும்.

இன்று நாம் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுக்கான காரணம், மனிதர்களுக்குள் ஒருவருக்கொருவர் ஏற்பட்டுள்ள அவநம்பிக்கையாகும். இதனால் சிதைந்து போயிருப்பது அமைதியாகும். இந்த தருணத்தில் உலகம் முழுவதும் தோன்றியுள்ள யுத்த சூழ்நிலைகள், நம் இதயங்களில் அமைதியையும் நம்பிக்கையையும் மேலும் மேலும் வலுப்படுத்த வேண்டும் என்பதையே நமக்கு உணர்த்துகின்றன.

அதேபோல், நமது தாய்நாட்டில் இந்த தருணத்தில் எதிர்காலம் குறித்த ஒரு நிச்சயமற்ற தன்மையும், ஒரு கடினமான காலகட்டத்தை நாம் கடக்க வேண்டியுள்ளது என்பதையும் காண முடிகிறது. இந்த இக்கட்டான சூழ்நிலையில், நமது நாட்டை பிளவுகளால் அல்ல, ஒற்றுமையினாலேயே கட்டியெழுப்ப முடியும். உண்மையை உண்மையாகக் காண்பதற்கும், அதனை அச்சமின்றி வெளிப்படுத்திச் செயலாற்றுவதற்கும் தைரியமும் சக்தியும் தேவையாகும். இதற்காக அர்ப்பணிப்பு, தியாகம், பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் நல்லெண்ணத்துடன் செயல்படுவது மிக முக்கியமான விடயமாகும்.

ஹஜ் கொண்டாட்டத்தின் ஊடாக நமக்குக் காட்டப்படும் உன்னதமான போதனைகள், இதற்கான பல முன்மாதிரியான வழிகாட்டல்களை நமக்கு வழங்கியுள்ளன. இந்த தருணத்தில் அந்த வழிகாட்டல்களை சரியாகப் புரிந்து கொண்டு செயல்படுவது, ஹஜ் யாத்திரையின் உண்மையான அர்த்தத்தை நிறைவேற்றுவதாக அமையும். அதற்காக நாம் அர்ப்பணிப்புடன் செயல்படுவோம். பன்முகத்தன்மையில் ஒற்றுமையை மிகச்சிறப்பாகப் பிரதிபலிக்கும் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளின்படி வாழ்வோம் என எதிர்க்கட்சி தலைவர் தனது வாழ்த்துச் செய்தில் குறிப்பிட்டுள்ளார்.

### போதைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் ஒருவருடன் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தொடர்பு கொண்டதாகவும், அவருடன் 53 முறை பேசியுள்ளதாகவும் சமீபத்திய ஊடக அறிக்கைகள் சிலவற்றில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்துள்ள முஜிபுர் ரஹ்மான், தாம் எந்தவொரு சந்தேகநபருடனும் பேசவில்லை என்றும், இது தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு ஏற்கனவே வாக்குமூலம் அளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

குறித்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புடைய சிம் அட்டை மாளிகாவத்தையைச் சேர்ந்த தனது கட்சியின் பெண் ஆதரவாளர் ஒருவருக்குச் சொந்தமானது என்றும், அவர் இதற்கு முன்னர் அந்த இலக்கத்தைப் பயன்படுத்தி தன்னுடன் தொடர்பு கொண்டதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

அவரின் கூற்றுப்படி, அந்தப் பெண் பின்னர் அந்த சிம் அட்டையை தனது உறவினர் ஒருவரிடம் ஒப்படைத்துள்ளார். அந்த உறவினர் போதைப்பொருளுக்கு அடிமையானதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சில ஊடகங்கள் கூறுவதைப் போல விளக்கமறியல் சிறைக்குள் இருந்து தனக்கு எந்த அழைப்பும் வரவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அந்த இலக்கத்திலிருந்து தனக்கு வந்த அனைத்து அழைப்புகளும் குறித்த நபர் விளக்கமறியலில் வைக்கப்படுவதற்கு முன்னரே மேற்கொள்ளப்பட்டவை என்று கூறிய முஜிபுர் ரஹ்மான், தனக்கு அந்த சந்தேகநபரைப் பற்றி எதுவும் தெரியாது என்றும், அவருடன் ஒருபோதும் பேசியதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

### இந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற சவுதி அரேபியாவின் மக்கா நகருக்கு வருகை தந்துள்ளதாக அறபு செய்திச் சேவை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி தொகையில் 160,646 ஹாஜிகள் உள்நாட்டு ஹாஜிகள் எனவும் 1,546,655 ஹாஜிகள் சவுதி அரேபியாவுக்கு வெளியில் இருந்து அதாவது வெளிநாடுகளில் இருந்து வருகை வந்துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தவர்களில் 1,485,729 ஹாஜிகள் விமானங்கள் மூலமாகவும் 54,429 ஹாஜிகள் தரை வழியாகவும் 6,497 ஹாஜிகள் கப்பல்கள் மூலம் கடல் வழியாகவும் வந்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஹஜ் கடமைக்கு வருகை தந்த மொத்த 1,707,301 ஹாஜிகளில் 893,396 பேர் ஆண்கள் எனவும் 813,905 பேர் பெண்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹாஜிகளின் பாதுகாப்பு மற்றும் ஏனைய நலன்கள் கருதி சவுதி அரசு 441,049 பேரடங்கிய பாதுகாப்பு தரப்பினரையும் நலன் புரி பணிகளுக்காக 26,701 பேரை கொண்டவராகவும் இணைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2026 MAY 28 - THURSDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# அன்பு அமைதி நிலவும் யுகத்துக்காக பிரார்த்திப்போம்

உலகம் இன்று போர்கள், இனஅழிப்புகள், மத வெறுப்புகள், அகதிப் பிரச்சினைகள் மற்றும் மனித உயிர்களின் அர்த்தமற்ற பேரழிவுகளால் திணறிக் கொண்டிருக்கிறது. இத்தகைய சூழலில் மனிதகுலத்திற்கு அமைதி, சகோதரத்துவம் மற்றும் சமத்துவம் பற்றிய உயரிய செய்தியை நினைவூட்டும் ஆன்மீக நிகழ்வாக ஹஜ் திகழ்கிறது.

புனித ஹஜ் யாத்திரை என்பது முஸ்லிம்களின் ஐந்தாவது கடமையாக மட்டுமல்ல் அது உலக மனிதகுலத்திற்கு ஒற்றுமை, சமத்துவம், தியாகம் மற்றும் அமைதியின் பேரறிவிப்பாகும்.

இன்று உலகம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்கிறது. காசா முதல் ஈரான் வரை , ஆப்பிரிக்கா முதல் ஆசியா வரை மனித இரத்தம் சிந்தப்படுகிறது. இனவெறி, மத வெறுப்பு, அதிகார பேராசை மற்றும் பொருளாதார ஆதிக்க அரசியல்கள் மனிதநேயத்தை கேள்விக்குறியாக்கியுள்ளன. ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் உயிரிழக்கின்றனர். குழந்தைகள் அனாதையாக்கப்படுகின்றனர். குடும்பங்கள் அகதிகளாக அலைகின்றன. இவ்வாறான காலகட்டத்தில் மனித குலத்திற்கு அமைதியின் மொழியை கற்பிக்கும் மிகப்பெரிய ஆன்மீகப் ஒன்று கூடலே ஹஜ்ஜாகும்.

உலகின் பல நாடுகள், மொழிகள், இனங்கள், சமூகங்கள் மற்றும் பொருளாதார நிலைகளில் வாழும் கோடிக்கணக்கான முஸ்லிம்கள் ஒரே உடையணிந்து, ஒரே இறைவனை நோக்கி, ஒரே இடத்தில் கூடுவது மனித சமத்துவத்தின் அபூர்வ சின்னமாகும். அங்கு அரசனுக்கும் ஏழைக்கும் வேறுபாடு இல்லை. வெள்ளையனுக்கும் கருப்பனுக்கும் உயர்வு இல்லை. மொழி, நிறம், நாடு, பதவி ஆகிய எல்லைகளைத் தாண்டி “மனிதன்” என்ற ஒரே அடையாளமே உயர்த்திப் பேசப்படுகிறது.

ஹஜ் நமக்கு தியாகத்தின் அர்த்தத்தையும் உணர்த்துகிறது. இறைத்தூதர் இப்ராஹீம் (அலை) அவர்களின் வாழ்க்கை, குடும்ப தியாகம், இறை கட்டளைக்கு முன் முழுமையான கட்டுப்பாடு ஆகியவை ஹஜ்ஜின் ஒவ்வொரு கிரியைகளும் பிரதிபலிக்கின்றன. இன்று மனிதன் தனது சுயநலத்தை விட்டுவிட்டு, பிறரின் துயரத்தை உணரும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்ள வேண்டிய அவசியம் உலகளவில் ஏற்பட்டுள்ளது. அந்த உயரிய பண்பை ஹஜ் மனித குலத்துக்கு கற்பிக்கிறது.

மேலும், ஹஜ் என்பது அமைதி மற்றும் பொறுமை என்பனவற்றை ஊக்குவிக்கும் உன்னத கடமையாகும். கோடிக்கணக்கான மக்கள் ஒரே இடத்தில் கூடினாலும், கட்டுப்பாடு, ஒழுக்கம், பரஸ்பர மரியாதை ஆகியவற்றின் மூலம் அமைதியாக வணக்க வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர். இது உலக அரசியல்வாதிகளுக்கும் சமூக தலைவர்களுக்கும் மிகப்பெரிய செய்தியாகும். ஆயுதங்கள் அமைதியை உருவாக்க முடியாது பரஸ்பர புரிதலும் மனித மரியாதையும் மட்டுமே நிலையான சமாதானத்தை உருவாக்கும்.

இன்று உலகிற்கு தேவையானது வெறும் பொருளாதார வளர்ச்சி அல்ல் மனிதநேயத்தை யும் மனித நலன்களையும் மையப்படுத்திய மேம்பாடும் முன்னேற்றமுமே அவசியமானதாகும். அந்த மனிதநேயத்தினதும் பொது நலன்களினதும் மையக் கருத்துகளை ஹஜ் உயிரோட்டத்துடன் உலகிற்கு எடுத்துரைக்கிறது. சமத்துவம், சகோதரத்துவம், பொறுமை, தியாகம், ஒற்றுமை, இறைநம்பிக்கை – இவை அனைத்தும் மனித சமுதாயத்தை மீண்டும் நல்வழிப்படுத்தக்கூடிய உயரிய மதிப்புகளாகும்.

எனவே, ஹஜ் என்பது முஸ்லிம்களின் மதச் சடங்காக மட்டும் பார்க்கப்படக்கூடாது. அது உலக அமைதிக்கான ஆன்மீக அறிவிப்பாகவும், மனித ஒற்றுமைக்கான வாழும் எடுத்துக்காட்டாகவும் புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

இந்த தாத்பரியங்களை உணர்த்தும் ஹஜ்ஜுக்கான காலகட்டத்தில், உலகம் முழுவதும் அமைதி நிலவவும், அடக்குமுறைகள் முடிவடையவும், மனிதர்கள் ஒருவரை ஒருவர் அன்புடனும் மரியாதையுடனும் அணுகும் புதிய யுகம் உருவாகவும் நாம் அனைவரும் பிரார்த்திப்போம்.







# வரக்காமுறை அன்னூர் அஹதிய்யாவில் ஹஜ் பற்றிய கண்காட்சி

**(உக்குவளை நிருபர்)**

உக்குவளை வரக்காமுற அன்னூர் அஹதிய்யா பாடசாலையின் ஹஜ் தொடர்பான விசேட கண்காட்சி யொன்று வரக்காமுற அன்னூர் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் (23) காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை இடம்பெற்றது.

இவ்அஹதிய்யா அதிபரும், மாத்தளை அஹதிய்யா சம்மேளணத் தலைவரும், கல்விப் பணிப்பாளருமான கவிஞர் வரக்காமுறயூர் ராசிக்கின் ஆலோசனை வழிகாட்டலில் இவ் அஹதிய்யா ஆசிரியர் குழாம் மற்றும் மாணவர்களது பங்களிப்பில் இடம்பெற்ற இக்கண்காட்சியை மாத்தளை நகர முன்னாள் மேயரும் சமூக ஆர்வலருமான அல்ஹாஜ் ஐ.எம். அத்ஹம் ஜேபி திறந்து வைத்தார்.

இதன்போது அஹதிய்யா அதிபர் அஷ்ஷெய்க் எம் . பைசல் (நழீமி) யுடன் சக ஆசிரியர்கள் பொருப்பாளர்கள் பிரமுகர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இக்கண்காட்சியைக் காண பல இடங்களிலிருந்தும் வருகை தந்தவர்களுக்கு முக்கியமாக புனித கஃபா, இஸ்மாயில் (அலை), ஹாஜரா (அலை), பபிலோனிய மன்னன், நீக்குண்டம் , ஸம் ஸம் நீறுற்று , சபா மர்வா, ஹிரா குகை, ஹாஷரூன் சடலம் , மண்ணறைக் காட்சிகள் ஆகியன சம்பந்தப்பட்ட சகல நிகழ்வுகளையும் எடுத்துக்காட்டும் வகையில் இக்கண்காட்சி சிறப்பாக ஏற்பாடு






செய்யப்பட்டு மாணவர்களால் அவற்றுக்கான விளக்கங்களும் அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அஸீஸா பவுண்டேஷன் ஏற்பாட்டில் மாணவிகளுக்கு ஹஜ் பெருநாள் புத்தாடை





**(எம்.சதூர்தீன்)**

அஸிஸா பவுண்டேசன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஹஜ் பெருநாளை முன்னிட்டு கடுகஸ்தொட்ட கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட கஷ்டப்பிரதேச இரண்டு பாடசாலைகளை சேர்ந்த மாணவிகளுக்கு இலவசமாக ஹஜ் பெருநாள் புத்தாடைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதற்கமைய இனிகல முஸ்லிம் மகா வித்யாலயத்தில் 100 மாணவிகளுக்கும் உகுரஸ்பிடிய மீரா முஸ்லீம் மகா வித்தியாலயத்தில் 60 மாணவிகளுக்கும் ஹஜ்ஜூப் பெருநாள் புத்தாடை துணி வகைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்நிகழ்வுகளில் கலந்து கொண்ட மேற்படி பவுண்டேசனின் பணிப்பாளர் சாதிக் ஹஸன் இதனை மாணவிகளுக்கு வழங்கி வைப்ப தையும் பாடசாலை அதிபர்களையும் படங்களில் காணலாம்.

# நிககொல்ல வை.எம்.எம்.ஏ ஏற்பாட்டில் புலமைப் பரிசில் கருத்தரங்கு



**(எம்.சதூர்தீன்)**

மாத்தளை நிககொள்ள வை.எம். எம்.ஏ ஏற்பாட்டில் நிககொள்ள மின்ஹாஜ் மகா வித்தியாலயத்தில் இவ்வருடம் தரம் 5 புலமை பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் நலன் கருதி இலவச கருத்தரங்கு (24) இடம்பெற்றது. இக்கருத்தரங்கில் மாத்தளையைச் சேர்ந்த வளவாளர்கள் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மலேஷிய பிரபல ஊடகவியலாளர் பிதாவுல்லாஹ் கான் சிங்கப்பூர் ரோயல்கிங் நிறுவனருடன் சந்திப்பு

**(எம். கே. ஷாகுல் ஹமீது)**

ராயல் கிங்ஸ் குழுமத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் சிராஜூதீன் மலேசியாவின் பிரபல தமிழ் இஸ்லாமிய ஊடகவியலாளரும் மூத்த பத்திரிகையாளருமான ஃபிதாவுல்லாஹ் கானை சிங்கப்பூரில் உள்ள ராயல் கிங்ஸ் குழும அலுவலக த்தில் சமீபத்தில் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பில் குழுமத்தின் மூத்த ஆலோசகர் ஜலாலுதீனும் கலந்து கொண்டார். ஃபிதாவுல்லாஹ் கான், ஊடகம், கல்வி மற்றும் தமிழ் இஸ்லாமிய இலக்கியத் துறைகளில் பல தசாப்தங்களாக சிறப்பான பங்களிப்பை வழங்கி வரும் ஒரு மதிப்புமிக்க ஆளுமையாக திகழ்கிறார். அவர் சென்னைப் பல்கலைக்கழகத்தின் பத்திரிகை மற்றும் ஊடகவியல் துறையில் முதுகலைக் கல்வி பயின்று தனது அறிவுத்திறனை மேம்படுத்திக் கொண்டவர்.

மாணவ பருவத்திலேயே “மாணவர் முரசு” என்ற இஸ்லாமிய மாணவர் இயக்க இதழின் ஆசிரியராக தனது ஊடகப் பயணத்தை தொடங்கிய அவர், பின்னர் புகழ்பெற்ற விகடன் குழுமத்தின் மாணவர் பத்திரிகையாளர் பயிற்சித் திட்டத்தில் பயிற்சி பெற்று ஊடகத் துறையில் தன்னை மேலும் வளர்த்துக் கொண்டார். தனது ஆரம்பகாலங்களில் பல்வேறு பத்திரிகைகளிலும் பணியாற்றி அனுபவம் பெற்றார்.

பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற பின்னர், பத்திரிகைத் துறையில் மேலும் ஒரு முதுகலைப் பட்டப்படிப்பையும் முடித்தார். பின்னர் அவர் ஐ.எப்.ரீ.நிறுவனத்தின் குர்ஆன் மொழி பெயர்ப்பு பிரிவிலும் பணியாற்றினார்.

இதையடுத்து 1997ஆம் ஆண்டு மலேசியாவின் இஸ்லாமிய கல்வி வாரியத் தலைவர் டத்தோ ஸ்ரீ இக்பால் அவர்களின் அழைப்பின் பேரில் “நம்பிக்கை” மாத இதழின் ஆசிரியராக பொறுப்பேற்றார். அவரது தலைமையில் “நம்பிக்கை” இதழ் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு பதிப்பும் தவறாமல் தொடர்ந்து வெளிவந்து, குறிப்பிடத்தக்க சாதனையை நிலைநாட்டியுள்ளது.




தற்போது அந்த இதழ் டிஜிட்டல் ஊடகமாகவும் வளர்ச்சி பெற்று, அவர் தலைமை ஆசிரியராக தொடர்ந்தும் செயல்பட்டு வருகிறார்.

மேலும், 2011ஆம் ஆண்டு மலாயா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் செயலாளராகவும் அவர் பணியாற்றினார். அவரது சிறப்பான பங்களிப்புக்காக 2014ஆம் ஆண்டு கவிக்கோ அப்துல் ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற சர்வதேச இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் “சிறந்த இதழாசிரியர்” விருதும், 2016ஆம் ஆண்டு மலேசியத் துணைப் பிரதமர் டத்தோ ஸ்ரீ அஹமத் ஸாஹிட் ஹமீதி அவர்களால் “சிறந்த பத்திரிகையாளர்” விருதும் வழங்கப்பட்டன.

மலேசிய அரசுப் பள்ளிகளுக்கான 1 முதல் 6ஆம் வகுப்பு வரை உள்ள தமிழ்ப் பாடநூல்களின் ஆசிரியர் குழுவிலும் அவர் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சந்திப்பின் போது ஊடகம், கல்வி, தமிழ்இஸ்லாமிய இலக்கியம், சமூக வளர்ச்சி, சிங்கப்பூர் - மலேசியா இடையிலான எதிர்கால ஒத்துழைப்பு வாய்ப்புகள் குறித்து விரிவான கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றது.

# வெற்றிகரமாக நிறைவுற்ற ஆசிரியர் போட்டிப் பரீட்சை

நாடளாவிய ரீதியிலுள்ள தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர் வெற்றிட ங்களுக்காக, அரச சேவையிலுள்ள பட்டதாரிகள் மற்றும் ஏனைய பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கும் போட்டிப் பரீட்சை இன்று (24) நாடு முழுவதும் 1,048 பரீட்சை நிலையங்களில் வெற்றிகரமாக நிறைவுபெற்றதாக இலங்கை பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இப்பரீட்சைக்காக அரச சேவையிலுள்ள 66,991 விண்ணப்பதாரர்களும், ஏனைய பிரிவைச் சேர்ந்த 96,442 விண்ணப்பதாரர்களும் விண்ணப்பித்திருந்ததுடன், விசேட தேவையுடைய 323 விண்ணப்பதாரர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான வசதிகளையும் பரீட்சைகள் திணைக்களம் செய்து கொடுத்திருந்தது.

2023 ஆம் ஆண்டில், அரச சேவையிலுள்ள பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கு வதற்கான போட்டிப் பரீட்சையொன்றை நடத்துவதற் குப் பரீட்சைகள் திணைக்களம் திட்டமிட்டிருந்தது.

இருப்பினும், உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மூன்று அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மற்றும் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் நிலுவையிலிருந்த ஒரு வழக்கு ஆகியன காரணமாகக் குறித்த பரீட்சை இடைநிறுத்தப்பட்டி ருந்தது. தற்போது அனைத்து வழக்கு நடவடிக்கைகளும் நிறைவடைந்திருப்பதையடுத்து, நாடு முழுவதும் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்குத் தீர்வை வழங்கும் நோக்கில், அரச சேவையிலுள்ள பட்டதாரிகளும் ஏனைய பட்டதாரிகளும் தோற்றக் கூடிய வகையில் இம்முறை பரீட்சை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# நெருக்கடியில் பொருளாதாரம் சமாளிக்குமா அரசு?



எம்.எஸ். அமீர் ஹுசைன்



சில வாரங்களுக்கு முன்னர் 297 ரூபாவுக்கு இருந்த ஐக்கிய அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை தற்போது 357 ரூபா வரை உயர்வடைந்திருக்கின்றது. அமெரிக்க டொலரின் பெறுமதி உயர்வானது உள்நாட்டில் ரூபாவின் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டு மதிப்பிறக்கம் நடக்கின்றது என்பதன் அறிகுறியாகும்.

ஷரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தால் உள்நாட்டில் பெருளாதாரத் தளம்பல் நிலை உருவாகும் அறிகுறி தென்படுகின்றது என்றே கூறலாம். ஆனாலும் அரசாங்கம் இந்த ஷரூபாவின் மதிப்பிறக்கத்தை தொடர விடாமல் கட்டுப்பாட்டில் வைத்திருக்க நடவடிக்கை எடுக்குமானால் ஓரளவிற்கு பொருளாதார நெருக்கடி ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ள முடியும். தவறினால் விளைவு பாதகமானதாக மாறலாம். ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தால் உள்நாட்டில் அமெரிக்க டொலருக்கு தட்டுப்பாடு ஏற்படலாம். ஏற்றுமதி இறக்குமதிகளில் பாதிப்பு எற்படலாம். அதன் பிரதிபலனாக பணவீக்கம் உயர்வடைந்து அத்தியாவசியப் பொருட்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படலாம். இதுவே பொருளாதார நெருக்கடி ஒன்றிற்கான அடிப்படை அம்சங்களாகும்.

பொருளாதார நெருக்கடி பற்றி நாம் புதியதாக கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கனவே 2022 - 2024 காலப்பகுதியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக வாழ்நாளில் மறக்க முடியாத பாடத்தை கற்றுள்ளோம்.

அப்போதைய சந்தர்ப்பத்தில் பண வீக்கம் 70மூ சத வீதம் வரை அதிகரித்தது. அதன் பின்னர் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் ஒவ்வொன்றாக அதிகரித்தன. உள்நாட்டில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு பற்றாக்குறை ஏற்பட்டதால் இறக்குமதிகள் தடைப்பட்டன. குறிப்பாக எரி பொருளைக் கூட இறக்குமதி செய்ய டொலர் இல்லாத நிலை ஏற்பட்டது. இறுதியில் நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டு மக்கள் கிலோமீட்டர் கணக்கு நீளமான கியு வரிசைகளில் நாட்கணக்கில் எரிபொருளுக்காக காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இரண்டு வருடங்களாக நிலைமை மோசமடைந்து பாரிய பொருளாதார சரிவு ஏற்பட்டது. தற்போதைய நிலையில் ஐக்கிய அமெரிக்க டொலரின் மதிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து வருவதால் மீண்டும் ரூபாவின் மதிப்பு வீழ்ச்சியடைந்து




2022 காலகட்டம் போன்ற ஒரு நிலை ஏற்பட முன்னர் அரசாங்கம் முன்னெச்சரிக்கையாக என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

கடந்த பாராளுமன்ற அமர்வின் போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியதோடு, பல எதிர்வு கூறல்களையும் செய்துள்ளனர். நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை சந்திக்கப் போகின்றது என்று கலாநிதி ஹர்ஷ டி. சில்வா, முஜீபுர் ரஹ்மான் உட்பட பலர் சுட்டிக்காட்டினர்.

ஆனாலும் அரச தரப்பு அமைச்சர்கள் பதிலளிக்கையில் எதிர்க்கட்சி எரியும் நெருப்பில் இலாபம் தேட முற்படுகின்றது. அமெரிக்க டொலரின் மதிப்பு உயர்வடைந்தால் உடனடியாக பொருளாதார நெருக்கடி வரும் என்று சொல்ல முடியாது. வளைகுடா யுத்தம் காரணமாக உலகில் பல நாடுகளில் தற்போது அமெரிக்க டொலரின் விலைகள் உயர்வடைந்திருக்கின்றது. அன்றைய கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சி காலத்தில் அமெரிக்க டொலர் ஒன்றின் விலை 370 வரையில் அதிகரித்திருந்தது. எரிபொருள் விலை 470 ரூபா வரை அதிகரித்தது. தற்போது அந்த நிலை இல்லை. அதனால் அஞ்ச வேண்டியதில்லை என்று தெரிவித்தனர். அதேநேரம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அண்மையில் படைவீரர்கள் தின நிகழ்வில் பேசும் போது பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க மக்கள் சிக்கனத்தைக் கடைபிடிக்க பழக வேண்டும். எரிபொருள், மின்சாரம் போன்றவற்றை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தார்.

எதுவானாலும் தற்போதைய நிலையில் அமெரிக்க டொலரின் மதிப்பு உயர்வுக்கு விரைவில் கிடைக்க இருக்கின்ற சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து 700 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (கிட்டத்தட்ட 25000 கோடி ரூபாய்கள்), ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து கிடைக்க இருக்கின்ற 480 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் உலக வங்கியால் கிடைக்கவுள்ள 150 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மொத்தமாக 133 கோடி (1330 மில்லியன்) அமெரிக்க டொலர்கள் முட்டுக் கொடுப்பதாக அமையலாம் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. இந்த மாதம் 27 ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான கடன் மீளாய்வு 05 மற்றும் 06 ஆம் கட்ட கூட்டம் நடைபெற இருக்கின்றது. அதன் போது இந்த தொகை கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனாலும் அமெரிக்க டொலரின் மதிப்பு உயர்வடைந்து கொண்டு போகும் போது டொலருக்கு தட்டுப்பாடு ஏற்படலாம். அந்த சந்தர்ப்பத்தில் இலங்கை மத்திய வங்கி கையிருப்பில் இருக்கின்ற சிறப்பெடுப்பு ஒதுக்கை (SDR) வெளியே போடும் நிலை ஏற்பட்டால் பாதகமான விளைவுகள் ஏற்படலாம். நாட்டில் டொலருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டால் இறக்குமதிகள் பாதிக்கப்படலாம். உள்நாட்டில் கொள்வனவு செய்யப்படுகின்ற எரிபொருள் உட்பட 90மூ சதவீதமான அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதி செய்யப்படுபவையாகும். அதனால் இறக்குமதிகள் பாதிக்கப் பட்டால் நாட்டில் அத்தியவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விலையேற்றம் தடுக்க முடியாததாகி விடும்.

தற்போதைக்கே பால்மாவின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. பருப்பு, சீனி, கிழங்கு, வெங்காயம், அரிசி உட்பட பலவகையான பொருட்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளன. இவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டால் பாதிக்கப்படுபவர்கள் நடுத்தர மற்றும் சாதாரண தரவகுப்பு மக்களாவர். அதனால் இத்தகைய பொருளாதார நெருக்கடி ஒன்று ஏற்பட்டு ஷரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைவதை கட்டுப்படுத்த இருக்கின்ற ஒரே வழி அமெரிக்க டொலர் வெளியே போவதை கட்டுப்படுத்த வேண்டும். வெளியே போவதை கட்டுப்படுத்தி னால் மாத்திரம் போதாது. அதிகமாக அமெரிக்க டொலர் உள்வரவை ஊக்குவிக்க வேண்டும். அதற்கான வழிமுறைகளாக இருப்பது ஏற்றுமதி வருமானம், வெளிநாட்டு அந்நியச் செலாவணி வருகை போன்றவற்றை அதிகரிக்கச் செய்வதாகும். அத்துடன் மக்கள் இயன்றவரை சிக்கனமாக வாழப்பழக வேண்டும். அதிலும் எரிபொருள் சிக்கனம் அத்தியாவசியமானதாகும். இன்றேல் உள்நாட்டில் கீரைக் கட்டின் விலை முதல் அனைத்து விலைகளும் அதிகரிப்பதை தடுக்க முடியாது. அங்காடியில் சிறிய வியாபாரியிடம் ஏன் சாதாரணமாக 50 ரூபாவுக்கு விற்பனை செய்த கீரைக்கட்டை 100 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றீர்கள் என்று கேட்டால், 50 ரூபாவுக்கு விற்பதால் கிடைக்கின்ற வருமானம் அத்தியாவசியப் பொருட்களை நுகரப் போதுமானதாக இல்லை. அவற்றின் விலையேற்றத்திற்கு ஏற்ப நாங்களும் வாழ வேண்டுமானால், 50 ரூபாவின் கீரை கட்டை 100 ஷரூபாவுக்கு விற்பனை செய்ய வேண்டும் என்று தெரிவிக் கின்றனர். அதே நேரம் அரசாங்க த்திடம் திடமான தூர நோக்கம் கொண்ட பொருளாதார கொள்கையும் திட்டமிடல், முகாமைத்துவம் அவசியமாகின்றது.

ஏற்கனவே அந்த விடயத்தில் ஓட்டை இருந்தது என்பதை காட்டும் சிறந்த உதாரணமாக திறைசேரி அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பிய 25 இலட்சம் அமெரிக்க டொலர்கள் (90 கோடி ரூபா) அளவில் நிதி மோசடிக் காரர்களாக ஹெக்கர்ஸ்களின் கைகளுக்குச் சிக்கியதை கூறலாம். அதே போன்று அமெரிக்க தபால் சேவைக்கு கொடுக்க வேண்டிய 06 இலட்சம் அமெரிக்க டொலர்கள் மயமாக மறைந்ததும் சிறந்த உதாரணங்களாகும். ஆனாலும் காணாமல் போன் 90 கோடி ரூபா (25 இலட்சம் அமெரிக்க டொலர்களை) சர்வதேச தரவியல் மற்றும் தகவல் தொடர்பாடல் நிபுணத்துவ உதவியுடன் தேடியதில் திறைசேரிக்கு மீள கிடைத்ததோ வெறும் 200 டொலர்கள் மாத்திரம் என்று அறிய முடிகின்றது.

ஹேக்கர்ஸ் அமெரிக்காவில் உள்ள வங்கியொன்றிற்கு 25 இலட்சம் அமெரிக்க டொலர்களில் செலவு செய்து மீதமிருந்தது 200 டொலர்கள் மாத்திரமே என்றும் அந்த பணத்தை திறைசேரிக்கு அங்குள்ள புலனாய்வுத் துறையினர் அனுப்பியுள்ளனர் என்ற தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

இந்நிலையில் நிலைமைகளை அவதானிக்கின்ற போது ரூபாவின் மதிப்பு வீழ்ச்சி தொடருமானால் பொருளாதார நெருக்கடி ஒன்று ஏற்படுவதை தவிர்க்க முடியாததாகிவிடும். ஏற்கனவே கோட்டாபய காலத்திலும் நடந்தது இதுததான். அப்போதும் எதிரணியினர் மற்றும் பொருளியல் வல்லுனர்கள் சுட்டிக்காட்டிய போது அவை கவனத்தில் எடுக்கப்படவில்லை. பின்னர் ஏற்பட்ட விளைவு மிகவும் மோசமானதாக மாறியது.

இறுதியில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர் அஜித் கப்ரால், கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ, பெசில் ராஜபக்ஷ உட்பட 05 பேர்களை பொருளாதார கொலைகாரர்கள் அப்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு பதில் கூற வேண்டியவர்கள் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்ற நிலைக்கு போனதையும் நாம் மறந்து விட முடியாது. அதனால் ஏற்கனவே 4000 வாகன இறக்குமதிக்கு அரசாங்கம் கொடுத்த தளர்வுகளும் இத்தகைய நிலைமைகளுக்கு காரணம் என்று கூட்டிக்காட்டப் படுகின்றது. எதுவானாலும் தற்போதைய நிலையில் அரசாங்கம் மீதான குற்றச்சாட்டுக்களை அரசியல் சதி என்று கூறி புறக்கணிக்க முடியாது. அவ்வாறு உதாசீனப் போக்கு கடைபிடிக்கப்பட்டால் அரசாங்கம் மீது மக்களுக்கு இருக்கின்ற நம்பிக்கை சிதைவடைய லாம். 69 இலட்சம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகிய கோட்டாபய நாட்டை விட்டு ஓட வேண்டிய நிலைக்கு தள்ளியதும் அப்போதைய பொருளாதார நெருக்கடி என்பதை நாம் மறந்து விட முடியாது.

# மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்க டில்வின் சில்வா யார்? மாகாண சபை முறையை இல்லாதொழிக்கும் முயற்சி

## இம்ரான் எம்.பி. கண்டனம்

(ஏ.எச்.எம்.ஹஸ்பர்)

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் டில்வின் சில்வா, நாட்டின் மாகாண சபைத்தேர்தல்கள் இந்த ஆண்டு நடைபெறாது என்று தன்னிச்சையாக அறிவித்திருப்பது மக்களின் இறையாண்மையை அப்பட்டமாக உதைத்துத் தள்ளும் ஒரு சர்வாதிகாரச் செயலாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் இது குறித்து மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாண சபை முறைமையை ஆரம்பம் முதல் எதிர்த்துவந்த மக்கள் விடுதலை முன்னணி, இவ்வாறான இழுத்தடிப்புகள் மூலம் அதனை இல்லாது செய்ய முயற்சிக்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது.

“ஆளும் தேசிய மக்கள் சக்தியின் தலைமைக்கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் டில்வின் சில்வாவுக்கு இந்த நாட்டின் தேர்தல் குறித்து தீர்மானிப்பதற்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்று கேட்க விரும்புகின்றேன்.

மாகாணசபைத் தேர்தலை நடத்த விரும்பாத இந்த அரசாங்கம் டில்வின் சில்வா மூலம் அதனை வெளிப்படுத்தியுள்ளது.

சிறுபான்மை மக்களின் அமோக ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதியும், இந்த அரசாங்கமும் அந்த மக்களின் மாகாண சபை அபிலாசைகளை குழி தோண்டிப் புதைக்கும் நடவடிக்கை எடுப்பது கவலையைத் தருகின்றது.

இலங்கை அரசியலமைப்பின் படி, தேர்தலை நடத்துவது மற்றும் அது தொடர்பான இறுதித்தீர்மானங்களை எடுக்கும் முழுமையான அதிகாரம் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவிற்கே உரியதாகும். அதேபோல், பொது நிதியை ஒதுக்குவதும், அதனை மாற்றுவதும் பாராளுமன்றத்தின் அனுமதியுடன் நிதி அமைச்சருக்குரியது.

இந்த சட்டபூர்வமான நடைமுறைகளில் தலையீடு செய்யும் அதிகாரம் டில்வின் சில்வாவுக்கு எப்படி வந்தது.

பாராளுமன்றத்தையோ, தேர்தல் ஆணைக்குழுவையோ மதிக்காமல், மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகமான பெலவத்தையில் எடுக்கப்படும் முடிவுகளை நாட்டின் சட்டமாக திணிக்க முற்படுவது அப்பட்டமான ஜனநாயக மீறலாகும்.



மிக முக்கியமாக, மாகாண சபை முறைமை இந்த நாட்டு சிறுபான்மை மக்களின் நீண்டகால இனப்பிரச்சினைக்கான ஒரு அரசியல் தீர்வாக, அரசியலமைப்பின் 13வது திருத்தத்தின் ஊடாகக் கொண்டு வரப்பட்ட ஒன்றாகும். அதிகாரப் பகிர்வு மற்றும் சிறுபான்மை மக்களின் அரசியல் அபிலாஷைகளுடன் நேரடியாகத் தொடர்புடைய இந்த மாகாண சபை கட்டமைப்பை, தேர்தல் நடத்தாமல் தொடர்ந்தும் முடக்கி வைக்க முற்படுவது சிறுபான்மை மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.

ஆரம்பம் முதலே மாகாண சபை முறைமையை எதிர்த்துவந்த ஜே.வி.பி, இன்று அதனை அவர்களது தலைமை அலுவலகத்திலிருந்து ஒரு தனி நபரின் அறிக்கை மூலம் புதைக்கப் பார்க்கிறதா என்ற சந்தேகம் எழுகிறது.

சிறுபான்மையினரின் அரசியல் அபிலாசையான மாகாண சபைத் தேர்தலை காலவரையறையின்றி ஒத்திவைப்பதும், அதனை ஒரு கட்சிச்செயலாளர் ஊடகங்களுக்கு அறிவிப்பதும் ‘மாற்றத்தை’ நோக்கி வாக்களித்த மக்களை ஏமாற்றும் செயலாகும்.

சிறுபான்மை மக்களின் தீர்த்து வைப்போம் என்று வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் இப்போது தம்மை ஏமாற்றுகிறது என்பதை மக்கள் புரிய ஆரம்பித்துள்ளார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

# முகத்துவாரத்தில் இடம்பெற்ற இலவச மருத்துவ முகாம்



(எம்.எச்.எம்.சியாஜ்)

கற்பிட்டி செடோ ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டிலும், கொழும்பு சமய சமூக நடுநிலை மையத்தின் நிதி பங்களிப்புடனும், கபோட் மற்றும் பிரஜைகள் பேரவையின் அனுசரணையுடன் ஒன்றிணைந்து எழுவோம் எனும் வேலைத்திட்டத்தின் ஊடாக கற்பிட்டி முகத்துவாரம் சிங்கள பாடசாலையில் இலவச மருத்துவ முகாம் (23) இடம்பெற்றது.

கற்பிட்டி முகத்துவாரம் மனித வாழ்வின் அத்தியாவசிய தேவைகளில் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள மீன்பிடியை வாழ்வாதாரமாக கொண்ட ஒரு மீன்பிடி கிராமமாகும் இக்கிராமத்தில் மூவீனங்களைச் சேர்ந்த சுமார் 200 குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் இவ்வாறான இலவச மருத்துவ முகாம்கள் காலத்தின் தேவையாக இருந்ததாகவும் இதற்கு முயற்சி செய்த சகல தரப்பினருக்கும் முகத்துவார கிராம மக்கள் தமது நன்றிகளையும் தெரிவித்தனர். மேற்படி இலவச மருத்துவ முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளர்கள் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றனர்.



கற்பிட்டி செடோ ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளரும் பிரஜைகள் பேரவையின் கற்பிட்டி அமைப்பாளருமான ஏ.ஆர். முனாஸ் தலைமையில் இடம்பெற்ற இவ் இலவச மருத்துவ முகாமில் கற்பிட்டி பிரதேச சபையின் உப தவிசாளர் சமன் குமார ஹேரத், உறுப்பினர்களான ஏ.ஆர்.எம் முஸம்மில், கே.கலைச்செல்வி மற்றும் இப்ஹாம், கிராம உத்தியோகத்தர் எம்.பீ.எம் அர்ஷத், சமய சமூக நடு நிலையத்தின் தேசிய அமைப்பாளர் பீ.மிலான் பெரேரா, உட்பட பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர் .

# தும்புளுவாவ வை. எம்.எம்.ஏ யின் புதிய நிர்வாகம்

(பாரா தாஹீர்)



ஹெம்மாதகம தும்புளுவாவ வை.எம் எம் ஏ நிர்வாக தெரிவு அந்நூர் ஜூம்ஆ பள்ளி வாசல் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. 2026 ஆம் ஆண்டுக்காக தெரிவு செய்யப்பட்ட நிர்வாக உறுப்பினர்கள் வருமாறு

தலைவராக எம்.எல். எம். ஸியாவுர் ரஹ்மான் (ஸஹ்ரி), செயலாளராக எம். எஸ். எம். ஹாரிஸ் (கபூரி), உப செயலாளராக எம். ஜே. எம். ஹனீபா (பாரி), உப தலைவராக எம். ஜே. எம். நிஸ்தார் ஆசிரியர், பொருளாளராக எம். ஆர். எம்.ரிபான் ஆசிரியர், ஏ.ஆர். எம்.ஜிப்ரி மீடியா உறுப்பினர்களாக எம். டி.எம். பாஹிம், ஏ.எச். எம். அன்வர், ஏ.டப்லியூ. எம். அஸ்மி, ஏ.எச். எம்.பாரிஹ், எம். ஜே.எம்.பயாஸ், எம். எச். எம்.அஹ்ஸன், எம். எச் புஹாரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியா பிரதேச செயலக கலாசார அதிகார சபையின் புதிய நிர்வாகத் தெரிவு



(எம்.ஏ.முகமட்)

மத்திய கலாசார திணைக்கள யாப்பின் பிரகாரம் 2026/2027ஆம் ஆண்டுக்கான கிண்ணியா பிரதேச கலை கலாசார வேலைத்திட்டங்களை சிறப்பாக முன்னெடுத்து செல்ல பிரதேச செயலாள தலைமையில் புதிய பிரதேச கலாசார அதிகார சபையின் நிர்வாக தெரிவு (21) பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போது கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச்.முகம்மது கனி நிர்வாக தலைவராகவும், நிருவாக கிராம உத்தியோகத்தர் ஏ.ஆர். நிஜாம்தீன்பதவி வழியாக உறுப்பினராகவும், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே.எம்.ஹில்மி ஒருங்கிணைப்பாளராகவும், ஏ.கௌரிதாசன் (கவிஞர்) கலாசார அதிகார சபையின் தலைவராகவும் , எம்.எம். தௌபீக்(எழுத்தாளர்) உப தலைவராகவும், ஏ.எம்.கஸ்புள்ளா (கவிஞர்) செயலாளராகவும், ஏ.டப்ள்யூ. வாக்கி (கவிஞர்) உப செயலாளராகவும், எச்.எம்.ஹலால்தீன் (எழுத்தாளர்) பொருளாளராகவும், அக்பர் சலீம் (நாடக கலைஞர்), எம்.ஏ.முகமட் (ஊடகவியலாளர்), ஆர். சதாத் (எழுத்தாளர்), எச்.ஏ.ஜெனீரா தௌபீக் (எழுத்தாளர்) , எம்.ரீ. சஜாத் (கவிஞர்) , எம்.றாபி ( சீனடி கலைஞர் ), ஆகியோர் உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாசில்குடா கடற்கரையில் சிரமதானப்பணி





(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்திற் கமைவாக “சுத்தமான கடற்கரைகளை கவர்ச்சிகரமான சுற்றுலா தளங்களாக மாற்றுவோம்” எனும் தொனிப் பொருளில் “நாடு முழுவதுமுள்ள கடற்கரைகளைச் சுத்தம் செய்யும் வேலைத்திட்டம்” (23) காலை 07 மணி தொடக்கம் மதியம் 11.30 வரை இடம்பெற்றது.

இலங்கை இராணுவத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இச்சிரமதானப்பணியில் இராணுவத்தின் கிழக்கு மாகாண கட்டளை தளபதி மேஜர் ஜென்றல் ஜனக பல்லேகும்பர கலந்து கொண்டதுடன், ஏனைய அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட செயலக உதவி அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்ந், கோறளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலாளர் ஜெயானந்தி திருச்செல்வம், ஓட்டமாவடி பிரதேச சபைத்தவிசாளர் எம்.எம்.எம்.ஹலால்தீன், வாழைச் சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.ஜீ.எஸ்.சஞ்ஜீவ, கல்குடா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஷிஹான் டிலங்க, கல்குடா பொலிஸ் நிலைய சுற்றுச்சூழல் பொறுப்பதிகாரி எம்.ஏ.றஹீம், தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட செயற்பாட்டாளர் கே.திலீப்குமார், கிழக்கு மாகாண சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பாசிக்குடாவுக்குப் பொறுப்பான முகாமையாளர் எம்.எச்.எம். மாஹிர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் வெலிகந்தை, புனாணை, நாவலடி இராணுவ முகாம் அதிகாரிகள், கல்குடா பொலிஸ் நிலைய அதிகாரிகள், கல்குடா யங் ஸ்டார் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள், கரையோரம் பேணல் திணைக்கள அதிகாரிகள், பாசிக்குடா உல்லாச உணவகங்களின் உத்தியோகத்தர்கள், சாரணர் அமைப்பினர், வாழைச்சேனை மற்றும் ஓட்டமாவடி பிரதேச சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

அருவிக்கரை



நாச்சியாதீவு பர்வீன்

# ஹஜ்ஜுப் பெருநாள் சிறப்பிதழ்

தியாகத்தின் சுடரான இப்ராஹிம் நபி குடும்பம் அனுபவித்த துயரத்தின் அடையாள வடிவமே தியாகத் திருநாளை நினைக்க வைக்கிறது. மகனை அறுத்து பலியிட கனவு கண்டு இறுதியில் இறைநாட்டத்தால் சொர்க்கத்து ஆட்டினை பலியிட்டு அதனை வருடம் தோறும் வசதி படைத்தவர்கள் ஏழைக்கு உவந்து வழங்கும் உழ்ஹியா எனும் கடமையாக்கி அறுத்துப் பலியிடச் சொல்லி நிற்கிறது இந்த தியாகத் திருநாள். ஆட்டையும் மாட்டையும் மட்டுமல்லாமல் நமக்குள் இருக்கின்ற கசடு பொறாமை வஞ்சகம் எல்லாவற்றையும் அறுத்துப் பலியிட்டு சுத்தமடைவோம். திருநாளை கொண்டாடுகின்ற அனைவருக்கும் தியாகத் திருநாளின் இதயத்து வாழ்த்துகளை இயம்புகிறேன்.

**நாச்சியாதீவு பர்வீன்**

## ஈமானின் சுவை

தள்ளாத மூப்பினிலே
தவித்திருந்த நேரமதில்
இல்லாள் ஹாஜரா
இன்புற்று சொன்ன செய்தி
இப்ராஹீம் நபியின்
உள்ளம் பூரித்ததுவே!

வல்லோன் இறைவன்
வாரிசொன்றை வழங்க
இஸ்மாயீல் என்றழைத்து
இதயத்தில் ஏந்தினார்கள்

அல்லாஹ் என்றதுமே
அடிபணியும் இறை தோழர்
பொல்லாத கனவொன்றால்
பொறுமையின்றி தவித்தார்கள்

இஸ்மாயீல் சிறு குழந்தை
இஸ்லாத்தின் நெறி சுமந்து
தந்தை தம் கனவு தனை
நிறைவேற்ற துணைநின்றார்

திடமான ஈமானால்
தியாகத்தை உணர்த்தி
வரலாறு தந்துவிட்டார்
வாழும் காலமெலாம்

ஈமானின் சுவை கண்டு
சோதனையை அவர்வென்று
சுவனத்து ஆடுதனை
அறுத்துப் பலியிட்டார்.

குர்பானின் வரலாற்றை
உலகறியச்செய்த நபி
இப்ராஹீம் குடும்பத்தின்
தியாகத்தை நினைவூட்டும்
தித்திக்கும் இந்நாளில்
தீனோரே உங்களுக்கு
பெருநாள் வாழ்த்துகள்.

**கவிஞர் சாஜஹான்,**
**கெக்கிராவ.**

## ஹஜ்ஜுப் பெருநாளே!

தியாகங்கள் நிறைந்த
திக்ருகள் சொரிந்த
தித்திக்கும் மாதமே!

இன்னல்கள் அகன்று
இன்பங்கள் தந்த
இப்றாஹிம் நபியின் மாதமே!

சோதனைகள் சூழ்ந்தும்
சோராத மாநபியின் மாண்பினை
போதனையாய் கூறும்
அருள் நிறைந்த வேதமே!

தியாகப் பெண் ஹாஜராவின்
துன்பங்களெல்லாம்
ஸபா மர்வாவிற்குள் தேங்கி நிற்க

மகன் இஸ்மாயீலின் தாகங்கள்
ஸம் ஸம் ஊற்றெடுத்து
தீர்ந்து போக..

பலியிடும் மகன் கழுத்து
அழுத்தமாய் அறுத்தும்
வெட்ட மறுக்க ...
பாறையோ பிளந்து
பாதியாய் கிடக்க
பாவம்..
அப்பாவி நபியின்
உள்ளம் பதறித்துடிக்க ...

ஆட்டை அறுத்துப் பலியிடும்
அள்ளாஹ்வின் ஆணை கிடைக்க
தியாகச் செம்மலின்
நன்நாளை நினைவூட்ட

இன்பமாய் வந்தது ஹஜ்ஜுப்
பெருநாளே!

சிரித்து நகைத்த
ஷைத்தானுக்கு கல்லெறிந்து
சிறப்பாய் வந்த திரு நாளே
சிறக்கும் இன்னும்
புதிதாய் பிறக்கும்
புனித ஹஜ்ஜ/ப் பெரு நாளே!

நாமும் தியாகங்கள் பல செய்து
சிறப்பாய் வாழ்வோம்
இம்மண் மீதிலே!

**லுதுபியா லுக்மான்**

## தியாகத் திருநாள்

இறையோனின் உரையேற்ற இப்ராஹிம் நபியவரின்
இவ்வுலக வாழ்க்கையதன் தியாகங்களை நினைவுகூறி
மறையதனில் எடுத்தியம்பும் உயர்கடமை ஹஜ்ஜதனை
முறையாக நிறைவேற்றி மானிடர்கள் மகிழ்ந்திடும்நாள்!

வெள்ளையனும் கறுப்பனும் ஆசியனும் ஆபிரிக்கனும்
வேற்றுமைகள் விட்டொழித்து வல்லவனின் புகழுரைத்து
பிள்ளைமனம் கொண்டவராய் தோளுடன் தோளிணைத்து
பார்முழுதும் ஒற்றுமையைப் பரப்பிடவே வந்திட்டநாள்!

மறுமையதன் மஹ்ஷர்தனை மனங்களிலே உணர்த்துவதாய்
மக்காநகர் கூடிமக்கள் இஹ்ராமெனும் உடைதரித்து
வெறுமையா ன கரங்களுடன் விழிகளிலும் நீர்வழிய
வறுந்தி மன்றாடியதால் விருந்தளிக்க வந்தநன்னாள்!

மக்களவர் மனங்களிலே பக்குவமாய்ப் புகுந்திருந்து
மறையதனைப் புறக்கணித்து மறுமையையும் மறக்கச்செய்து
திக்கெதிலும் தீமைசெய்ய தூண்டிவிடும் ஷைத்தானுக்கு
தக்கதொரு பாடம்சொல்லி தரணியிலே மகிழ்ந்திடும் நாள்!

ஆற்றல்மிகு அல்லாஹ்வின் அடிமைகள் நாமென்று
அடிமனதில் உணர்ந்தவராய் நொடியும்தீங்கு செய்திடாது
ஏற்றம்மிகு பாதையனில் பாதங்களை தினம்பதித்து
ஏகந்தனைப் போற்றுவோர்க்கு இன்னுமொரு நத்திருநாள்!

**பஸ்லி ஹமீட்**



## தக்பீர் முழக்கம் போக்கும் கலக்கம்



உலகம்
ஒரு கூரையின் கீழ்
குடியிருக்க வந்திருக்கிறது

வர்க்க பேதங்களெல்லாம்
கிழித்தெறியப்பட்டு
இதயங்களெல்லாம்
இஹ்ராமைப் போர்த்திக் கொண்டு

ஒற்றுமைக் கயிற்றால்
கட்டப்பட்ட
ஆன்மாக்கள்

அங்கே
மெய்கள் அல்ல
ஆன்மாக்கள்தான்
ஆட்சி செய்கின்றன

நாங்கள்
வேறு வேறு
என்பவைகளெல்லாம்
பொய்யாகிப் போன
மண்

ஒன்றாக நின்று
அவர்கள் செய்த
தியாகம்

உம்மத்துக்கு
புதிய உதிரம்
பாய்ச்சுகிறது
இனி
தலைகவிழப் போவதில்லை
இந்த உம்மத்

இதோ அங்கே
சபதம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்
எங்கள் ஹாஜிகள்

உள்ளத்தின் மிருகங்களை
குர்பான் கொடுத்து
தங்களை கூர்மையாக்கி
இருக்கிறார்கள்

அவர்கள் உம்மத்துக்கு
போர்த்திய
ஷைத்தானிய
குண்டு துளைக்காத
இஹ்றாம் எனும்
கேடயம்

இந்த உம்மத்தை
பாதுகாத்துக் கொண்டே
இருக்கும்

அது
உலகெங்கும்
தக்பீர் முழக்கம்
ஓங்கி ஒலிக்க
மினாரத்தாய்
கம்பீரமாய் நிற்க
வைக்கும் !

**- என். நஜ்முல் ஹுசைன்**

## பாவத்தூசியை கழுவும் புதுமழை!

ஈதுல் அழ்ஹா இயம்பும்
ஈமானிய பாடம் அது
இறைநேசத்தின் ஓடம்
இப்ராஹீமின் ஈமான்...
பாலகர் இஸ்மாயீலின் பணிவு...
ஹாஜராவின் நம்பிக்கைக்கு
இறைவனின் வெகுமதி .

அது திருநாள் அல்ல. இறைவனுக்கும்
இதயத்துக்குமான
ஒப்பந்தத்தின்
நினைவு நாள் .
அந்நினைவில் கஹ்பாவை
இதயக் கால்கள் தவாப் செய்கின்றன..
ஹாஜராவின் நம்பிக்கை
இன்னும் ஓடுகிறது
சபா மர்வாவுக்கிடையில்

அரபா வெளி
அகிலத்தின் இரட்சகனின்
அதிசயத்தை சொல்லி நிற்கும்

முஸ்தலிபாவின் அமைதியில்
மனிதன் தன் இதயத்தின்
சத்தத்தை உணர்கிறான்...

பாவத்தூசியை கழுவும்
புதுமழை போல
வருடம் தோறும்
வந்தெம் எம்மை
சுத்தப்படுத்த வருகிறது ஈதுல்
அழ்ஹா.....

**கல்ஹின்னை**
**சிபானா சனூன்**

## அல்லாஹ்வின் பரிசு

தியாகத்தை நினை கூரும் திருநாள்
தீனுல் இஸ்லாமியர் நம்
பெருநாள்
அல்லாஹ் எமக்களித்த
அருள் நாள்
ஆண்டாண்டாய் ஹஜ் மாதம்
வரும் நாள்

ஈடில்லா அர்ப்பணிப்பை
பகர் நாள்
இப்லீஸின் இலட்சியத்தை
தகர் நாள்
பொறுமைக்கு பரிசை
நிகர் நாள்
பூலோகம் அல்லாஹ்வைப்
புகழ் நாள்

தீனோர்கள் திரு மண்ணில்
திரள் நாள்
திசை தோறும் தக்பீர்
எழும் நாள்
தோளோடு தோள் சேர
தொழும் நாள்
தூய்தான துல் ஹஜ்ஜ்
பெருநாள்

உண்டு உடுக்கின்ற
பொன் நாள்
உறவுகளை பார்க்கின்ற
நன் நாள்
நபிமார்கள் தியாகித்தர்
அந் நாள்
நாமும் தியாகிப்போம்
இந் நாள்



## மினாவின் பலிபீடமும்... மனிதகுல தியாகமும்

பாலைவன மணற்பரப்பில் அன்று
பரிதவித்துப் போனது ஓர் உயிர் மட்டுமன்று
இறைவனின் கட்டளைக்கு ஈமான் திறந்து – தன்
இன்சுவைக் குழந்தையை விட்டகன்றார் தந்தை
அன்னை ஹாஜராவின் பாசப் போராட்டம்,
அலைமோதும் ஸஃபா மர்வா ஓட்டம்
பிஞ்சுப் பாலகனின் கால் பட்ட இடத்தில்,
சுரந்ததுவே ஸம்ஸம் அமுதூற்றின் வெள்ளம்.

ஆண்டுகள் உருண்டோடி வளர்ந்த மகனை,
ஆசையாய் அணைத்திட்ட தந்தை இப்றாஹீமை,
மீண்டுமொரு சோதனையால் சோதித்தான் இறைவன்,
கனவிலே வந்ததொரு கட்டளையின் வடிவம்.
"ஈன்றெடுத்த உங்கள்மகன் இஸ்மாயீல் தன்னை,
எனக்காகப் பலியிடுவாய்" என்றதுவே கனா.
பெற்ற மனம் பதறவில்லை, துணியவில்லை பின்வாங்க,
உற்ற மகனிடமே உரைத்தார் அந்த வினாவை.
மகன் சொன்ன வார்த்தையது சரித்திரத்தின் சிகரம்.
"மறுக்காமல் செய்திடுங்கள் அல்லாஹ்வின் கட்டளையை.
பொறுமையோடு நான் நிற்பேன் பலிபீடக் கல்லில்,
பெருமையோடு நிறைவேற்றுங்கள் இறைவனின் வழியில்."
கண்ணைக் கட்டிக்கொண்டு கத்தியைக் கையில் ஏந்தி,
விண்ணதிரும் தக்பீர் முழக்கத்தை நெஞ்சில் தாங்கி,
செல்ல மகனின் கழுத்தில் கத்தி வைத்த நொடியில்,
வல்லோன் அல்லாஹ்வின் பேரருள் இறங்கியது புவியில்.

"இப்றாஹீமே நீர் கனவை உண்மைப்படுத்தி விட்டீர்
உங்கள் தியாகத்தின் உச்சத்தை உலகிற்கு உணர்த்திவிட்டீர்."
வானவர் ஜிப்ரீல் ஏந்திவந்த ஆட்டினைக் காட்டி,
மகன் தப்பி, ஆடு பலியானது அங்கு மாற்றி.
அன்றுமுதல் இன்றுவரை, இன்ஷா அல்லாஹ் என்றும்,
அகிலத்து முஸ்லிம்கள் நெஞ்சில் ஆழப் பதியும்.
ஆடு, மாடு, ஒட்டகங்கள் பலியிடும் நாளன்று,
ஆணவமும் சுயநலமும் பலியாக வேண்டும் இன்று.

ஏழை எளியோரின் பசிப்பிணி தீர்த்து,
இன்முகத்தோடு குர்பானி இறைச்சியைப் பகிர்ந்து,
ஹஜ்ஜின் கடமைகளை மக்காவில் முடித்து,
ஒற்றுமைப் பெருநாளாய் – திடலில் கொண்டாடுவோம் கைகோர்த்து
இது மாமிசம் அறுக்கும் நாளல்ல,
நம் இதயத்து இச்சைகளை அறுக்கும் திருநாள்.
தியாகத்தின் இலக்கணமாய் திகழும் ஈதுல் அல்ஹா,
வாழ்த்துகிறோம் உலகினர்க்கு உன்னத ஹஜ்ஜிப் பெருநாள்.

**ஏ.நஸ்புள்ளாஹ்**

அருவிக்கரை



நாச்சியாதீவு பர்வீன்

## தியாகத்திருநாள்

அல்லாஹ்வின் கட்டளை
அருமை மைந்தனை
அறுத்துப் பலியிடு
துணிந்து நின்றார்
ஈமானிய தூண் இப்றாஹிம்

தந்தை மகன் ஈமானின்
உறுதி கண்டு இறைவனும்
ஆடொன்றை அறுத்து
பலியிட பணித்தான்

படைத்தவன் ஆணையை
பக்குவமாய் ஏற்றதனால்
இனிய இந்த நாள்
பெருநாளாய் மலர்ந்ததுவே

புத்தாடை தரித்து
புது மணம் பூசி
சொந்தங்கள் சேர்ந்து சந்தோஷிக்கும்
தியாகத் திருநாளாம்
இன்றைய தினம்
நபி இப்ராஹிம் குடும்பத்தின் தியாகத்தின்
பரிசாகும்

**அநுராதபுரம்**
**றஹ்மத்துல்லாஹ்**

# வருடத்தின் ஒருநாள் நந்தவனம் !

அரபா வெறும் நிலம் அல்ல –
கண்டங்கள் ஐந்தும்.
கலந்த கடல் ,
துளிகளால் அல்லாமல்
தலைகளால் உருவான சமுத்திரம்,
பனி போர்த்திய
மலை அடிவாரம் போல்
வெள்ளை இஹ்ராம்
போர்த்திய மனித சாகரம் !

அரபா வெறும் நிலம் அல்ல –
பிரார்த்தனை கரங்களில் இருந்து விழும்
பாவங்களை விழுங்கும் பாதாளம் !

உருகிக் கேட்கும் துவாக்களால்
அர்ஷின் கதவை தட்டும்
ஆஷாக் கோல் !

வேற்றுமைகளில் ஒற்றுமை காணும்
மாயா ஜாலத்தை நிகழ்த்தும் மைதானம் !

வெள்ளை உடுத்த அந்நிலத்தின்
கொள்ளை அழகு ,
வெள்ளை ஆடைகளில் அல்ல ,
வெளுத்த மனங்களின்
தெறிக்கும் பிரகாசத்திலிருக்கிறது !

அரபா வெறும் நிலம் அல்ல –
கண்ணீர் பன்னீர் ஆகும் இடம் !
இறைஞ்சுதல்கள் எல்லாம்
இறைவனை அடையும் தளம் !
குற்றங்களை ஒப்புவித்ததுமே
விடுதலை எழுதப்படும்
விசித்திர நீதிமன்றம் !

அரசன் அங்கு ஆண்டியாகிறான்,
ஆண்டி அங்கே அரசனாகிறான் !
பிறகு ........
அரசனும் ஆண்டியும்
மனிதர்களாக மாறும் மகத்துவம்
அங்கே நிகழ்கிறது.

அரபா வெறும் நிலம் அல்ல –
ஜபல் அர்ரஹ்மா அடிவாரத்தில்
ஆதமும் ஹவ்வாவும்,
சந்தித்த சரித்திரத்தின் சான்று !
மனித குல சந்ததி பெருக சந்தித்த பூமி

“அல்லா/ஹும்ம லெப்பைக்க
லா ஷரீக்க லகலப்பைக்க “
என்ற சப்தமே சங்கீதமாகும் சபா !

கற்கள் கால்களுக்கு
மலர்களாகும் மைதானம் !

பூக்கள் இல்லாமலேயே
மணக்கும் பூமி !
ஒருநாள் சுவாசித்தால்
வாழ்நாள் முழுக்க
வாசம் வீசும்
விசித்திர மலர்வனம் !



அரபா வெறும் நிலமல்ல !
அல்லாஹ் வானவர்களிடம்
பாருங்கள் என் உம்மத்தை என்று
பரவசப்படும் பாலை நிலம் !
பாவங்களைக் கழுவி பாலகர்களாக
பக்தர்களின் பட்டோலைகள்
மீள் பதிப்பிக்கப்படும் அச்சகம்.

வண்ணான் இல்லாமல்
வெள்ளாவியில் அவிக்காமல் ,
கறையகற்றும் சலவைக் குளம் !

அரபா வெறும் நிலமல்ல –
ஹஜ்ஜை கபூலாக்கும்
கர்ப்பப் பை !
மார்க்கத்தை பூரணப்படுத்திய
நபிகளின் பிரகடனத்தை
காதில்லாமலேயே கேட்ட
பாக்கியத்துக்குரிய பாலை நிலம் !
அரபா வெறும் நிலமல்ல –

அங்கே செத்துப் போகும் பாவி
அடுத்தநொடியே
மீண்டும் பிறக்கிறான் சிறு குழந்தையாய் !

என் ரப்பே !!
ஒரு முறையேனும்
என்னை அங்கே அழைப்பாயா !?
அந்தத்திருமண் மிதிக்க
கிருபைக்கண் திறப்பாயா !?

**ரவூப் ஹசீர்**



# தியாகத் திருநாள்

பேதம் என்ற சொல் இல்லை
பெரியோன் சிறியோன் என்றில்லை
மோதும் தேச முரணில்லை
மொழியால் யாரும் வேறில்லை
போதம் ஒன்றே கலிமாவால்
போர்த்துக் கொள்ளும் யாவர்க்கும்
சேதம் இல்லை என்றோதும்
சிறப்பை ஓதும் திருநாளாம்

கண்டம் என்ற கணிப்பில்லை
கல்வி கொண்டோர் தனியில்லை
விண்ட வேந்தர்க் குயர்வில்லை
வலியார் என்ற வரம்பில்லை
அண்டி நின்றே அல்லாஹ்வின்
அணிசேர் மாந்தர் யாவரு மே
கண்டார் நேசம் என்றாலே
களிகூர்ந் திடுமிப் பெருநாளாம்..

அன்பு தவிர வேறில்லை அருகே
நிற்போன் பகையில்லை
தன்னை மட்டும் நினைப்பதில்லை
தாழ்ந்தோர் என்ற பிரிவுமில்லை
உன்னை மட்டும் நாடி வந்தேன்
உள்ளம் கழுவ தேடி நின்றேன்
என்பது மட்டும் எண்ணமெனில்
ஏற்றம் இந்த பெருநாளாம்

பெருமை என்பதில் பெருமையில்லை
பேதமை கொண்டு பிரிவதில்லை
வெறுமையில் வாழ்வு சதமில்லை
வேகும் நரகில் விருப்பில்லை
அருமை நபிகள் ஆணையிட்ட
கருணை நம்மை ஆளுவதில்
ஒருமைப் பட்டே உயர்வோமெனில்
ஒளிரும் இந்த பெருநாளாம்

விட்டுக்கொடுத்தல் வலி இல்லை
விருப்பம் துறத்தல் இழப்பில்லை
கட்டி ஆள்தல் களிப்பில்லை
கப்ர்வரை அவை வருவதில்லை
தொட்டுக் கொள்ள இப்ராஹிம்
தூய நபிகள் காட்டியதை
விட்டு விடாது வழிதொடரின்
வெளிச்சம் இந்தப் பெருநாளாம்

இன்னுயி ரெனினும் பெரிதில்லை
இகத்தில் எதுவும் உயர்வில்லை
பின்னைய வாழ்வில்குறையில்லை
பெருந்தியா கத்துக் கழிவில்லை
தன்னை இழக்க முன்னின்ற
தகையோர் இஸ்மா யீல்நபிகள்
பன்னிச்சென்ற முன் வழியைப்
பழகின் பனிக்கும் பெருநாளாம் ..

**தமிழ் மாமணி**
**கலாபூஷணம்**
**அஸ்ரப் சிஹாப்தீன்**



# களுத்துறை மாவட்ட பள்ளிகளில் ஹஜ் விஷேட ஏற்பாடுகள்

**(பீ.ம். முக்தார் )**

புனித ஹஜ்ஜுப் பெருநளை முன்னிட்டு களுத்துறை மாவட்டத்தில் பள்ளிவாசல்கள், ஸாவியாக்கள் மற்றும் தக்கியாக் களில் விசேட சமய நிகழ்ச்சிகள் இம்முறையும் ஏற்பாடு செய்யப் பட்டது.

பள்ளிவாசல்களிலும், திறந்த வெளி அரங்குகளிலும் பெருநாள் தொழுகை, கொத்பா பிரசங்கம், துஆப் பிராத்தனை, திக்ர், ஸலவாத் மஜ்லிஸ் உட்பட பல நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை பள்ளிவாசல் மற்றும் ஸாவியா தக்கியா நிர்வாக சபை ஏற்பாடு



செய்துள்ளது.

பெண்களுக்கும் பெருநாள் தொழுகை பள்ளிவாசல்களில் வேறாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உழ்ஹியா (குர்பான்) கடமையை மேற்கொள்ளவும் இம் மாவட்ட மக்கள் தயாராகி வருகின்ரமை குறிப்பிடத்தக்கது.

# எழுத்தாளரும் இலக்கிய ஆளுமையுமான ஷா நவாஸ் எழுதிய “ருசிபேதம்” நூல் வெளியீட்டு விழா







**(திருச்சி.ஷாகுல் ஹமீத்)**

சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளரும் இலக்கிய ஆளுமையுமான ஷா நவாஸ் எழுதிய, தனது புதிய நூலான “ருசிபேதம்” நூலின் முன்வெளியீட்டு பிரதியை சமூக ஆர்வலரும் ராயல் கிங்ஸ் குருப் நிறுவன தலைவர் சிராஜுதீன் அவர்கள், நூலின் சிறப்பு பிரதியை பெற்றுக்கொண்டார்.

இந்த சந்திப்பு இலக்கியம், தமிழ் மொழி வளர்ச்சி, சமூக மாற்றங்கள் மற்றும் சிங்கப்பூரின் பல்துறை கலாசார வாழ்க்கை குறித்து அர்த்தமுள்ள உரையாடல் இருந்தது.

புதிய நூலான “ருசிபேதம்” உணவை வெறும் அனுபவமாக மட்டும் பார்க்காமல், அதன் பின்னணியில் உள்ள வரலாறு, அரசியல், கலாசாரம், மொழி, மதம், சந்தை அமைப்புகள், குடியேற்ற வாழ்க்கை மற்றும் மனித உணர்வுகளை இணைத்து சிந்திக்க வைக்கும் விதமாக எழுதப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதனால் இந்த நூல் தமிழ் வாசகர்களிடையே பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சர்வதேச தரமான கல்விக்கான அமைப்பு மற்றும் அமேசான் கல்லூரி இணைந்து ஏற்பாடு செய்த சர்வதேச தரமான கல்வி மாநாடு 2026








சர்வதேச தரமான கல்விக்கான அமைப்பு மற்றும் அமேசான் கல்லூரி இணைந்து ஏற்பாடு செய்த சர்வதேச தரமான கல்விக்கான மாநாடு ஸ்ரீலங்கா / பவுண்டேஷன் இன்ஸ்டிட்யூட் இல் வெற்றிகரமாக நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கல்வியாளர்கள், கல்வித் துறை நிபுணர்கள், ஆய்வாளர்கள் மற்றும் இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளிலிருந்து வந்த 17 சர்வதேச பிரதிநிதிகள் கலந்து கொண்டு, தரமான முன்பள்ளிக் கல்வி மேம்பாடு, புதுமையான கல்வி நடைமுறைகள் மற்றும் சர்வதேச கல்வி ஒத்துழைப்புகள் குறித்து கலந்துரையாடினர்.

வுஏநுஊ-இல் பதிவு செய்யப்பட்ட உயர்கல்வி நிறுவனமாகிய அமேசான் கல்லூரி உயர்ந்த கல்வித் தரநிலைகளை பேணுவதிலும் கல்வி மேம்பாட்டை முன்னெடுப்பதிலும் தனது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும் கொழும்பு பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தருமான பேராசிரியர் ஷாணிக்கா ஹிரிம்புரகம கலந்துகொண்டார்.

மாநாட்டில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்களாக மேல்மாகாண கல்வி, கலாசாரம், கலை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ஜீ. எல். வேர்மன் பெரேரா, கொழும்பு பல்கலை கழக பேராசிரியர் ரஞ்சித் பாண்டார, வடமத்திய மாகாண ஆரம்பக் குழந்தைகள் அபிவிருத்தி ஆணையத்தின் முன்னாள் பணிப்பாளர் நிழந்த ஏகனாயக்க, சர்வதேச தரமான கல்வி சங்கத்தின் தலைவர் ஜனக கமல்கோட, அமேசான் கல்லூரி பணிப்பாளர் இல்ஹாம் மரிக்கார், மேலும் இந்தியா மற்றும் நேபாளத்திலிருந்து வந்த பல சர்வதேச பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் மாநாட்டின் வெற்றிக்கு பங்களித்த பேச்சாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் பிரதிநிதிகளை பாராட்டி விருதுகளும் வழங்கிவைக்கப்பட்டன.

## புத்தளம் – அருவைக்காடு வரையான பாதையில் புகையிரத சேவையை ஆரம்பிக்க மக்கள் கோரிக்கை



**(எம்.எச்.எம்.சியாஜ்)**

புத்தளத்திலிருந்து அருவைக்காடு வரைக்கும் பொருளாதாரத்தை மட்டும் கருதி புகையிரதப் பாதை அமைக்கப்பட்டு நீண்டகாலமாக சுண்ணக்கல் அகழ்விற்காக மட்டும் பயன்படுத்தப்பட்டு வரும் புகையிரதப் பாதையில் மக்களின் நலன்கருதி மக்கள் பயணப் போக்குவரத்து புகையிரத சேவையை ஆரம்பிக்குமாறும் அத்தோடு அதற்கு பொருத்தமான இடத்தில் புகையிரத நிலையமும் அமைக்கப்பட வேண்டும் எனவும் புத்தளம் தூய தேசத்திற்கான கட்சியின் ஊடாக அரசிற்கும் போக்குவரத்து அமைச்சர் உட்பட சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கும் பொது மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

புத்தளம் மாவட்டம் நாட்டின் பொருளாதாரத்தில் மின்சாரம், சீமேந்து, விவசாயம் மற்றும் மீன்பிடி என பல்வேறு வகையில் பங்களிப்பு செலுத்தி வருகின்றது.

அதன் அடிப்படையில் புத்தளத்திலிருந்து அருவைக்காடு வரை பொருளாதார நோக்கை மட்டும் மையமாக கொண்டு அமைக்கப்பட்டு நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வரும் புகையிரதப் பாதையில் இப்பகுதியில் உள்ள எழுவன்குளம், கரைத்தீவு, சேராக்குழி மற்றும் கங்கைவாடி ஆகிய கிராமங்களை உள்ளடக்கியதான பொது மக்கள் புகையிரத பயணச் சேவையை ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கையை புத்தளம் தூய தேசத்திற்கான கட்சியின் தலைவர் இஷாம் மரிக்கார் ஊடாக பொது மக்கள் முன் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை ஹாஜிகளுக்கான மினா, அர:பா வசதிகள் குறித்து பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் தலைமையில் சவூதியில் விசேட கலந்துரையாடல்





**(ஏ.எஸ்.எம்.ஜாவித்)**

இம்முறை ஹஜ் யாத்திரையில் பங்கேற்கும் இலங்கை பக்தர்களுக்கான அதிகபட்ச சேவைகள் மற்றும் வசதிகளை உறுதி செய்யும் நோக்கில், மத விவகாரங்கள் மற்றும் கலாசார விவகாரங்களின் பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் தலைமையில் (24) சவூதி அரேபியாவில் உள்ள இலங்கையின் 'சிலோன் ஹவுஸ்' இல் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை ஹஜ் குழுவின் தலைவர் ரியாஸ் மிஹ்ஃலார் உள்ளிட்ட குழு உறுப்பினர்கள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் ஹஜ் முகவர்கள் சார்பாக பிரதான மொனசிம்களும் கலந்து கொண்டனர்.

ஹஜ் யாத்திரையின் மிக முக்கியமானதும் கடினமானதுமான கட்டங்களான மினா மற்றும் அரஃபா ஆகிய புனித பூமிகளில் இலங்கை பக்தர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள கூடாரங்கள் மற்றும் சுகாதார வசதிகளின் தற்போதைய நிலைமை மற்றும் ஹஜ் நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

யாத்திரீகர்கள் எவ்வித தடையுமின்றி தமது மத வழிபாடுகளில் ஈடுபடும் வகையில் தங்குமிடம், குளிரூட்டி வசதிகள், குடிநீர் மற்றும் சுகாதார அமைப்புகளை சிறந்த முறையில் தயார்படுத்துவது குறித்து பிரதி அமைச்சர் இதன்போது கவனம் செலுத்தினார்.

## ஹாபிழ்கள், ஆலிம்களுக்கான அல்குர்ஆன் உயர் கற்கைநெறி ஆரம்ப நிகழ்வு







ஏறாவூர் தாருல் உலூம் அரபுக் கல்லூரி யில் ஹாபிழ்கள் மற்றும் ஆலிம்களுக்கான அல்குர்ஆன் உயர் கற்கைநெறியின் ஆரம்ப நிகழ்வு (23) வெகுவிமர்சையாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்லூரியின் ஸ்தாபகர் அல் ஹாபிழ் இசட்.ஏ.நஸீர் அஹமட் தலைமையிலும், கல்லூரியின் பணிப்பாளர் அல் ஹாபிழ் ஏ.கே.சுஹைல் அஹமட் (மஜீதி) இன் ஒருங்கிணைப்பிலும் இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாக அஷ்ஷேக், அல் ஹாபிழ் பிர்னாஸ் நவாஸ் (ஷாபிஈ) கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். அத்துடன் பல உலமாக்கள், ஹாபிழ்கள், குர்ஆன் கல்வியாளர்கள் மற்றும் சமூக முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

## கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் பல்வகை தின நிகழ்வு



**(எம்.ஏ.முகமட்)**

சர்வதேச உயிர் பல்வகைமை தினத்தை முன்னிட்டு, சுற்றாடல் முன்னோடி படையணி மாணவர் , பொறுப்பாசிரியர்கள் மற்றும் பாடசாலை இணைப்பாளர் பங்கு பற்றலுடன் கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரியில்( 22) அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

முதன்மை விருந்தினராக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கிண்ணியா வலய ஆணையாளர், விவசாய ஆசிரிய ஆலோசகர் எம். எம் இபாதுள்ளா கலந்து கொண்டதுடன், கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் முதல்வர் எஸ்.எம். றஹீம் ஆலோசனைக் கமைவாக நிகழ்வு சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# உழ்ஹிய்யாவும் அதன் தாத்பரியங்களும்



அஷ்ஷெய்க் S.H.M. இஸ்மாயில் (ஸலபி)

துல் ஹஜ் மாதம் பிறை 10 அன்று பெருநாள் தொழுது முடிந்ததில் இருந்து, அய்யாமுத் தஷ்ரீக் பிறை 11, 12, 13 அன்று இறுதி நேரம் வரை உள்ள கால கட்டங்களில் ஒட்டகம், ஆடு, மாடு ஆகிய பிராணிகளை அல்லாஹ்வுக்காக அறுப்பதையே உழ்ஹிய்யா என்று கூறப்படும். பொதுவாக இதற்குக் குர்பான் என்றும் கூறப்படும். குர்பானுக்கும் உழ்ஹிய்யாவுக்கு மிடையில் வித்தியாசங்கள் உள்ளன. குர்பானை யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் செய்யலாம். எதை வேண்டுமானாலும் குர்பான் கொடுக்கலாம். ஆனால், உழ்ஹிய்யாவுக்கு காலம், நேரம், கொடுக்கப்படும் பிராணி அனைத்துமே வரையறை செய்யப்பட்டதாகும்.

**பின்னணி:**
இப்றாஹீம்(ர) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையை ஏற்று தனது மகன் இஸ்மாயீல்(ர) அவர்களை அறுக்க முன்வந்தார். இஸ்மாயீல்(ர) அவர்களும் அல்லாஹ்வுக்காக தனது உயிரைத் தியாகம் செய்ய முன்வந்தார்கள். இஸ்மாயீல் நபிக்காக அல்லாஹ் ஒரு ஆட்டை அறுக்குமாறு கட்டளையிட்டான். இந்த மாபெரும் தியாகத்தை நினைவுகூரும் வகையில் இக் கடமை பேணப்பட்டு வருகின்றது. அல்லாஹ்வின் அடையாளச்

**சின்னம்:**
உழ்ஹிய்யா என்பது இஸ்லாத்தின் அடையாளச் சின்னங்களில் ஒன்றாகும். இந்த அடிப்படையில் இது வலியுறுத்தப்படுகின்றது. 'இதுவே (அல்லாஹ்வின் போதனை) யாகும். எவர் அல்லாஹ்வின் அடையாளச் சின்னங்களை கண்ணியப்படுத்து கின்றாரோ, நிச்சயமாக அது உள்ளங்களின் பயபக்தியில் உள்ளதாகும்." (22:32)
உழ்ஹிய்யா அல்லாஹ்வின் அடையாளச் சின்னம் என்பதால் அதை கண்ணியப் படுத்துவது உள்ளத்தின் தக்வாவுக்கான அடையாளங்களில் ஒன்றாகும்.
வாஜிபா அல்லது கட்டாய சுன்னத்தா?
உழ்ஹிய்யாவை கட்டாயக் கடமை என சில அறிஞர்கள் கூறுகின்றனர். ஜூன்தப் இப்னு சுஃப்யான் அல்பஜலீ(வ) கூறினார்: 'நான் நபி(ச) அவர்களுடன் நஹ்ருடைய (துல்ஹஜ் 10 வது) நாளில் இருந்தேன். அப்போது அவர்கள், '(பெருநாள்) தொழுவதற்கு முன்பே (குர்பானிப் பிராணியை) அறுத்துவிட்டவர் அதனிடத்தில் (அதற்கு பதிலாக) வேறொன்றை (தொழுகைக்குப் பின்) அறுக்கட்டும். அறுக்காமல் இருப்பவர் (தொழுகை முடிந்தவுடன்) அறுக்கட்டும்" என்று கூறினார்கள். (புகாரி: 5562)
தொழுகைக்கு முன்னர் அறுத்தவருக்கு மீண்டும் அதற்குப் பகரமாக நபி(ச) அவர்கள் தொழுகையின் பின்னர் அறுக்குமாறு கூறியுள்ளார்கள். எனவே, இது கட்டாயமான கடமை. கடமை இல்லை என்றால் மீண்டும் அறுக்குமாறு நபி(ச) அவர்கள் உத்தர விட்டிருக்க மாட்டார்கள் என்பது இவர்களின் வாதமாகும்.
'துல் ஹஜ் (முதல்) பத்தில் நுழைந்துவிட்டால் உங்களில் உழ்ஹிய்யா கொடுக்க யாரேனும் விரும்பினால் அவர் தனது நகம், முடி, என்பவற்றைக் களைய வேண்டாம்." என நபி(ச) அவர்கள் கூறினார்கள்.
நூல்: முஸ்லிம்- 1977, அஹ்மத்- 6/289, தாரமீ- 1991, இப்னுமாஜா- 3149)
இந்த ஹதீஸ் உழ்ஹிய்யா கொடுக்கும் எண்ணம் உள்ளவர்கள் பிறை ஒன்றில் இருந்து உழ்ஹிய்யா கொடுக்கும் வரை நகம், முடி போன்றவற்றைக் களையக் கூடாது என்று கூறுகின்றது.
அவர் இக்காலகட்டத்தில் இல்லறத்தில் ஈடுபடுவது, மணம் பூசுவது போன்றன ஆகுமானதாகும். இந்த ஹதீஸில் உங்களில் ஒருவர் உழ்ஹிய்யாக் கொடுக்க விரும்பினால் என நபி(ச) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே, உழ்ஹிய்யா என்பது கட்டாயக் கடமை அன்று. விரும்பினால் கொடுக்கக் கூடியது என்று மற்றும் சில அறிஞர்கள் குறிப்பிடுகின்றார்கள்.
உழ்ஹிய்யா சார்பில் வலியுறுத்தி வந்துள்ள ஹதீஸ்களையும் இது போன்ற அறிவிப்புக்களையும் இணைத்துப் பார்க்கும் போது இது கட்டாயக் கடமை (வாஜிப்) அல்ல ஆனால், சுன்னா முஅக்கதா (வலியுறுத்தப்பட்ட சுன்னத்) என்பதை அறியலாம்.
எதைக் கொடுக்கலாம்?:
ஆடு, மாடு, ஒட்டகம் என்பவற்றையே உழ்ஹிய்யாக் கொடுக்க வேண்டும். தெளிவான நோய், குருடு, நொண்டி போன்ற குறைபாடுகள் அற்ற நல்ல



பிராணிகளையே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.
எது சிறந்தது?:
பல பிராணிகளில் எது சிறந்தது என்ற கேள்வி உள்ளது. சிலர் ஒட்டகம், மாடு, ஆடு என்று வரிசைப்படுத்துகின்றனர். மற்றும் சிலர் ஆட்டுக்கு முன்னிடத்தைக் கொடுக்கின்றனர். இறைத்தூதர்(ச) அவர்கள் கூறினார்கள்: 'ஜும்ஆ நாளில் கடமையான குளிப்புப் போல் குளித்துவிட்டுப் (பின்னர்) பள்ளிக்கு வந்தால் ஓர் ஒட்டகத்தை இறைவழியில் குர்பானி கொடுத்தவர் போலாவார். இரண்டாம் நேரத்தில் வந்தால் ஒரு மாட்டைக் குர்பானி கொடுத்தவர் போலாவார். மூன்றாம் நேரத்தில் வந்தால் கொம்புடைய ஆட்டைக் குர்பானி கொடுத்தவர் போலாவார். நான்காம் நேரத்தில் வந்தால் ஒரு கோழியைக் குர்பானி கொடுத்தவர் போலாவார். ஐந்தாம் நேரத்தில் வந்தால் முட்டையைக் குர்பானி கொடுத்தவர் போலாவார். இமாம் பள்ளிக்குள் வந்துவிட்டால் வானவர்கள் ஆஜராகி போதனையைக் கேட்கிறார்கள்." என அபூ ஹுரைரா(வ) அறிவித்தார். (புகாரி: 881)
ஜும்ஆ தினத்தில் பள்ளிக்கு முதலாவது சமுகமளித்தவருக்கு ஒட்டகம் குர்பான் கொடுத்த நன்மையும் இரண்டாவது, மாடு மூன்றாவது ஆடு குர்பானி கொடுத்த நன்மையும் கிடைப்பதாக இந்த ஹதீஸ் கூறுகின்றது. எனவே, ஒட்டகம், மாடு, ஆடு என்ற ஒழுங்களில்தான் சிறப்பு அமைந்துள்ளது என்று சில அறிஞர்கள் அபிப்பிராயப் படுகின்றனர்.
அடுத்து, ஒட்டகத்தின் பெறுமதி கூடுதலானதாகும். எனவே, அதிக தர்மம் உள்ளது என்ற வகையில் ஒட்டகம் முதல் இடத்தைப் பெறுகின்றது என்பது இவர்களது அபிப்பிராயமாகும்.
ஆடு கொடுப்பது சிறந்தது என்று கூறும் அறிஞர்கள் மற்றும் சில வாசகங்களை முன்வைக்கின்றனர். அனஸ் இப்னு மாலிக்(வ) கூறினார்: 'இறைத்தூதர்(ச) அவர்கள் கொம்புகள் உள்ள இரண்டு கறுப்பு வெள்ளை செம்மறியாட்டுக் கடாக்கள் பக்கம் சென்று தம் கரத்தால் அவற்றை அறுத்தார்கள்." மற்றோர் அறிவிப்பாளர் தொடர் வழியாகவும் இதே ஹதீஸ் அறிவிக்கப்பட்டுள்ளது. (புகாரி: 5554)
நபி(ச) அவர்கள் தொடராக ஆடு குர்பான் கொடுத்து வந்துள்ளார்கள். அத்துடன் இஸ்மாயீல்(ர) அவர்களுக்குப் பகரமாக அல்லாஹ் ஆட்டைத்தான் ஆக்கியான். இது பற்றி குர்ஆன் குறிப்பிடும் போது 'பி(ஃ)திப்ஹின் அழீம்" என்று கூறுகின்றது. 'இவருக்குப் பகரமாக, மகத்தான ஒரு பலிப் பிராணியை ஆக்கினோம்." (37:107) என்று கூறப்படுகின்றது. மகத்தான அறுப்பு என்று குறிப்பிடப் படுகின்றது. இந்த வகையில் ஆடுதான் மகத்தான குர்பானாகும் என்று சிலர் குறிப்பிடுகின்றார்கள். ஏழு பேர் சேர்ந்து மாடு கொடுப்பதை விட தனியாக ஆடு கொடுப்பது சிறந்ததாகும்.
கூட்டுக் குர்பான் ஆகுமானதா?
குர்பான் கொடுப்பதில் கூட்டுச் சேர்வது தொடர்பில் கருத்து வேறுபாடு நிலவி வருகின்றது. ஏழு பேர் சேர்ந்து ஒரு மாட்டைக் குர்பான் கொடுக்கலாம் என்பதுதான் பெரும்பாலான மார்க்க அறிஞர்களின் முடிவாகும். இதுவே சரியானதுமாகும்.
நபி(ச) அவர்களுடன் ஹுதைபிய்யா ஆண்டில் ஒட்டகத்தில் ஏழு பேரும், மாட்டில் ஏழுபேரும் இணைந்து அறுத்துப் பலியிட்டோம் என ஜாபிர் இப்னு அப்துல்லாஹ்(வ) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (நூல்: முஸ்லிம்- 1318-350, இப்னு மாஜா 2901, முஅத்தா 09)
நபி(ச) அவர்கள் காலத்தில் தமத்து அடிப்படையில் நாம் ஹஜ் செய்வோம். ஏழு பேருக்காக ஒரு மாட்டை அறுப்போம். அதில் நாம் கூட்டுச் சேர்ந்து கொள்வோம். என்று ஜாபிர்(வ) அவர்கள் கூறுகின்றார்கள். (நூல்: முஸ்லிம் 1318-355, அஹ்மத் 14265, அபூதாவூத் 2807, இப்னு ஹுஸைமா 2902)
இவ்வாறு வரக் கூடிய ஹதீஸ்களை ஆதாரமாகக் கொண்டு ஏழு பேர் சேர்ந்து மாடு கொடுக்கலாம் என்று கூறும் போது ஹஜ்ஜில் கொடுப்பது 'ஹதீ" அதை ஆதாரமாகக் கொண்டு உழ்ஹிய்யாவுக்கு சட்டம் எடுக்க முடியாது என மறு தரப்பினர் மறுக்கின்றனர். எனினும், பின்வரும் அறிவிப்பு பொதுவாக அமைந்துள்ளது.
'நாம் நபி(ச) அவர்களுடன் ஒரு பயணத்தில் இருந்தோம். உழ்ஹிய்யா தினம் வந்தது. ஒட்டகத்தில் பத்துப் பேரும் மாட்டில் ஏழு பேரும் கூட்டுச் சேர்ந்தோம்" என இப்னு அப்பாஸ்(வ) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (நூல்: இப்னு மாஜா 1331, திர்மிதி 905, 1501)
இந்த அறிவிப்பில் ஒரு பயணத்தில் என்று பொதுவாக வந்துள்ளதால் இதை பொதுவான ஹதீஸாகவே எடுக்க வேண்டும். சிலர் இது கூட ஹஜ் காலத்தில் நடந்தது என்கின்றனர். ஹஜ்ஜில் நடந்ததை ஒரு பயணத்தில் இருந்தோம் என்று மறைவாக அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே, ஏழு பேர் சேர்ந்து ஒரு மாடு கொடுப்பது ஆகுமானது என்பதே நெருக்கமான கருத்தாகப் படுகின்றது.
உழ்ஹிய்யா மாமிசத்தை எப்படிப் பகிர்வது?:
ஆரம்ப காலத்தில் நபியவர்கள் உழ்ஹிய்யா மாமிசம் அறுத்தவரின் வீட்டில் மூன்று தினங்களுக்கு மேலாக இருக்கக் கூடாது எனத் தடுத்தார்கள். அதாவது அறுப்பவர் தனது வீட்டில் தனக்கு மூன்று நாட்களுக்குத் தேவையான அளவு சேமித்து வைக்கலாம். மிகுதியை தர்மம் செய்து விட வேண்டும் என்பது அர்த்தமாகும். ஆனால், பின்னர் தேவையான அளவு மிச்சப்படுத்தி வைக்க அனுமதித்தார்கள். கஷ்டமான காலத்தில் மக்களுக்கு மாமிசம் சென்றடைவதற்காகவே இந்தக் கட்டளையைப் பிறப்பித்தார்கள்.
உழ்ஹிய்யா மாமிசத்தை பகிர்பவர் தனக்காகவும் தனது குடும்பத்திற்காகவும், ஏழைகளுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். தனக்கு சேமித்து வைத்துக் கொள்ளவும் அனுமதி உள்ளது.

மாற்று மதத்தவர்களுக்கு வழங்கலாமா?:
உழ்ஹிய்யா மாமிசத்தைக் காபிர்களுக்கு வழங்கக் கூடாது என்று எந்தத் தடையும் வராத பட்சத்தில் இதை அலட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. எனவே, நேரடியான தடைகள் இல்லை என்பதால் மாற்று மத நண்பர்களுக்கு உழ்ஹிய்யா மாமிசத்தை வழங்குவதைத் தவிர்க்க வேண்டிய அவசியம் இல்லை இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் எதிர்க்காத மாற்று மதத்தவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறு குர்ஆன் கட்டளையிடுகின்றது.
'எவர்கள் மார்க்க(விடய)த்தில் உங்களுடன் போரிடவில்லையோ அவர்களுக்கும், மேலும், உங்களை உங்களது இல்லங்களை விட்டும் வெளியேற்றவில்லையோ அவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்வதையும் அவர்களுடன் நீங்கள் நீதியாக நடப்பதையும் அல்லாஹ் உங்களுக்குத் தடுக்கவில்லை. நிச்சயமாக அல்லாஹ் நீதியாக நடப்பவர்களை நேசிக்கின்றான்." (60:08)
அவர்களுடன் நல்ல முறையில் நடத்தல் என்பதில் அறுத்த மாமிசத்தை அவர்கள் விரும்பும் பட்சத்தில் எதிர்பார்க்கும் நிலையில் அவர்களுக்கு வழங்குவதும் அடங்கக் கூடியதே! குறிப்பாக அந்நியர்கள் அண்டை வீட்டாராக இருந்தால் இது இன்னும் முக்கியத்துவம் பெறுகின்றது. அண்டை வீட்டாரைக் கண்ணிப்படுத்துமாறு இஸ்லாம் கூறுகின்றது. அயலில் இருக்கும் மாற்று மதத்தவர்களது வீட்டைத் தாண்டிச் சென்று முஸ்லிம்களுக்கு மாமிசம் வழங்குவது அயலவரை அவமதிப்பதாக அமைந்து விடும். இந்த வகையில் முஸ்லிம்களையும் இஸ்லாத்தையும் எதிர்க்காத மாற்று மதத்தவர்களுக்கு உழ்ஹிய்யா மாமிசத்தை வழங்குவதில் எந்தக் குற்றமும் இல்லை. குறிப்பாக நல்லெண்ணத்தை வளர்க்கும் என்றால் அப்படி வழங்குவது அவசியமாகி விடுகின்றது எனலாம்.
உழ்ஹிய்யா தொடர்பில் ஏராளமான சட்டங்களை நாம் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தாலும் சில குறிப்புக்கள் மட்டுமே இங்கே பகிரப்பட்டுள்ளன. இந்தக் கடமையைச் செய்பவர்கள் இது தொடர்பில் அறிஞர்களை அணுகி அறிந்து கொள்வது ஏற்றமானதாகும்.

# மிரட்டும் டொனால்ட் டிரம்ப்

# விடாப் பிடியில் ஈரான்

எஸ்.ஏ.சுஃப்யான்
(senior Journalist, Chennai - Tamilnadu, India)

சமாதானம் ஏற்படும் என்று உலகம் நம்பி கொண்டு இருக்கும் இந்த வேளையில் அதன் இறுதி தீர்வை எட்ட இயலாமல் தவிக்கும் நிலையில் ஈரான் மற்றும் அமெரிக்கா ஆகிய இரண்டு நாடுகளும் தொடர்ந்து போர் முரசு கொட்ட தொடங்கியது உலகிற்கு எந்தவொரு நிலையிலும் நல்ல செய்தி அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

ஹெர்மூஸ் ஜலசந்தி பகுதியில் உலகின் எந்த ஒரு நாடும் பணம் தர சம்மதிக்க மறுப்பதாக அமெரிக்கா வெளிவிவகார துறை அமைச்சர் மார்க்கோ ரூபியோ கூறி உள்ள நிலையில் ஈரான் உச்ச பட்ச தலைவர் மொஜ்தபா கொமேனி எந்தவொரு நிலையிலும் ஈரானில் இருந்து செறிவூட்டப்பட்ட யுரேனியம் தோரியம் ஆகியவற்றைப் வெளி நாடுகளுக்கு அனுப்பும் பேச்சுக்கே இடமில்லை என திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். அதே நேரத்தில் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தாங்கள் ஒரு போதும் ஈரான் கைவசம் செறிவூட்டப்பட்ட யுரேனியம் இருப்பதை அனுமதிக்க போவதில்லை என திடமாக கூறி வரும் நிலையில் தற்போதைய நிலையில் மீண்டும் ஒரு போர் தவிர்க்க இயலாது என்பதே யதார்த்தமான நிலையாகும்.இந்த நிலையில் அல்அரேபியா செய்திகள் அடிப்படையில் ஈரான் மற்றும் அமெரிக்கா ஆகிய இரண்டு நாடுகளும் இணைந்து ஏற்று கொள்ள கூடிய ஒரு திட்டம் உருவாகி வருவதாக வந்த செய்தி தற்போது ஏமாற்றத்தை அளித்துள்ளது என்பதே உண்மையாகும்.

இந்த நிலையில் இரான் போரின் போது அமெரிக்க விமானப்படைக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்த விரிவான அறிக்கையை அமெரிக்க நாடாளுமன்றம் (காங்கிரஸ்) வெளியிட்டுள்ளது. அந்த போரின் போது 42 அமெரிக்க விமானங்கள் அழிக்கப்பட்டன அல்லது சேதமடைந்தன அந்த அறிக்கை தெரிவிக்கிறது. இந்த அறிக்கை அமெரிக்க நாடாளுமன்றத்தின், நாடாளுமன்ற ஆராய்ச்சி சேவையால் (CRS) தொகுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் அமெரிக்க பாதுகாப்புத் துறை, பென்டகன், அமெரிக்க ராணுவத்தின் மத்திய கட்டளை மையம் (CENTCOM) மற்றும் செய்தி கட்டுரைகள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. சேதமடைந்த அல்லது அழிக்கப்பட்ட விமானங்களில் போர் விமானங்கள் மற்றும் டிரோன்கள் அடங்கும் என்று அவை கூறுகின்றன. இந்த விமானங்கள் தான் சர்வதேச நாடுகள் மத்தியில் அமெரிக்கா வின் ராணுவம் மற்றும் வான் ஆதிக்க வல்லமையை பறை சாற்றி வந்த நிலையில் அமெரிக்கா மிகப் பெரிய அளவில் ஆன பின்னடைவை ஏற்படுத்தும் என்பதால் அமெரிக்கா தற்போதைய நிலையில் முழுமையாக வான் படை தாக்குதலை பிற்படுத்தப்பட்டு வருவாதாக அமெரிக்கா சார்பு நிறுவனங்கள் கருத்துக்களை உலகம் உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

அதேநேரத்தில் ஆபரேஷன் எபிக் பியூரி' (Operation Epic Fury) நடவடிக்கையின் போது 24 அமெரிக்க டிரோன்கள் அழிக்கப்பட்டதாக ஏப்ரல் 9 வெளியான செய்தி கட்டுரை ஒன்றை அமெரிக்க நாடாளுமன்ற அறிக்கை மேற்கோள் காட்டியுள்ளது.இந்த அறிக்கையின்படி, இதில் குறைந்த மற்றும் அதிக உயரத்தில் பறக்கும் 'எம்கியூ-9' (MQ-9) ராப்டர்களும் அடங்கும். போரின் போது ஒரு அதிஉயர எம்கியூ-4சி (MQ-4C) டிரோனும்





அழிக்கப்பட்டதாக அறிக்கை கூறியது.இந்த ராணுவ இலக்குகளை ஈரான் துல்லியமான முறையில் தாக்குதல் நடத்தி அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இடையே உள்ள மிகப் பெரிய அளவில் ஆன வலிமையான கட்டமைப்பை உடைத்தெறிந்து உள்ளது குறிப்பிடத்தக்கது.

இக்கட்டான சூழ்நிலையில் நியூயார்க் டைம்ஸ் நாளிதழின் அறிக்கையின்படி, ஈரான் மீதான மீண்டும் போர் தாக்குதல் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகிறது. இந்த வாரத்திலேயே ஈரான் மீது புதிய தாக்குதல்களுக்கு நடக்கும் என்றும் கடந்த வாரம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா – ஈரான் மத்தியில் பல முறை பேச்சுவார்த்தை நடத்திய பின்பும் போர் முடிவுக்கு வராத நிலையில், அமெரிக்கா அதிபர் சீன பயணத்தை முடித்துக்கொண்டு ஈரான் மீது மீண்டும் தாக்குதல் நடத்த திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாக தற்போது வரை செய்திகள் வெளியாகியுள்ளன. இதற்கிடையில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கடந்த வார இறுதியில் தனது தேசிய பாதுகாப்பு அதிகாரிகளுடன் முக்கிய சந்திப்பு நடத்தினார். இவர்களுடன் துணை அதிபர் ஜேடி வான்ஸ், வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கோ ரூபியோ, சிஐஏ இயக்குநர் ஜான் ராட்கிளிஃப், சிறப்புத் தூதர் ஸ்டீவ் விட்காஃப் உள்ளிட்டோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.இந்தக் கூட்டத்தில் ஈரானின் எரிசக்தி நிலையங்கள், உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ராணுவ இலக்குகளைத் தாக்கும் விரிவான திட்டங்கள் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. மேலும் பென்டகன் அதிகாரிகள் ஏற்கெனவே ஈரான் போரின் அவசரத் திட்டங்களைத் தயாரித்துள்ளனர்.

அமெரிக்கா – இஸ்ரேல் கூட்டணியில் சிறப்பு படை நடவடிக்கை வாயிலாக ஈரானின் செறிவூட்டப்பட்ட யுரேனியம் கையிருப்பைப் கைப்பற்றும் திட்டமும் பரிசீலனையில் உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆனால் இத்தகைய நடவடிக்கை அமெரிக்க வீரர்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்பதால், உள்நாட்டு ஆதரவு குறையும் அபாயமும் உள்ளது.இந்தச் சூழலில் ஈரான் கடந்த ஒரு மாதத்தில் தனது ஏவுகணைத் தளங்களை வலுப்படுத்தியுள்ளதாக அமெரிக்க உளவுத்துறை அறிக்கைகள் கூறுகின்றன. குறிப்பாக ஹார்முஸ் ஜலசந்தியை ஒட்டிய 33 ஏவுகணைத் தளங்களில் 30 இன்னும் செயல்பாட்டில் உள்ளன. இது உலக எண்ணெய் வர்த்தகத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறும்.



அதே சமயம் தொழில்நுட்ப நிறுவனங்களுக்குக் கட்டணம் விதிக்க ஈரான் திட்டமிட்டு வருகிறது. இது போன்ற ஒரு திட்டத்தை செயல்படுத்தும் நிலையில் ஆண்டிற்கு இதன் மூலம் 15 பில்லியன் அமெரிக்க டாலர்கள் பணத்தை ஈட்ட முடியும் என்று ஈரான் திட்டம் தீட்டி வருவதாக கூறப்படுகிறது. இதனை ஈரானிய ராணுவ செய்தித் தொடர்பாளர் இப்ராஹிம் சோல்ஃபகாரி (Ebrahim Zolfaghari) தனது எக்ஸ் தளத்தில் உறுதி செய்துள்ளார். இந்த புதிய விதிகளின்படி கூகுள் (Google), மைக்ரோசாஃப்ட் (Microsoft), மெட்டா (Meta) மற்றும் அமேசான் (Amazon) போன்ற உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனங்கள் ஈரானிய சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, உரிமக் கட்டணங்களைச் செலுத்த வேண்டியிருக்கும்.

சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் தரவுகளின்படி, உலகளாவிய இணைய போக்குவரத்தில் 99% இந்த கடலடி Fiber-optic கேபிள்கள் மூலமே நடக்கிறது. குறிப்பாக ஐரோப்பா, ஆசியா மற்றும் பாரசீக வளைகுடா நாடுகளான UAE, கத்தார், பஹ்ரைன், குவைத் மற்றும் சவுதி அரேபியா ஆகியவற்றை இணைக்கும் நிதிப் பரிவர்த்தனைகள் மற்றும் தரவுப் பரிமாற்றங்கள் இதன் வழியேதான் செல்கின்றன. இந்த கேபிள்கள் வழியாக தினமும் சுமார் 10 டிரில்லியன் டாலர் மதிப்பிலான நிதிப் பரிவர்த்தனைகள் மற்றும் தரவுகள் கடந்து செல்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது.உலகளாவிய டிஜிட்டல் உள்கட்டமைப்பில் மிக முக்கிய பங்கு வகிக்கும் ஒரு மாபெரும் சர்வதேச கடலடி ஃபைபர்-ஆப்டிக் கேபிள் அமைப்பு. சுமார் 25,000 கிலோமீட்டர் நீளம் கொண்டது.கடந்த 15 ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட மிக நீண்ட கடலடி கேபிள் அமைப்புகளில் இதுவும் ஒன்று.

மிக முக்கியமாக கடந்த வாரம் யு ஏ இ அணு உலை நோக்கி மூன்று ட்ரோன்கள் வீசப்பட்ட நிலையில் இந்த தாக்குதலுக்கு பின்னணியில் ஈரான் ஆதரவு பெற்ற குழுக்கள் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. நல்ல வேளையாக அணு உலை ஜெனரேட்டர் மட்டுமே தாக்கப்பட்டது ஒரு வேளை கூலிங் பகுதியில் தாக்குதல் நடந்து இருந்தால் நிலைமை மிகவும் மோசமடைந்தது மத்திய கிழக்கு நாடுகள் மத்தியில் அணு கதிரியக்க பாதிப்பு ஏற்பட்டு இருக்கும் என்பது அபாயகரமான செய்தியாகும்.

இது போன்ற தாக்குதல் பரஸ்பரம் மாறி மாறி தொடர்ந்து நடைபெற்று வருகின்ற நிலையில் மத்திய கிழக்கில் ஒரு நிச்சயமற்ற நிலை ஏற்பட்டுள்ளது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது.

இறுதியாக அமெரிக்கா மிகப் பெரிய அளவில் ஆன பொருட் செல்வத்தை இந்த போரின் வாயிலாக இழந்து தவிக்கும் நிலையில் ஈரான் உடனான போரைத் தொடர்ந்து நடத்த வலிமையற்ற நிலையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. அதே நேரத்தில் சீனா மற்றும் ரஷ்ய தொழில்நுட்ப சாதனங்கள் தொடர்ந்து ஈரானுக்கு தங்கு தடையின்றி சப்ளை செய்து வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இதனைத் ரஷ்யா வெளிப்படை யாக தெரிவித்து இருக்கும் நிலையில் இது சர்வதேச நாடுகள் மத்தியில் உலக போராக மாற்றம் பெற்று விடுமோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஈரான் மற்றும் அதன் உச்ச பட்ச தலைவர் மொஜ்தபா கொமேனி ரகசியமாக அரசு அதிகாரிகள் மூலம் இறுதி போரைத் சந்திக்க தயாராக இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேநேரத்தில் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் புலி வாலை பிடித்த கதையாக முழுமையாக சிக்குண்டு தவிப்பதாக அமெரிக்கா உள்நாட்டு ஊடகங்கள் அவருக்கு எதிராக செய்திகளை வெளியிட்டு வரும் நிலையில் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அந்த நாளேடுகளை தேச துரோகிகள் என்று வர்ணிக்க கூடிய அளவில் நிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இறுதியாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நிதான்யாகுவின் தூண்டும் நடவடிக்கைகள் காரணமாக தான் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தற்போதைய நிலையில் இந்த போரில் சிக்குண்டு தவிப்பதாக அமெரிக்கா பொது சமூகத்தில் ஒரு கருத்து வலிமையான முறையில் ஏற்பட்டுள்ளதை எந்தவொரு நிலையிலும் தவிர்க்க கூடியதாக இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்.மற்றொரு நிலையில் ஈரான் அமெரிக்காவின் தாக்குதலை எதிர்கொள்ள தயாராக இருக்கும் நிலையில் அமெரிக்கா தாக்குதலை நடத்த மிகப் பெரிய அளவில் ஆன தயக்கம் காட்டி வருவதாக கூறப்படுகிறது. காரணம் ஈரான் ராணுவ வல்லமை கடந்த இரண்டு போரின் மூலம் நிறுபீக்கப்பட்ட நிலையில் இதனைத் நன்கு உணர்ந்து கொண்ட அமெரிக்கா மீண்டும் இது போன்ற சிக்கலான ஒரு போரில் ஈடுபட விருப்பம் இல்லாத நிலையில் முடிந்த அளவு போரை தவிர்க்க முயலும் நிலையில் ஒரு வேளை மீண்டும் போர் மூளும் நிலையில் இதுவும் தவிர்க்க முடியாத ஒன்றாக மாறுவது காலத்தின் கட்டாயம் என்பதே நிதர்சனமான உண்மையாகும்..

# தம்பலகாமத்தில் போதை தடுப்பு விழிப்புணர்வும் ஸ்டிக்கர் ஒட்டும் நிகழ்வும்



(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகமும் சமூக சேவைகள் திணைக்களமும் இணைந்து போதை தடுப்பு தொடர்பான ஸ்டிக்கர் ஒட்டும் பணியும் விழிப்புணர்வு நிகழ்வும் (25) இடம் பெற்றது.

திருகோணமலை கண்டி பிரதான வீதியின் தம்பலகாமம் சந்தி ஊடாக பயணம் செய்யும் வாகனங்களிலும், பொது கட்டிடங்கள் பொது இடங்களிலும் போதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் க.சதிசேகரன் தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் த.பிரணவன் உட்பட சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

"போதை பொருளை முற்றாக தவிர்ப்போம் நல்லதொரு சமுதாயத்தை கட்டியெழுப்பு வோம்" எனும் தொனிப்பொருளின் கீழ் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டது.

இதனை தொடர்ந்து பிரதேச செயலக மண்டபத்தில் விழிப்புணர்வு நிகழ்வொன்றும் இடம் பெற்றது. வளவாளராக கப்பல் துறை ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்தியர் மல்சா ஜயரட்ண கலந்து சிறப்பித்தார். நச்சுத்தன்மை கொண்ட போதை பாவனையின் பாதக விளைவுகள் மற்றும் உடல் உள ரீதியான பாதிப்புக்கள் சமூக சீரழிவு தொடர்பிலும் தெளிவூட்டப்பட்டது.

# குமாரிமுல்ல முஸ்லிம் ம.வி.யில் இடம்பெற்ற தரம் 11 மாணவர்களுக்கான செயலமர்வு

(றிஹ்மி ஹக்கீம்)

பூகொடை, குமாரிமுல்ல முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் தரம் 11 மாணவர்களின் கல்வி மற்றும் எதிர்கால இலக்குகளை வளப்படுத்தும் நோக்கத்திலான விசேட வழிகாட்டல் செயலமர் வொன்று (21) பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

கம்பஹா கல்வி வலயத்தின் ஏற்பாட்டில், தரம் 11 மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகளை மேம் படுத்தும் நோக்கில் "நுஹூரட ஹூருவெமு" எனும் தலைப்பில் இந்நிகழ்ச்சி ஒழுங்கமைக்கப் பட்டிருந்தது.

இந்நிகழ்வில் பிரபல ஆசிரியரும், மாணவர் பயிற்றுவிப்பாளருமான எம்.ரீ.எம்.நுஸ்ரத் வளவாளராகக் கலந்துகொண்டார். அவர் மாணவர்களுக்குத் தேவையான மிக முக்கிய ஆலோசனைகள், பரீட்சை வழிகாட்டல்கள் மற்றும் கல்விசார் உத்வேகங்களை வழங்கி மாணவர்களை வழிநடத்தினார்.

இத்தகையதொரு உயரிய வாய்ப்பினை மாணவர்களுக்கு ஏற்படுத்தித் தந்த கம்பஹா கல்வி வலயத்திற்கும், மாணவர்களின் எதிர்காலத்திற்காகத் தங்களை அர்ப்பணித்து வழிகாட்டிய வளவாளர் நுஸ்ரத் ஆசிரியர் அவர்களுக்கும் பாடசாலை சமூகம் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதாக பாடசாலையின் பிரதி அதிபர் ரயீஸா ரஸ்ஸாக் தெரிவித்துள்ளார்.



# வென்னப்புவயில் பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுத்த கொள்ளையன் அதிரடியாக கைது

(எம்.எச்.எம்.சியாஜ்)

வென்னப்புவ தங்கொட்டுவ வீதியில் நடந்து செல்லும் பெண்களைக் குறிவைத்து, மோட்டார் சைக்கிளில் மின்னல் வேகத்தில் வந்து தங்கச் சங்கிலிகளைப் பறித்துச் செல்லும் பயங்கர கொள்ளையன் ஒருவனை தங்கொடுவ பொலிஸார் அதிரடியாகக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வென்னப்புவ, பொரலஸ்ஸ - கொஸ்கஹவத்த பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வென்னப்புவ பொரலஸ்ஸ பகுதியில் பெண் ஒருவர் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவர், கண் இமைக்கும் நேரத்திற்குள் அந்தப் பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளார் இச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை (24) இடம்பெற்றுள்ளது.

திடீரென நடந்த இந்தச் சம்பவத்தால் அதிர்ச்சியடைந்தாலும், அந்தப் பெண் துணிச்சலுடன் உடனடியாகச் செயல்பட்டு சம்பவம் குறித்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

தகவல் கிடைத்த உடனே சுதாரித்துக் கொண்ட தங்கொடுவ பொலிஸ் நிலைய அதிகாரிகள், தப்பியோடிய கொள்ளையனை நோக்கி விரட்டிச் சென்றனர். சினிமா பாணியில் நடந்த இந்தத் துரத்தல் வேட்டையின் முடிவில், மோட்டார் சைக்கிளில் தப்பியோட முயன்ற சந்தேக நபரை பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்.

கைது செய்யப்பட்ட போது, அவரிடமிருந்து கொள்ளையடிக்கப் பட்ட பதக்கத்துடன் கூடிய தங்கச் சங்கிலி மீட்கப்பட்டது. அது மட்டுமன்றி, அவரிடமிருந்து ஐந்தாயிரத்து அறுநூற்று பத்து மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாவனல்லை வைத்தியசாலைக்கு புதிய வைத்திய அதிகாரி நியமனம்



(பாரா தாஹீர்)

மாவனல்லை தள வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் சமீர வேறொரு வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்று செல்லும் பிரியாவிடை வைபவமும், புதிய வைத்திய அதிகாரி டாக்டர் வசந்த பெரேராவை வரவேற்கும் நிகழ்வும் வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இவ் வைத்தியசாலை நிர்வாக அங்கத்தவர்களும், கேகாலை மாவட்ட ஜனாஸா சங்க உறுப்பினர் களும், மாவனல்லை வியாபாரிகள் சங்க உறுப்பினர்களும் ஏற்பாடு செய்த இந் நிகழ்வில் அவசர தேவை கருதி வைத்தியசாலையில் பழுதடைந்த திருத்தி எடுக்க முடியாத நிலையில் உள்ள டுப்ளக்ஸ் ஒன்றை வைத்திய அதிகாரி டாக்டர் சமீர வேண்டு கோளுக்கு இணங்க புதியதாக ஒரு இயந்திரத்தை பெற்றுக் கொள்வதற்கான நிதி திரட்டும் நிகழ்வையும் பிரதேச சபை உறுப்பினர் கே.எம் அமீனுல்லா ஆரம்பித்து தனது சொந்த நிதியில் ஐம்பதாயிரம் ரூபாவை வழங்கி ஆரம்பித்து வைத்தார்.

பத்து லட்சம் ரூபாய் மதிப்புள்ள இவ் இயந்திரத்தை வைத்திய சாலைக்கு தனவந்தர்களின் உதவியை வைத்திய சாலை நிர்வாகம் வேண்டி நிற்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தேசிய வெசாக் வாரத்தை முன்னிட்டு காரைதீவு கண்ணகி இந்து வித்தி.யில் வெசாக் விஷேட நிகழ்வு



எம்.எஸ்.எம்.ஸாகிர்)

தேசிய வெசாக் வாரத்தை முன்னிட்டு முதல் நாள் திகழ்வாக கமு/கமு/ கண்ணகி இந்து வித்தியாலயத்தில் வெசாக் தினம் பற்றிய விஷேட நிகழ்வு அதிபர் எஸ்.திருக்குமார் தலைமையில்(26) இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாக காரைதீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ. சஞ்சீவன் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக காரைதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதி காரி ஜெயரட்ண கலந்து சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்வில் மாணவர்களினால் பாடசாலை வெசாக் கூடுகள் அலங்கரிக்கப் பட்டிருந்ததுடன் இந் நிகழ்வில் மாணவர்களுக்கு பொலிஸ் நிலையத்தால் நீராகாரம் வழங்கப்பட்டதுடன் வெசாக் தினத்தின் முக்கியத்துவம் தொடர்பாக காரைதீவு பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி யினால் சிறப்புரையாற்றுப்பட்டது.

அத்துடன் இந் நிகழ்வில் ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயிற்சி ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# இந்திய அரசின் நிதியுதவியின் கீழ் இலங்கை பொலிஸ் துறைக்கு 134 ஒற்றை காப் வாகனங்கள் கையளிப்பு





**(ஏ.எச்.ஹஸ்பர்)**

இன்று நடைபெற்ற விழாவில், இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இந்திய அரசின் இலங்கை ரூபாய் 300 மில்லியன் நிதியுதவியின் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட 134 ஒற்றை காப் வாகனங்களை, இலங்கை ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க முன்னிலையில் இலங்கை காவல் துறைக்கு கையளித்தார்.

இவ்வாகனங்கள் போக்குவரத்து வசதிகளை வலுப்படுத்தவும், செயற்பாட்டு திறனை அதிகரிக்கவும், குறிப்பாக சவாலான நிலப்பரப்புகளில் அவசர சேவை நடவடிக்கைகளின் பதில் அளிக்கும் நேரத்தை குறைக்கவும் உதவும். இதன் முழுமையான நோக்கம் சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதை வலுப்படுத்தி, இலங்கை மக்களின் பாதுகாப்பையும் நலனையும் மேம்படுத்துவதாகும்.

ஒற்றை காப் வாகனங்களை வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2025 ஜனவரியில், இலங்கை காவல்துறையின் கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் கையெழுத்திடப்பட்டது. இது, 2024 டிசம்பரில் ஜனாதிபதி திசாநாயக்க இந்தியாவிற்கு மேற்கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க அரச முறை பயணத்திற்குப் பின்னர் முன்னெடுக்கப்பட்ட பல முயற்சிகளில் ஒன்றாகும்.

அப்போது அவர் மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இலங்கையின் சமூக-பொருளாதார முன்னேற்றத்திற்கு இந்தியாவின் அபிவிருத்தி உதவிகள் ஏற்படுத்திய மாற்றமிக்க தாக்கத்தை பாராட்டியதுடன், முக்கிய துறைகள் அனைத்திலும் மக்கள் மைய்ய அபிவிருத்தி கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்த ஒப்புக் கொண்டனர்.

இலங்கை காவல்துறையின் பயன்பாட்டிற்காக ஒற்றை காப் வாகனங்களை வழங்கும் இந்தத் திட்டம், 2025 ஜனவரியில் ஜனாதிபதி திசாநாயக்க ஆரம்பித்த "ஊடநயெ ளுசை டுயமெய" திட்டத்தின் நோக்கங்களுடன் இணைந்து செயல்படுகின்றது. குறிப்பாக வீதி பாதுகாப்பு, அவசர நிலைகளில் உள்ள மக்களுக்கு துரித உதவி வழங்குதல் மற்றும் சட்டம் ஒழுங்கை பேணுதல் போன்ற இலக்குகளால் இது ஊக்கமளிக்கப் பட்டது.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்த கையளிப்பு விழாவில், பொதுப் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் கே.எம். ஆனந்த விஜேபால, பிரதியமைச்சர் சுனில் வட்டகல, அமைச்சின் செயலாளர் டி.டபிள்யூ.ஆர்.பி. சேனவிரத்ன, பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, பிரதி பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் இலங்கை காவல் துறையின் அதிகாரிகள், மேலும் ஜனாதிபதி செயலகம் மற்றும் பொதுப் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய திறன் அபிவிருத்தி பாடநெறியின் வருடாந்த பாராட்டு மற்றும் விருது வழங்கும் விழா – 2026







**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் ஏற்பாடு செய்து நடாத்திய வருடாந்த பாராட்டு மற்றும் கௌரவிப்பு நிகழ்வு (24) ஞாயிற்றுக் கிழமை சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.பி. நௌஷாத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், கரையோரப் பிரதேசங்களின் அபிவிருத்திக்குழுவின் தலைவருமான அபூபக்கர் ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

நிகழ்வில், கடந்த வருடம் கலாசார மத்திய நிலையத்தில் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட பாடநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் அம்மாணவர்களைப் பயிற்றுவித்து தேசிய மட்டத்தில் சாதனை நிலை நாட்ட காரணமாய் அமைந்த வளவாளர்களைப் பாராட்டி கௌரவித்த நிகழ்வுடன் ஏனைய பாராட்டு, கௌரவம், நினைவுச் சின்னம் வழங்கும் வைபவங்களும் இடம்பெற்றதோடு, தேசிய பிரதீபா போட்டிகள் மற்றும் மாகாண மட்டங்களில் சாதனை நிலை நாட்டிய பலரும் விருது வழங்கி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வின் போது, கடந்த வருடம் (2025) திறன் அபிவிருத்தி பாடநெறியின் களிகம்பு பிரதீபா போட்டியில், பழமையான அணிகளை வீழ்த்தி, தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட சிரேஷ்ட அண்ணாவியார் கலாபூஷணம் ஏ. இஸ்ஸதீன் தலைமையிலான மத்திய நிலையத்தின் களிகம்பு (பொல்லடி) மாணவர்களின் களிகம்பு நிகழ்ச்சி, நிகழ்வில் மேடையேற்றப்பட்டதுடன், அந்நிகழ்வானது நிகழ்வுக்கு வருகை தந்திருந்த சபையோர் மனதைக் கவர்ந்தது அனைவரும் எழுந்து நின்று கரகோஷம் செய்து, அம் மாணவர்களைப் பாராட்டி கௌரவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

சுமார் 150க்கும் மேற்பட்ட திறன் அபிவிருத்தி பாடநெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்கள் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர்.

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரியாகப் பாரமெடுத்த நாள் முதல் அயராது சிறந்த சேவையாற்றி வருவதற்காக மருதூர் கலை மன்றத்தின் ஆயுட்காலத் தலைவர் சிரேஷ்ட அண்ணாவியார் கலாபூஷணம் ஏ. இஸ்ஸ தீன், அதன் பொதுச்செயலாளர் ஊடகவியலாளர் எம்.எஸ்.எம். ஸாகிர் (JP) உட்பட அமைப்பின் மாணவர் பொல்லடி (களிகம்பு) குழுவினரால் சாய்ந்தமருது கலாசார மண்டபத்தில் வைத்து, சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையப் பொறுப்பதி காரி ஏ.பி. நௌஷாத், 'சேவைச் செம்மல்' விருது வழங்கி பாராட்டிக் கௌரவிக்கப் பட்டதோடு, கலாசார மத்திய நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களாலும் பாராட்டி, நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.

# சீனன்கோட்டை அல்பாஸி மாவத்தை 20 இலட்ச ரூபா செலவில் புனரமைப்பு



**(பீ.எம். முக்தார்)**

பேருவாலை- சீனன்கோட்டை தர்கா வீதி ஜலாலிய்யா ஜும்ஆ மஸ்ஜிதுக்கு அண்மித்த செய்க் அஜ்வாத் அல் பாஸி மாவத்தை 20 இலட்சம் ஷரூபா செலவில் புணரமைக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக குன்றும், குழியுமாக சேதமடைந்து மக்கள் பாவனைக்கு மிகவும் பாதிப்படைந் திருந்த நிலையில், பிரதேச வாசிகளின் வேண்டுகோளுக்கமைய பேருவளை நகரபிதா மபாஸிம் அஸ ாஹிர் எடுத்துக்கொண்ட துரித நடவடிக்கையின் காரணமாக பேருவளை நகரசபையின் நிதி ஒதுக்கீடு மூலம் தார் இட்டு செப்பனிடப்பட்டு கடந்த 25ஆம் திகதி பேருவலை நகரபிதா மபாஸிம் அஸாகிரினால் மக்கள் பாவனைக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப் பட்டது.

இந்நிகழ்வில் பேருவளை நகரசபை உறுப்பினர்களான ஸஹீட் அஹமட், சகோதரி மல்லிகா ஸில்வா மற்றும் ஊர் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் கலந்துகொண்ட நகரபிதா உட்பட பிரமுகர்களுக்கு பிரதேசவாசிகளால் சிறந்த வரவேற்பும் அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மலேசியாவின் முன்னணி சர்வதேச தொழில்துறை தலைவருடன் சிங்கப்பூர் ராயல் கிங்ஸ் நிறுவனர் தலைவர் சிராஜுதீன் சந்திப்பு

**(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)**

மலேசியாவின் முன்னணி சமூக, கல்வி மற்றும் சர்வதேச தொழில்துறை துறைகளில் முக்கிய பங்களிப்புகளை வழங்கி வரும் இஸ்லாமிக் எஜுகேஷன் ஃபவுண்டேஷன் தலைவர் மற்றும் கோலாலம்பூர் எகனாமிக் கிளப்பின் துணைத் தலைவர் டத்தோ ஸ்ரீ முகமது இக்பால், ராயல் கிங்ஸ் குழுமத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் சிராஜுதீன், குழும ஆலோசகர் ஜலாலுதீன் ஆகியோருடன் இணைந்து மரியாதை நிமித்தமாக சந்தித்து விரிவான கலந்துரையாடல் மேற்கொண்டார்.

இந்த சந்திப்பின் போது சர்வதேச வர்த்தக ஒத்துழைப்பு, இளைஞர் தொழில் முனைவோர் மேம்பாடு, கல்வி வளர்ச்சி, சமூக சேவை நடவடிக்கைகள், தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் ஆசிய பிராந்திய பொருளாதார வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு முக்கிய அம்சங்கள் குறித்து விரிவாக கருத்துப்பகிர்வு நடைபெற்றது.

டத்தோ ஸ்ரீ முகமது இக்பால் உலகளாவிய பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை வழங்கி வரும் முக்கிய தொழில்துறை தலைவராக திகழ்ந்து வருகிறார். அவர் ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக ஆணையமான யு.என்.எஸ்காப் அமைப்பின் வணிக ஆலோசனைக் குழுவின் முன்னாள் தலைவராக பணியாற்றியதுடன், மலேசியா குளோபல் பிசினஸ் கவுன்சிலின் தலைவராகவும், மலேசியா - ஜப்பான் பொருளாதார சங்கத்தின் துணைத் தலைவராகவும், ஈஸ்ட் ஏசியன் பிசினஸ் கவுன்சிலின் மலேசிய பிரதிநிதியாகவும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்.

மேலும் பந்தார் சுபாங் செண்டியான் பெர்ஹாட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராகவும், பைனரி பல்கலை க்கழகத்தின் புரோ சான்சலராகவும், சைனா ஆசியான் பிசினஸ் அசோசியேஷன் அமைப்பின் துணைத் தலைவராகவும், யுனிவர்சிட்டி உத்தாரா மலேசியா பல்கலைக் கழகத்தின் இணை பேராசிரியராகவும், கே.எஸ்.ஐ ஸ்ட்ராடஜிக் இன்ஸ்டிடியூட் ஃபார் ஏசியா பசிபிக் அமைப்பின் ஆலோசகராகவும் பல்வேறு முக்கிய பொறுப்புகளை வகித்து வருகிறார்.

இந்த சந்திப்பின் போது டத்தோ ஸ்ரீ முகமது இக்பால் அவர்கள் தனது சுயசரிதை நூலான "ஸ்ட்ரைவிங் ஃபார் எக்ஸலன்ஸ் - எ லைஃப் ஃபுல்ஃ பில்ட்" என்ற புத்தகத்தையும் சிராஜுதீன் அவர்களிடம் வழங்கினார்.

தனது வாழ்க்கைப் பயணம், தலைமைத்துவ அனுபவங்கள், சமூக பங்களிப்புகள் மற்றும் சர்வதேச வர்த்தக துறைகளில் அவர் ஆற்றிய சேவைகள் குறித்து இந்த நூலில் விரிவாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மேலும் அவர்களின் மகனும் த்ரீ-ஆப் (எம்) செண்டியான் பெர்ஹாட் நிறுவனத்தின் தலைமை தொழில்நுட்ப அதிகாரியாக பணியாற்றி வரும் முகமது ஷாஜஹான் பின் முகமது இக்பால் அவர்களும் இச்சந்திப்பில் கலந்து கொண்டார். தொழில் நுட்பம், டிஜிட்டல் மாற்றம் மற்றும் எதிர்கால புதுமை முயற்சிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப் பட்டது.

சமூக முன்னேற்றம், கல்வி வளர்ச்சி மற்றும் சர்வதேச நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் நோக்கில் நடைபெற்ற இந்த சந்திப்பு, எதிர்காலத்தில் பல்வேறு பயனுள்ள கூட்டாண்மைகள் உருவாகும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.



# ரோயல் அகடமியின் பட்டமளிப்பு விழாவில் 150 பேருக்கு கௌரவம்

**(அஷ்ரப் ஏ சமத்)**

கொழும்பில் இயங்கும் ஏ.எம்ரோயல் அகடமியினால் 6வது தடவையாக அழகு சாதான வடிவமைப்பு கலைத்துறை, மற்றும் அழகு சாதன திரவியங்கள் பொருட்களைத் தயாரிக்கும் துறையில் பயிற்சி அளிக்கப்பட்டு அப்பயிற்சி நெறியை வெற்றிகரமாக முடித்த 150 மாணவிகளுக்கு உயர்தர டிப்ளோமா பட்டச் சான்றிதழ்கள் , பதக்கம் மற்றும் விருதுகள் வழங்கி வைக்கப்பட்டது .

இப்பட்டமளிப்பு வைபவம் (23) பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏ.எம். ரோயல் அகடமியின் முகாமைத்துவ பணிப்பாளரும் அழகுக்கலை நிபுணருமான கலாநிதி அஷ்மா முஸ்தாக் தலைமையில் வெகு விமர்சையாக நடைபெற்றது.





இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஹாசிம் உமர் பவுண்டேசனின் ஸ்தாபகத் தலைவர் புரவலர் ஹாசிம் உமர் மற்றும் ஹாசிம் உமர் பவுண்டேசனின் செயலாளர் மரியம் ஹாசிம் உமர் கலந்து கொண்டனர், கௌரவ அதிதியாக இலங்கை ருபாவாஹினியின் கூட்டுத்தாபணத்தின் தமிழ் செய்திப்பிரிவு பிரதிப் பணிப்பாளர் சி.பி.எம். சியாம் ஆகியோறும் கலந்து கொண்டு மாணவிகளுக்கு டிப்ளோமா சன்றிதழ்களை வழங்கி வைத்தனர்.

அத்துடன் இத்துறை சார்ந்த அழகுகலைத்துறை நிறுவனங்களின் உரிமையாளர்கள், விரிவுரையாளர்கள், ஊடகவியலாளர்கள், பெற்றோர்கள் என பெருமளவில் இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இங்கு உரையாற்றிய ஏ.எம். ரோயல் அகடமியின் முகாமைத்துவ பணிப்பாளர் அஸ்மா

எமது பெண்கள் வீடுகளுக்குள்ளேயே தங்கியிராமல் அவர்களுக்கென ஓர் சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டு வருமானமொன்றை பெற்றுக் கொள்ள தற்பொழுது முன்வந்துள்ளனர்.

ஆனால் அவர்களுக்கு ஓர் முறையான அரச அங்கிகாரம் பெற்ற கல்வி நிலையம் இல்லாத குறையை என்னால் நிவர்த்தி செய்ய முடிந்தது. இத்துறையில் சிறந்த பயிற்சியைப் பெற்று அத்துறை சம்பந்தமான பட்டங்கள், மற்றும் அரச தொழிற்பயிற்சி நைட்டா நிறுவனத்தில் சான்றிதழ்களைப் பெற்று அவரவர்களது வீடுகளுக் கருகில் அல்லது வீட்டிலேயே இருந்து கொண்டு அழகு சாதாண துறையில் நிறுவனங்களை நிறுவி தமது குடும்பத்தினை வாழ்க்கைச் செலவுக்கான ஓர் நிரந்தர வருமாணத்தினையும் இவர்கள் பெறுகின்றனர்.

ஆகவே தான் இத்துறை சம்பந்தமாக எனது முயற்சியில் கனடா, லண்டன், இந்தியா போன்ற நாடுகளில் பெற்ற பயிற்சியினை என்னைப் போன்ற ஏனைய சகோதரிகளுக்கும் இவ்வாறான தொரு அரச அங்கிகாரம் பெற்ற ஓர் கல்வி நிறுவனத்தினை கொழும்பில் நிறுவி எனது சேவையை இம் மகளிர்களுக்கும் வழங்கி வருதாகவும் அஷ்மா முஸ்தாக் அங்கு தனது பட்டமளிப்பு தலைமை உரையில் தெரிவித்தார்.

# கடந்த கால ஆட்சியாளர்களின் போதைப்பொருள் விநியோகத்தினால் நாடு பாரிய சீரழிவை எதிர்கொண்டுள்ளது

**அபூபக்கர் ஆதம்பாவா**

**(நூருல் ஹுதா உமர்)**

கடந்த கால ஆட்சியாளர்கள் தொன் கணக்கில் போதைப் பொருட்களை நாட்டிற்குள் இறக்குமதி செய்து விநியோகித்ததன் காரணமாக நாடு பாரிய சமூக மற்றும் பொருளாதார சீரழிவை எதிர்கொண்டுள்ளதாக அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவரும், இலங்கை அரசியலமைப்பு பேரவை உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா தெரிவித்தார்.

தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் ஏற்பாட்டிலும், தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நெறிப்படுத்தலிலும் அம்பாறை மாவட்டத்திற்கான விசேட போதை ஒழிப்பு பேரணி (23) கல்முனையில் நடைபெற்றது.

"போதைப்பொருளுக்கு எதிராய் - எம் தேசத்திற்காய்" என்ற தொனிப் பொருளில் நடைபெற்ற இப்பேரணி, சாய்ந்தமருது எல்லைக்கு முன்பாக காலை 9.30 மணியளவில் ஆரம்பமானது.

பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றிய அபூபக்கர் ஆதம்பாவா, இளைஞர் சமூகத்தை இலக்காகக் கொண்டு திட்டமிட்ட வகையில் போதைப்பொருள் வலையமைப்புகள் செயல்பட்டதாகவும், அதனை கட்டுப்படுத்துவதில் கடந்த ஆட்சியாளர்கள் தோல்வியடைந்ததாகவும் குறிப்பிட்டார்.

மேலும், பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை மையப்படுத்தி விழிப்புணர்வு நடவடிக்கைகள், சட்ட அமுலாக்க நடவடிக்கைகள் மற்றும் சமூக ஒத்துழைப்புடன் கூடிய தேசிய மட்ட திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.





இப்பேரணியில் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் வடக்கு, கிழக்கு மாகாண இணைப்பாளர் எம்.எம்.ஜீ.பீ.எம். றஸாட், தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் பிரதிப்பணிப்பாளர், இளைஞர்கள், சமூக அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு பதாதைகள் மற்றும் கோஷங்களை ஏந்தியவாறு கல்முனை நகர் வழியாக ஊர்வலமாகச் சென்றனர்.

போதைப்பொருள் பாவனையால் சமூகத்திற்கும் இளைஞர் சமூகத்திற்கும் ஏற்படும் பாதிப்புகளை எடுத்துரைப்பதோடு, போதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதே இந்நிகழ்வின் பிரதான நோக்கமாகும்.

இந்நிகழ்வில் இளைஞர் சேவை அதிகாரிகள், இளைஞர் அமைப்புகள், மாணவர்கள் மற்றும் பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

# ஒலுவில் துறைமுகத்தை பாதுகாக்க வேண்டும் அது பொருளாதார எதிர்காலத்தின் அடையாளம்

**ஐ. ச. கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் !**

ஒலுவில் துறைமுகம் ஒரு சாதாரண உட்கட்டமைப்புத் திட்டமல்ல் அது இலங்கையின் பொருளாதார எதிர்காலம், சமூக நம்பிக்கை மற்றும் பிராந்திய அபிவிருத்தியின் அடையாளமாகும். சர்வதேச அஜந்தாக்கள் மற்றும் பிராந்திய ஆதிக்க சக்திகளின் புவிசார் அரசியல் நலன்களுடன் இணைந்த சில உள்நாட்டு அரசியல் ஒத்துழைப்புகள் மூலமாக ஒலுவில் துறைமுகத்தை செயலிழக்கச் செய்யும் முயற்சிகளுடன் சுற்றுலாத்துறையை பாதிப்படைய செய்யும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகங்களும் மக்கள் மத்தியில் உருவாகியுள்ளதாக ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிழக்கு மாகாண மக்களின் நீண்டகால சமூக-பொருளாதார முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னாள் அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் அபிவிருத்திசார் சிந்தனைகளின் வெளிப்பாடாக ஒலுவில் துறைமுகத் திட்டம் உருவாக்கப்பட்டது. இந்தத் துறைமுகம் ஊடாக மீன்பிடித் தொழில் மேம்பாடு, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள், சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் விரிவாக்கம், கடல்சார் சேவைகள், முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் பிராந்திய பொருளாதார வலுப்படுத்தல் போன்ற பல நோக்கங்கள் எதிர்பார்க்கப்பட்டிருந்தன.

தற்போது துறைமுகம் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இது தொடர்பில் ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவும் அண்மையில் நிந்தவூர் விஜயத்தின் போது கருத்து வெளியிட்டிருந்தார். குறிப்பாக அம்பாறை மாவட்ட கரையோரப் பகுதிகள் கடல் அரிப்பு மற்றும் மணல் தேக்கம் போன்ற தீவிர பிரச்சினைகளில் சிக்கியுள்ளன. இந்நிலையை முழுமையாக துறைமுகத்தோடு தொடர்புபடுத்தும் பார்வைகளும் சமூகத்தில் காணப்படுகின்றன. சரியான தொழில்நுட்ப அணுகுமுறை மற்றும் விஞ்ஞான திட்டமிடல் இன்றி துறைமுகம் அமைக்கப்பட்டதே இதற்கான அடிப்படை காரணங்களில் ஒன்றாக இருக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, துறைமுகம் அமைக்கப்பட்ட பின்னர் போதுமான தொழில்நுட்ப மற்றும் அறிவியல் அடிப்படையிலான பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படாததாலும் பிரச்சினைகள் தீவிரமடைந்திருக்கலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், கொள்கைத் தொடர்ச்சியின்மை, நிர்வாக தாமதங்கள், பராமரிப்பு முதலீட்டு குறைபாடுகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி முன்னுரிமை மாற்றங்கள் ஆகியவையும் துறைமுகத்தின் முழுமையான செயற்பாட்டை பாதித்திருக்கின்றன என அவர் தெரிவித்தார்.

"கொழும்பில் உலகத் தரத்திலான துறைமுக நகரத் திட்டத்தை உருவாக்க முடிந்த ஒரு நாட்டில், ஒலுவில் துறைமுகம் ஏன் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியவில்லை என்ற கேள்வி இன்று இயல்பாகவே எழுகிறது. அதற்கான காரணங்களை அரசியல் கோணத்தில் மட்டும் அல்லாது தொழில்நுட்ப, நிர்வாக, பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் அடிப்படைகளிலும் ஆராய வேண்டியது அவசியமாகிறது" எனவும் ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க அவர்கள் நிந்தவூர் விஜயத்தின் போது மர்ஹூம் அஷ்ரப் தொடர்பாக முன்வைத்த கருத்துக்கள் அரசியல் மற்றும் சமூக ரீதியாக பெரும் விவாதங்களை உருவாக்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"அஸ்ரப் அமைச்சர் ஆனதால் விஞ்ஞான ஆய்வோ தூரநோக்கோ இல்லாமல் ஒலுவில் துறைமுகம் கொண்டு வரப்பட்டது் அதன் விளைவாக கடலரிப்பு அதிகரித்துள்ளது" என்ற கருத்து முஸ்லிம் சமூகத்திலும், குறிப்பாக மர்ஹூம் அஷ்ரப் அவர்களின் அரசியல் பாரம்பரியத்தை மதிக்கும் மக்களிடையிலும் கடும் எதிர்ப்பை உருவாக்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மர்ஹூம் அஷ்ரப் அவர்கள் ஒரு சமூகத்தின் அரசியல் உரிமைகள் மட்டுமல்லாது, கிழக்கு மாகாணத்தின் பொருளாதார சுயநிறைவு மற்றும் அபிவிருத்தி நோக்கங்களையும் முன்னிறுத்திய தலைவராகவும், புலிப்பயங்கரவாதிகளுடன் இணைந்து முஸ்லிங்களை ஆயுதம் தூக்காமல் ஜனநாயக வழிக்கு வழிநடத்திய தலைவராகவும் நினைவுகூறப்படுகிறார். மட்டுமில்லாது தென்கிழக்கு பல்கலைக்கழகம், ஒலுவில் துறைமுகம் உள்ளிட்ட அவரின் பல திட்டங்கள் அந்த நீண்டகால அபிவிருத்தி சிந்தனைகளின் வெளிப்பாடுகளாகவே பார்க்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"இன்று ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க அவர்கள் ஒரு சிறிய கட்சியின் தலைவராக நீண்டகாலம் பாராளுமன்றத்தில் நிலைத்து நின்று பின்னர் நாட்டின் ஜனாதிபதியாக உயர்ந்திருப்பதற்கான ஜனநாயக அரசியல் பாதையை இந்த நாட்டில் உருவாக்குவதில் மர்ஹூம் அஷ்ரப் போன்ற தலைவர்களின் பங்களிப்பும் மறுக்க முடியாததாகும்" என்றும் ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

# நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இன்று இடம்பெற்ற ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகைகளின் தொகுப்பு

## பதுளுப்பிட்டியவில் முதல் தடவையாக திடலில் தொழுகை!



**(வாஹிட் குத்தூஸ் )**

பதுளை -பதுளுப்பிட்டிய முஜாஹிதீன் பெரிய ஜ/ம்மா பள்ளி வாசல் நிர்வாகத்தினர் ஏற்பாட்டில் முதல் முறையாக ஆண்கள், பெண்களுக்கான புனித தியாகத் திருநாள் பெருநாள் தொழுகை நிமல் விக்ரமதுங்க விளையாட்டு மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது.

முஜாஹிதீன் பிரதம இமாம் அல்-ஹாபிஸ் இர்ஷாத் நஸார் (உஸ்மானி) தொழுகையை நடத்தி பிரசங்கத்தையும் நிகழ்த்தி துஆப் பிரார்த்தனையையும் புரிந்தார்.

## கற்பிட்டி நகர் அல் அக்ஸா மைதானத்தில்.....



**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

கற்பிட்டி நகரில் இம்முறை ஈதுல் அல்ஹா ஹஜ் பெருநாள் திடல் தொழுகை வியாழக்கிழமை (28) அல் அக்ஸா தேசிய பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

இம்முறை பெருநாள் தொழுகையை அஷ்ஷெய்க் அல்ஹாபிழ் ஆஸீம் ( றஹ்மானி) நடாத்தி வைத்தவுடன் பிரசங்கத்தினை அஷ்ஷெய்க் மௌலவி இன்சாம் இனால் நிகழ்த்தப்பட்டது.

## கொழும்பு பெரிய பள்ளிவாசலில் விசேட தொழுகை....



**(ஏ.எஸ்.எம்.ஜாவித்)**

பள்ளிவாசலின் பிரதம இமாம் எஸ்.எம்.றிஸ்வான் (பஹ்ஜி) தொழுகையையும் குத்பா பிரசங்கத்தை மும் நிகழ்த்தினார். தொழுகையில் ஆண்கள், பெண்கள் என பெரும் எண்ணிக்கையிலான வர்கள் கலந்து கொண்டனர்.

பள்ளிவாசல் நிர்வாகத் தலைவர் தாஹிர் ரஸீன் உள்ளிட்ட நிருவாக சபை உறுப்பினர்கள் பெருநாள் தொழுகைக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

தொழுகையின் பின்னர் ஒருவருக் கொருவர் சலாம் சொல்லி பெருநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டமையையும் காண முடிந்தது.

## ஒலுவில் பெரிய ஜும்மா பள்ளிவாசலில்....



**இஸட்.ஏ.றஹ்மான்**
**(ஒலுவில் விசேட செய்தியாளர்)**

ஒலுவில் பெரிய ஜும்மா பள்ளிவாசல் ஏற்பாட்டில் புனித ஹஜ்ஜ/ப் பெரு நாள் தொழுகை இன்று 2026.05.28 ம் திகதி காலை 6.30 மணியளவில் ஒலுவில் கடற்கரை முற்றலில் நடைபெற்றது.

இதன் போது மௌலவி ஏ.எல். பைசால் (மதனி) அவர்களினால் மார்க்க உரை நிகழ்த்தப்பட்டது.

## சீனன் கோட்டை பாஸிய்யா ஜும்ஆ மஸ்ஜிதில் ....



**(பேருவலை பீ.எம்.முக்தார்)**

உலக முஸ்லிம்களால் சிறப்பாகக் கொண்டாடக் கூடிய இவ்வருடம் 2026 (ஹிஜ்ரி 1447) ஆண்டின் புனித ஹஜ்ஜுப் பெருநாள் இன்று இலங்கையிலும் மிகச் சிறப்பாக முஸ்லிம்களால் கொண்டாடப் படுகின்றது.

இதன் ஒரு பகுதியாக பேருவலை-சீனன் கோட்டையிலும் பல பள்ளிவாயில்களில் மிகச் சிறப்பாக பெருநாள் தொழுகைகளும், பிரசங்கங்களும் நடைபெற்றன.

அந்த வகையில் சீனன் கோட்டை பாஸிய்யா ஜும்ஆ மஸ்ஜிதிலும் இன்று ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை காலை 7.30 மணிக்கு நடைபெற்றது.சீனன் கோட்டை மக்கள் தமது பாரம்பரிய ஆடையான கோட் மற்றும் துருக்கித் தொப்பி அணிந்து பெருமளவான மக்கள் தொழுகையில் கலந்து கொண்டனர்.

ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை யையும்,பிரசங்கத்தையும் சீனன் கோட்டைப் பள்ளிச் சங்க இணைச் செயலாளரும்,அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான கலீபத்துஷ் ஷாதுலி அல்ஹாஜ் இஹ்ஸானுத்தீன் (நளீமி) அவர்கள் நடாத்தி வைத்தார்.

## நிககொல்ல ஜும்ஆப் பள்ளியில்....



**(மாத்தளை எம் .சதூர்தீன்)**

மாத்தளை நிககொள்ள ஜும்ஆ பள்ளிவாயலில் ஹஜ்ஜுப்பெருநாள் (ஈதுல் அல்ஹா) தொழுகை மிக சிறப்பாக 28 நேற்று காலை இடம் பெற்றது பெருநாள் கொத்பா பிரசங்கத்தையும் தொழுகையையும் பள்ளிவாயல் பேஷ் இமாம் யூசுப் மௌலவியால் நடத்தி வைக்கப்பட்டது

## மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளியில்....

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**



சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் புனித ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை (28) வியாழக்கிழமை இடம்பெற்றது.

ஆண்கள், பெண்கள் என ஒரே தடவையில், குறிக்கப்பட்ட உரிய நேரத்தில் சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் பேஷ்இமாம் உஷாமா பரீட் (ஸூஃபி) அவர்கள் தொழுகையையும் துஆ பிரார்த்தனையும் மேற்கொண்டார்.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் தலைவர் அல்ஹாஜ் எம்.எஸ் எம். முபாரக், செயலாளர் எம்.ஐ.ஏ. அஸீஸ், பொருளாளர் அல்ஹாஜ் ஏ.எம். சமீம் உட்பட நம்பிக்கையாளர் சபையின் உறுப்பினர்கள், ஜமாஅத்தார்கள், பெண்கள் உட்பட சிறுவர்களும் தொழுகையில் கலந்து கொண்டனர்.

இதன்போது அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களின் ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும், அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா அவர்களும் புனித ஹஜ்ஜுப்பெருநாள் தொழுகையில் கலந்து கொண்டு பின் ஒருவருக் கொருவர் முஸாபஹா செய்து புனித ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

## கற்பிட்டி தில்லையடி ஜும்ஆ பள்ளிவாசலில்....



**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

கற்பிட்டி தில்லையடி ஜும்ஆ பள்ளிவாசலின் ஏற்பாட்டில் வியாழக்கிழமை (28) இடம்பெற்ற ஈதுல் அல்ஹா ஹஜ் பெருநாள் தொழுகை பள்ளிவாசலின் முன்றலில் இடம்பெற்றது

இப் பெருநாள் தொழுகையும் பிரசங்கத்தையும் பள்ளிவாசலின் பேஷ் இமாம் மௌலவி எம் டி.எம் றிப்கான் (றஹ்மானி) நிகழ்த்தினார்.

## மனநலமும் ஆலோசனையும்

101



# "கற்பித்தல்" மகிழ்ச்சி..? தண்டனை..?

பிள்ளைகளின் நடத்தையை வழிநடத்த ஆசிரியர்களும் பெற்றோர்களும் பல்வேறு கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துகின்றனர். அவற்றில் முக்கியமான இரண்டு முறைகள் மகிழ்ச்சி அடிப்படையிலான கற்பித்தல் மற்றும் தண்டனை அடிப்படையிலான கற்பித்தல் ஆகும்.
இரண்டு முறைகளும் நடத்தை மாற்றத்தை நோக்கமாகக் கொண்டாலும், அவை ஏற்படுத்தும் விளைவுகள் மிகவும் வேறுபட்டவையாகும்.

**மகிழ்ச்சி அடிப்படையிலான கற்பித்தல்**

இந்த முறையில், பிள்ளைகளின் நல்ல நடத்தைக்கு பாராட்டு, பரிசு அல்லது ஊக்கங்கள் வழங்கப்படுகின்றன. அவர்கள் அன்பும் புரிதலும் நிறைந்த சூழலில் கையாளப்படுகிறார்கள்.

இதன் மூலம்:
* பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் கற்றலில் ஈடுபடுகிறார்கள்.
* தங்கள் திறன்களில் நம்பிக்கை பெறுகிறார்கள்.
* கற்றலின் மீது ஆர்வம் அதிகரிக்கிறது.
* ஆசிரியர் – பிள்ளை மற்றும் பெற்றோர்
*பிள்ளை உறவுகள் வலுப்படுகின்றன.

ஆனால், அதிகமாக பரிசுகள் மற்றும் பாராட்டுகளை மட்டுமே நம்பினால், பிள்ளைகள் தன்னிச்சையான உந்துதலுடன் செயல்படாமல், வெளிப்புற ஊக்கங்களுக்கு மட்டுமே சார்ந்து விடும் அபாயம் உள்ளது.

**தண்டனை அடிப்படையிலான கற்பித்தல்**

இந்த முறையில், தவறான நடத்தையை தடுக்க...
அடித்தல், கடுமையாக கண்டித்தல், சத்தமாக ஏசுதல் போன்ற முறைகள் பயன்படுத்தப்படலாம்.

சில நேரங்களில் இது உடனடி கட்டுப்பாட்டை ஏற்படுத்தலாம். ஆனால் நீண்டகாலத்தில்:
*பயம்
*மனஅழுத்தம்
*தன்னம்பிக்கையின்மை
*படைப்பாற்றல் குறைவு...
போன்ற எதிர்மறை விளைவுகள் உருவாகக்கூடும்.
மேலும், இந்த முறை, பிள்ளை "எப்படி சரியாக நடக்க வேண்டும்" என்பதைக் கற்றுத் தருவதில் பலவீனமாக உள்ளது.
நீண்டகால கல்வி வெற்றிக்காக மகிழ்ச்சி அடிப்படையிலான கற்பித்தல் முறையே சிறந்ததாக கருதப்படுகிறது. பிள்ளைகளின் நடத்தையின் பின்னணியைப் புரிந்து, அவர்களின் கற்றல் சுபாவத்தை அறிந்து, நேர்மறையான வழிகாட்டுதலுடன் கற்பித்தால், அவர்கள் பொறுப்புடன் மற்றும் ஆர்வத்துடன் கற்றுக்கொள்ளக் கூடியவர்களாக உருவாகுவார்கள்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

---




# CROCHET & KNITTING
# பின்னல் கலை

பயாஸா பாஸில்

கம்பி, நூல், கையின் அசைவு மூன்றும் சேர்ந்தால் அது வெறும் துணி ஆவதில்லை. அது நினைவு, மருத்துவம், கலை, பொருளாதாரம் எல்லாமாக மாறும். அதுதான் CROCHET மற்றும் KNITTING என்ற இரு பின்னல் கலைகளின் ஆரம்பம்.
Crochet மற்றும் Knitting இரண்டும் ஒரே மூதாதையரான Nalbinding-லிருந்து வந்தவை என்கிறார்கள் ஆராய்சியாளர்கள். Nalbinding என்பது ஊசியால் நூலை சுற்றி வளையமாக்கும் பழைய முறை. எகிப்தில் 3-4 ஆம் நூற்றாண்டு சாக்ஸ் Nalbinding முறையில் செய்யப்பட்டவை இன்றும் Victoria & Albert Museum இல் உள்ளன.
KNITTING ன் தொடக்கம் மிகவும் பழமையானது. தொல்லியல் சான்றுகள் படி, எகிப்தில் 11-ம் நூற்றாண்டைச் சேர்ந்த நிட்டட் சாக்ஸ் கண்டெடுக்கப்பட்டு ள்ளன. மத்திய கிழக்கு, ஐரோப்பாவில் 13-ம் நூற்றாண்டில் இது கைத்தொழிலாக மாறியது. இரண்டு கம்பிகளைக் கொண்டு ஒரு நூலை தொடர்ச்சியான "loop"-களாக பின்னுவதே knitting. இது வேகமாகவும், நீளமான துணியை உருவாக்கவும் ஏற்றது.
CROCHET ஒப்பீட்டளவில் புதியது. "Crochet" என்ற சொல் பிரெஞ்சு மொழியில் "சிறிய கொக்கி" என்று பொருள். 16-ம் நூற்றாண்டு ஐரோப்பாவில் இது "tambour lace" என்ற பெயரில் தொடங்கியது. ஆனால் நவீன crochet 19-ம் நூற்றாண்டில் அயர்லாந்து பஞ்சத்தின்போது பரவலானது. ஒரே ஒரு கொக்கி மூலம் நூலில் முடிச்சுகள் போட்டு வடிவம் உருவாக்குவது crochet. இது knitting-ஐ விட தடிமனாகவும், அதிக texture-உடனும் இருக்கும்.
Knitting இரண்டு ஊசிகள் (கம்பிகள்) கொண்டு பின்னப்படும். ஆனால் Crochet ஒரே ஒரு கொக்கி கொண்ட ஊசி மூலமே பின்னப்படும்.
Knitting-ல் loop-கள் செங்குத்தாக இணைந்திருக்கும். அதனால் துணி நெகிழ்வானது, stretch ஆகும். Sweater, socks, t-shirt-க்கு ஏற்றது.
Crochet-ல் ஒவ்வொரு முடிச்சும் முடிந்துவிடும். அதனால் துணி உறுதியானது, shape retain செய்யும். Amigurumi, doily, bag-க்கு ஏற்றது.
Knitting-ல் ஒரு loop விட்டால் முழு துணியும் பிரியும். Crochet-ல் ஒரு முடிச்சு விட்டாலும் மற்றவை பாதிக்கப்படாது.
19-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் crochet, knitting இரண்டும் பெண்களின் "domestic art" ஆக பார்க்கப்பட்டது. இதன் மூலமே பெண்களுக்கு வருமானமும், சமூக தொடர்பும் கிடைத்தது.
ஸ்காட்லாந்தின் Shetland lace knitting, ஐரிஷ் crochet lace, ஜப்பானின் amigurumi போன்றவை தேசிய அடையாளமாக மாறின. இந்தியாவில் crochet doily, table cloth, baby dress போன்றவை கிராமப்புற பெண்களின் வாழ்வாதாரமாக இருந்தது.
இரண்டாம் உலகப் போரின்போது knitting "war effort"-ன் பகுதியானது. படைவீரர்களுக்கு socks, sweaters பின்னுவது தேசபக்தியாக பார்க்கப்படும் அளவுக்கு முக்கிய கைத்தொழிலாக இருந்தது
19-ம் நூற்றாண்டின் தொழில்புரட்சி knitting machine-ஐ கொண்டு வந்தது. William Lee 1589-லேயே முதல் knitting machine-ஐ கண்டுபிடித்தார். இது உற்பத்தியை வேகப்படுத்தியது.
21 ஆம் நூற்றாண்டில் இந்த கலைகள் மீண்டும் உயிர் பெற்றுள்ளன. 2002-2004-க்கு இடையில் அமெரிக்காவில் 25-35 வயது பெண்கள் Knitting செய்பவர்கள் எண்ணிக்கை 150% அதிகரித்தது. Ravelry, LoveCrafts போன்ற ஆன்லைன் தளங்கள், பாட்காஸ்ட்கள், YouTube வீடியோக்கள் மூலம் இளைஞர்களும் கற்றுக்கொள்கிறார் கள். Amigurumi என்ற Crochet பொம்மைகள், Yarn Bombing என்ற தெரு கலை புதிய பரிமாணங்களைத் தந்துள்ளன.
Mental Health & Slow Living: பின்னல் என்பது mindfulness practice. Crochet , knitting செய்யும் போது தொடர்ச்சியான loop, rhythm மனதை அமைதிப்படுத்துகிறது.. Anxiety, PTSD-க்கு therapy-ஆக இது பரிந்துரைக்கப்படுகிறது.
Sustainable Fashion: Fast fashion க்கு எதிரான "slow fashion" இயக்கத்தில் handmade knitwear, crochet top, bag முக்கிய இடம் பிடிக்கின்றன.
Pop Culture & Art: Harry Stylesஇன் cardigan, Zendaya-ன் crochet set போன்றவை Gen Z-ஐ ஈர்க்கின்றது.
Street artஇல் "yarn bombing" என்று பொது இடங்களில் பின்னல் போர்த்துவது வசநனெ ஆகி வருகிறது.
இன்றைய Runway மற்றும் Luxury பேஷனில் Crochet மற்றும் Knitting "handmade luxury" ஆக மறு வரையறை செய்யப்பட்டுள்ளன.









முன்பு Crochet , Knitting என்பவை கம்பளி, அக்ரிலிக் நூல்தான். ஆனா இப்போது Luxury பிராண்டுகள் மொஹேர், அல்பாக்கா, மெரினோ-சில்க், கேஷ்மீர் மாதிரி மென்மையான, விலையுயர்ந்த நூல்களை பயன்படுத்துகிறார்கள். இது ஆடைக்கு ஒளி, மென்மை, நல்ல drape கொடுக்கும் என்பதால் Luxury ஆடையாக வடிவமைப்பு பெருகிறது. மேலும் இது கோடைக்கும் போடக்கூடிய lightweight knitwear உருவாகிறது.
3D Texture & Florals தையலிலேயே மலர், இலை, raised patterns உருவாக்குதல். இது ஆடைக்கு sculptural தோற்றம் தரக்கூடியது.
Sheer & Openwork: Lace போன்ற வெளிப்படையான நெய்தல் முறை, sheer crochet tops, mesh scarves ன்னு உடம்பு தெரியக்கூடியது ஆனா elegant ஆன ஸ்டைலை தரும் ஆடை.
Silhouette & Comfort 2026-ன் முக்கிய வார்த்தை "Refined Comfort". நீண்ட கார்டிகன்கள், turtleneck sweaters, relaxed boxy tees எல்லாம் tailoring மற்றும் silk dresses-உடன் layer செய்கிறார்கள் அதாவது அலுவலகத்திற்கும் அணியலாம், evening wear-ஆவும் அதை மாற்றலாம். இது knitwear-I casual-ல் இருந்து luxury category-க்கு கொண்டு சேர்க்கிறது.
2026-ல் Crochet & Knitting என்பது வயதானவர்களின் பொழுதுபோக்கு அல்ல. இது couture level craftsmanship ஆக மாறி, Paris, Milan Runway-y Prada, Dior, Bottega Veneta மாதிரி பிராண்டுகள் மூலமாக புதிய வடிவம் பெற்றிருக்கும் பரம்பரிய கலையாகும்.

பா.அஸானா.பஸ்லி
Pattern Maker &
Fashion Illustrator
Founder Of Art Gallery
Academy
Colombo




**பாரா தாஹிர்**
**சிரேஷ்ட ஊடகவியலாளர்**

## வரலாற்றில் ஒரு துளி.!

"வலீத் பின் அப்துல் மலிக் மசூதிக்குள் நுழைந்தார். அங்கே காலத்தின் கட்டாயத்தால் உடல் தளர்ந்து, முதுமையால் முதுகு வளைந்திருந்த ஒரு முதியவரைக் கண்டார்.
அவரை நெருங்கி, அவரிடம் நகைச் சுவையாக: "பெரியவரே! நீங்கள் மரணத்தை விரும்பவில்லையா?" என்று கேட்டார்.
அதற்கு அந்த மனிதர் பதில் கூறினார்: "இல்லை, அமீருல் முஃமினீன்! இளமையும் அதன் தீமைகளும் கடந்து போய்விட்டன் முதுமையும் அதன் நன்மைகளும் வந்துவிட்டன.
இப்போது நான் எழுந்திருக்கும்போது அல்லாஹ்வைப் போற்றுகிறேன், அமரும்போது அவனை நினைவு கூர்கிறேன் (திக்ரு செய்கிறேன்).
இந்த இரு நற்பண்புகளும் என்னிடம் நீடித்திருக்கவே நான் விரும்புகிறேன்."



### குட்டிக்கதை

# எதிர்பாராத இன்ப அதிர்ச்சி

அடுப்பில் இருந்த கடைசி அப்பத்தையும் இறக்கி வைத்து விட்டு ஓலைப் பெட்டியில் அடுக்கத் தொடங்கினாள் ராகிலா.
மகன் அசந்து தூங்கிக் கொண்டிருந்தான்.
பொழுது விடிய முன்னரே கடைக்குப் போட வேண்டும்.
இன்றைக்குப் பார்த்து ரஹீம் ஏன் இன்னும் எழும்பாமல் தூங்குகிறான்.
அருகில் சென்று தொட்டு எழுப்புகின்றாள் ராஹிலா.
உடம்பு அனலாய்க் கொதிக்கிறது.
என்ன இது இரவு தூங்கச் செல்லும் போது நன்றாகத்தானே இருந்தான்.
என்ன மகன் காய்ச்சல் காய்கிறது.
என்று கேட்கவும் தலை வலிக்கிறது உம்மா. என்று கூறிவிட்டு புரண்டு படுத்துக்
கொள்கிறான் ரஹீம்.
மகனைப் போர்த்தி விட்டு விட்டு அப்பப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு கடையை நோக்கி நடக்கின்றாள் ராகிலா.
ராகிலாவுக்கு இரண்டு பெண்களும் ஒரு ஆணுமாக மூன்று பிள்ளைகள்.
இரண்டு பெண்களும் திருமணமாகிச் சென்று விட்டனர்.
கடைக்குட்டி ரஹீம் தாயின் வயிற்றில் இருக்கும் போதே மாரடைப்பினால் ராஹிலாவின் கணவர் இறந்து விட்டார்.
அன்றிலிருந்து அப்பம் சுட்டு விற்றே காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தாள் ராஹிலா.
மகன் ஏழாந்தரம் படிக்கின்றான்.
தனது வருமானம் மகனின் படிப்புக்கும் இருவரதும் சாப்பாட்டுக்கே போதுமானதாக இருந்தது.
ஹஜ்ஜுப் பெருநாளுக்கு இன்னும் மூன்று தினங்களே இருக்கின்றன.
மகனுக்கு உடுப்பு எடுக்கவில்லை.
பெருநாள் சாப்பாடு சமைப்பதற்கு வழியில்லை.
இப்போ மகனுக்குக் காய்ச்சல் வேறு.
என்ன செய்வது. அப்பத்தைக் கடையில் கொடுத்து விட்டுக் கவலையோடு வீடு திரும்பினாள் ராஹிலா.
காய்ச்சலுடன் படுத்திருந்த மகன் வீட்டு வாசலுக்குக் குதித்து ஓடிவந்து தாயைக் கூட்டிச் செல்கின்றான்.
ராஹிலாவுக்கு ஒன்றும் புரியவில்லை.
என்ன மகன் காய்ச்சல் விட்டு விட்டதா.
என்று கேட்டவாறே வீட்டுக்குள் இருக்கும் உரப் பையை நோட்டமிடுகிறாள்.
ஆச்சரியத்துடன்
அவசர அவசரமாகப் பிரித்துப் பார்க்கிறார்கள்.
பெருநாள் உடுப்பு,அரிசி,மலிகைச் சாமான்கள் என ஆச்சரியப்படும் அளவுக்கு நிறையப் பொருட்கள் இருந்தன.
அதனோடு ஒரு காகிதமும் ஒரு தொகைப் பணமும் இருந்தன.
காகிதத்தைப் பிரித்துப் படிக்கிறாள் ராகிலா.
அன்புத் தங்கைக்கு அல்லாஹ்வின் கட்டளையை ஏற்று நடக்கும் சகோதரனின் சிறிய அன்பளிப்பு.
தியாகத் திருநாளை மகிழ்வுடன் கொண்டாடுங்கள்.
என எழுதப் பட்டிருந்தது.
படித்து முடிக்கும் போதே கண்கள் குளமாக மகனை இறுக அணைத்துக் கொள்கிறாள் ராஹிலா.
இப்போது மகனுக்குக் காய்ச்சல் இல்லை.
இருவரும் நாளை மறுநாள் வரும் தியாகத் திருநாளை இனிதாகக் கொண்டாடக் காத்திருக்கின்றனர்.

**"படைத்தவன் படி அளப்பான் "**

**அஹமட் முர்ஷி அல் பவுசி**
அல் அஸ்ஹர் மகா வித்தியாலம்
கல்லளை, பொலன்னருவை

**படைப்பாற்றலை ஊக்குவித்து, பொது அறிவை வளர்த்து, பொழுது போக்குடன் கல்வியறிவை வளர்த்து, சிறாரிடத்தில் வாசிப்பை ஊக்குவிக்கும் நோக்கில் "உதய பூங்கா " எனும் சிறுவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பகுதியில் உங்கள் ஆக்கங்களை கட்டுரையாக, கவிதைகளாக, துணுக்குகளாக, விடுகதைகளாக, சிறுகதை களாக, பிறந்தநாள் வாழ்த்தாக, சித்திரங்களாக, பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளாக இவ் வட்சப் இலக்கத்திற்கு**

**0775323239**
**அனுப்பலாம்.**

## ஊடக தாக்கம்

தகவல்கள், கருத்துகள், செய்திகள், எண்ணங்கள் என்பவற்றை சேமித்து சமூகத்தில் பரப்புவதே ஊடகமாகும்.இன்றைய நவீன உலகத்தில்,இந்த ஊடகத்தின் பங்கு முக்க-ிய இடத்தை வகிக்கிறது.இது அச்சு ஊடகம், மின்னூடகம், மற்றும் இணைய ஊடகம் என பல்வேறு வடிவங்களை கொண்டதாகும். இது தனியார் ஊடகம், அரச ஊடகம் என்ற பிரிவு-க்குள் உள்ளடக்கப்படுகிறது.
ஆரம்ப கால மக்கள் எந்த வித ஊடகங்களும் இன்றி முக்கியதுவமிக்க அம்சங்களை பண்பாடுகள் மூலமாகவும், அறிவின் மூலமாகவும், உணர்வு வெளிபாட்டு மூலமாகவும், சமூக எதிர்மறை போக்குகள் மூலமும், சமூகத்திற்குள் எடுத்துச் சென்றனர்.
கால போக்கில் சமூக ஊடகமானது கிராமிய மக்களிடையே பத்திரிகை வாசித்தல், வானொ-லி கேட்டல், புத்தகம் வாசித்தல் போன்ற ஊடக வளர்ச்சியில் சமூக ஊடகம் இன்றியமையாத இடத்தை வகிக்கிறது. சமூக ஊடகம் எனும் போது இது பல்வேறுபட்ட தாக்கங்களை தன-ிநபர்களிலும், மாணவர் மற்றும் இளைஞர் மத்தியிலும் பிரதான இடத்தைப் பிடித்துள்ளது. சமூக ஊடகத்தின் தாக்கத்தை ஆய்வறிக்கை ஒன்றின் மூலம் அறிஞரான வில்பஷ் ராம் விமர்சித்துள்ளார். இதில் பிராதான ஊடகமாக சமூக வலைத்தளங்கள் காணப்படுகின்றன. இன்று முழு உலகையும் தன் கைக்குள் வைத்துக் கொள்ளும் அளவுக்கு அதன் தாக்கம் வளர்ச்சியடைந்துள்ளது. நேர வீண் விரயம், தேவையற்ற விடயங்களில் கவனம் செலுத்துதல், பிரச்சனைகளுக்கு ஆளாகுதல், மாணவர்களின் எழுத்தாற்றல், மீட்டல் நடவடிக்கைகள், குறிபெடுத்தல், கற்றல் போன்ற விடயங்களுக்கு சமூக ஊடகம் தடையாக உள்ளது. மற்றும் இணைய மிரட்டல்கள், போதைப்பொருள் பாவனை, மன அழுத்தம், தற்கொலை போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன.சமூக ஊடகத்தின் தாக்கத்தை உணர்ந்து அளவோடு பயன்படுத்தி வளமோடு வாழ்வோம்

Bandarawala R. Rafdha
Newmans collage

# சிறுவர் சித்திரங்கள்



M. S. F. ZOHA
UKG
Kandy Royal College



M.N DHIYANA
UKG
Farashathul jannah pre school



M F.M.Rashad
Grade 8
Danagama.M.V



M.N DHIYANA
UKG
Farashathul jannah pre school



அரபாத் பஹர்தீன்



# புதிய அணித் தலைவருடன் இலங்கை கிரிக்கெட் அணி

## மேற்கிந்தியத் தீவுகள் நோக்கி பயணமானது

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள இலங்கை அணியின் போட்டித் தொடருக்கான ஒருநாள், சர்வதேச ரி20 மற்றும் டெஸ்ட் போட்டிகளுக்கான குழாம்களை இலங்கை கிரிக்கெட் தெரிவுக் குழு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

மூன்று வடிவங்களையும் கொண்ட இந்த போட்டித் தொடரில், முதலாவதாக ஒருநாள் தொடரும், அதனைத் தொடர்ந்து ரி20 தொடரும், இறுதியாக டெஸ்ட் தொடரும் நடைபெறவுள்ளன.

இப்போட்டித் தொடரில் பங்கேற்பதற்காக இலங்கை கிரிக்கெட் அணி நேற்று (26) மேற்கிந்தியத் தீவுகள் நோக்கி நாட்டிலிருந்து புறப்படவுள்ளது.

இந்த சுற்றுப்பயணத்திற்கான ஒருநாள் மற்றும் ரி20 அணிகளின் தலைவராக அனுபவமிக்க வீரர் குசல் மெண்டிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேநேரம் டெஸ்ட் அணியின் தலைவராக தனஞ்சய டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ குழாம்கள் பின்வருமாறு:

**டெஸ்ட் குழாம்**

பெதும் நிஸ்ஸங்க, லஹிரு உதார, நிஷான் மதுஷ்க, தினேஷ் சந்திமால், பசிந்து சூரியபண்டார, கமிந்து மெண்டிஸ் – (உப தலைவர்), சொனால் தினூஷ, குசல் மெண்டிஸ், தனஞ்சய டி சில்வா – (தலைவர்), ிலான் ரத்நாயக்க, பிரபாத் ஜெயசூரிய, ரமேஷ் மெண்டிஸ், அசித்த பெர்னாண்டோ, விஷ்வ பெர்னாண்டோ, லஹிரு குமார, இசித்த விஜேசுந்தர, கசுன் ராஜித

**ஒருநாள் குழாம் (ODI)**

பெதும் நிஸ்ஸங்க, கமில் மிஷார, பவன் ரத்நாயக்க, குசல் மெண்டிஸ் – (தலைவர்), ஜனித் லியனகே, சரித் அசலங்க, கமிந்து மெண்டிஸ் – (உப தலைவர்), மிலான் ரத்நாயக்க, வனிந்து ஹசரங்க, துனித் வெல்லாலகே, மஹீஷ் தீக்ஷன, துஷ்மந்த சமீர, டில்ஷான் மதுஷங்க, எஷான் மாலிங்க, அசித்த பெர்னாண்டோ, பிரமோத் மதுஷான்

**ரி20 குழாம் (T20I)**

பெதும் நிஸ்ஸங்க, கமில் மிஷார, லசித் குஷரூஸ்புள்ளே, பவன் ரத்நாயக்க, குசல் மெண்டிஸ் – (தலைவர்), கமிந்து மெண்டிஸ் – (உப தலைவர்), தசுன் ஷானக்க, மிலான் ரத்நாயக்க, துனித் வெல்லாலகே, வனிந்து ஹசரங்க, மஹீஷ் தீக்ஷன, துஷ்மந்த சமீர, டில்ஷான் மதுஷங்க, எஷான் மாலிங்க, பினுர பெர்னாண்டோ, நுவன் துஷார

# "Mission Olympic" திட்டத்தில் இணைக்கப்பட்ட 21 ரக்பி வீர, வீராங்கனைகள்

கடந்த ஆண்டு உள்ளூர் மற்றும் சர்வதேச ரக்பி போட்டிகளில் வெளிப்படுத்திய திறமைகளை அங்கீகரிக்கும் வகையில், இலங்கை ரக்பியின் 'வுநைச 3' தேசிய வீரர் குழாத்திலிருந்து தேர்வு செய்யப்பட்ட 21 வீரர்கள் செவ்வாய்க்கிழமை (26) இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சில் நடைபெற்ற நிகழ்வில் அரசின் "Mission Olympic" திட்டத்தில் உத்தியோகபூர்வமாக இணைக்கப்பட்டனர்.

இந்த திட்டத்தின் கீழ், ஒவ்வொரு வீரருக்கும் மாதாந்திரமாக ஷரூ.135,000 கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மேலும், சமீபத்தில் Casa 7s போட்டியில் வெற்றி பெற்ற இலங்கை மகளிர் ரக்பி அணியின் 16 வீராங்கனைகளுக்கும் தலா ஒருமுறை வழங்கப்படும் ரூ.180,000 ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டது.

இந்த கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு, இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சர் சுனில் குமார கமகே தலைமையில் டன்கன் வைட் அரங்கில் நடைபெற்றது.

நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர், நிர்வாக மற்றும் சட்ட சிக்கல்கள் காரணமாக பின்னடைவை சந்தித்திருந்த இலங்கை ரக்பி தற்போது பெரிய மறுமலர்ச்சியை கண்டுள்ளதாக தெரிவித்தார். நீதிமன்ற வழக்குகள் தீர்வு காணப்பட்டதும், அமைச்சின் கீழ் தற்காலிக நிர்வாகம் அமைக்கப்பட்டதும், புதிய அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டதும் மற்றும் புதிய



நிர்வாகிகளைத் தேர்வு செய்ய தேர்தல்கள் நடத்தப்பட்டதும் இந்த முன்னேற்றத்திற்குக் காரணமாக இருந்ததாக அவர் கூறினார்.

இந்த சீர்திருத்தங்களின் மூலம் இலங்கை, ஆசிய ரக்பி தரவரிசையில் மூன்றாவது இடத்துக்கு முன்னேறியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், இதற்கு முன்பு தடகள விளையாட்டுகளுக்கு மட்டுமே வரையறுக்கப் பட்டிருந்த "Mission Olympic" திட்டத்தில் முதன்முறையாக ஒரு அணிவகை விளையாட்டு இணைக்கப்பட்டு ள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச அளவில் முன்னேற்ற வாய்ப்பு கொண்ட பிற அணிவகை விளையாட்டுகளுக்கும் எதிர்காலத்தில் இதுபோன்ற ஆதரவை வழங்க அரசு எதிர்பார்க்கிறது என்றும் தெரிவித்தார்.

தேசிய மட்ட வீரர்களுக்கு அரசாங்க வேலைவாய்ப்புகளை வழங்கும் புதிய திட்டத்திற்கு அமைச்சரவை ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளதாகவும், அதற்கான நிர்வாக நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.

இந்த நிகழ்வில் இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு, விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை ரக்பி கால்பந்து ஒன்றியம் மற்றும் தேசிய ரக்பி வீரர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# மென்செஸ்ட் யுனைடெடின் புதிய பயிற்றுவிப்பாளராக மிச்செல் கெரிக் நியமனம்



இங்கிலாந்தின் முன்னனி உதைப்பந்தாட்டக் கழகமாக மென்செஸ்டட் யுனைடெட் கழகத்தின் முன்னாள் வீரர் மிச்செல் கெரிக் அணியின் புதிய தலைமை பயிற்றுவிப்பாளரக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மென்செஸ்டட் யுனைடெட் ஆரம்ப காலங்களில் உலகின் எந்த ஒரு அணியாலும் இலகுவாக தோற்கடிக்க முடியாமல் காணப்பட்ட அணி அந்த சமயத்தில் அணியின் நடுப்பகுதியை (Midfielder) கட்டுப்படுத்திய வீரர் தான் இந்த கெரிக் பின்பு இந்த அணியினால் முன்பு போன்று பிரகாசிக்க முடியாமல் போனது நிர்வாகத்தால் பல பயிற்றுவிப் பாளர்களை மாற்றியும் பழைய அணியின் பொற்காலத்தை போன்று பிரகாசிக்க முடியவில்லை தற்போது அந்த அணியின் எதிர்காலத்தை வழிநடத்தும் பொறுப்பையும் வெற்றிகரமாக கெரிக் ஏற்றுள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் அப்போது தலைமை பயிற்றுவிப்பாளரான ரூபன் அமோரிம் நிர்வாகத்துடன் ஏற்பட்ட முறுகல் காரணமாக பதவியில் இருந்து விலகினார்.

அதன் பின்பு இடைக்கால பயிற்றுவிப்பாள ராகவே Carrick தெரிவு செய்யப்பட்டார்.

மிச்செல் கெரிக் தனது இளமையில் ஒரு சிறந்த வீரராக எவ்வாறு தன்னை உலகத்ததிற்கு காண்பித்தது போலவே, சிறந்த ஒரு பயிற்சியாளராகவும் தன்னை நிஷரூபித்தார் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துகளும் இல்லை. மென்செஸ்டட் யுனைடெட் அணிக்கு மிகுந்த குழப்பம் நிலவிய ஒரு பருவத்தில், தெளிவு, அமைதி மற்றும் நம்பிக்கையின் அடையாளமாக அவர் மாறியுள்ளார்.

முன்னாள் தலைமை பயிற்றுவிப்பாளர் ஷரூபன் அமோரிம் நீக்கப்பட்ட பின்னர் இடைக்கால மேலாளராக ஜனவரியில் பொறுப்பேற்ற கெரிக், வெறும் சில மாதங்களில் அணியை முழுமையாக மாற்றியமைத்தார்.

அப்போது தடுமாறிக் கொண்டிருந்த மென்செஸ்டட் யுனைடெட் அணி தற்போது பிரீமியர் லீக்கில் மூன்றாவது இடத்தை நோக்கி முன்னேறி, சம்பியன்ஸ் லீக் தகுதியையும் உறுதி செய்துள்ளது.




# லங்கா பிரீமியர் லீக் தொடருக்கு 650

## வெளிநாட்டு வீரர்கள் பதிவு

இவ்வருடம் நடைபெறவுள்ள லங்கா பிரீமியர் லீக் (LPL) 2026 கிரிக்கெட் தொடரின் 6ஆவது சீசனுக்கான வீரர் ஏலத்தில், 650க்கும் அதிகமான வெளிநாட்டு வீரர்கள் பதிவு செய்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அறிவித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் (ICC) முழு உறுப்பினர் நாடுகள் அனைத்திலிரு ந்தும், மேலும் சில இணை உறுப்பினர் நாடுகளிலிருந்தும் வீரர்கள் இந்தப் பதிவில் இணைந்துள்ளனர்.

எனினும், விசேட மதிப்பீட்டு செயல்முறை (Screening Process) ஒன்றின் பின்னர், இந்த மொத்த வீரர்களில் சுமார் 310 வீரர்கள் மட்டுமே ஜுன் 1ஆம் தேதி நடைபெறவுள்ள வீரர் வரைவுத் தேர்வுக்கு (Draft) தெரிவு செய்யப்பட வுள்ளதாகவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த முறை நடைபெறும் தொடருக்காக 21 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வீரர்கள் பதிவு செய்துள்ளனர்.

அவற்றில் அதிகளவிலான வீரர்கள் பதிவு செய்துள்ள முழு உறுப்பினர் நாடுகள் **பின்வருமாறு:**

பாகிஸ்தான் – 102 வீரர்கள்
மேற்கிந்தியத் தீவுகள் – 75 வீரர்கள்
தென்னாப்பிரிக்கா – 66 வீரர்கள்
பங்களாதேஷ் – 48 வீரர்கள்
நியூசிலாந்து – 41 வீரர்கள்
அவுஸ்திரேலியா – 24 வீரர்கள்
இங்கிலாந்து – 15 வீரர்கள்
இந்தியா – 12 வீரர்கள்

இதற்கு மேலாக, இணை உறுப்பினர் நாடுகளில், அமெரிக்கா (USA), ஐக்கிய அரபு அமீரகம் (UAE) மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்தும் குறிப்பிடத்தக்க அளவில் பதிவுகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் முன்னணி உள்நாட்டு இருபதுக்கு-20 கிரிக்கெட் தொடரான LPL 2026, எதிர்வரும் ஜுலை 17ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 08ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.